# அருகன் துதிமாலை

(இரண்டாம் தொகுதி)

தொகுப்பும் குறிப்புரையும்

பதிப்புச்செம்மல்

புலவர்மணி ழ. சண்முகம் பிள்ளை.

வெளியீடு:

ஆசாரியர் குந்த குந்தர் அச்சுப் பயிற்சி நிலையம்

குந்த குந்தர் நகர், வடவணக்கம்பாடி அஞ்சல் : 604 502.

# அருகன் துதிமாலை

(இரண்டாம் தொகுதி)

தொகுப்பும் குறிப்புரையும்

பதிப்புச்செம்மல்

புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை.

வெளியீடு :

ஆசாரியர் குந்த குந்தர் அச்சுப் பயிற்சி நிலையம்

குந்த குந்தர் நகர்

வடவணக்கம்பாடி அஞ்சல். 604 502.

| | | | |
|---|---|---|---|
| 1 | நூலின் பெயர் | : | அருகன் துதிமலை |
| 2 | மூல நூலாசிரியர் | : | — |
| 3 | மொழி | : | தமிழ் |
| 4 | பதிப்பு | : | முதல். |
| 5 | ஆண்டு | : | 1992. |
| 6 | அளவு | : | 45.5 X 58.5 Cm. |
| 7 | எழுத்துகள் | : | 10, 12, 14 Pts. |
| 8 | பக்கம் | : | X + 144. |
| 9 | படிகள் | : | 200 |
| 10 | அச்சகம் | : | ஆசாரியர் குந்த குந்தர் அச்சுப்பயிற்சி நிலையம். |
| 11 | வெளியீடு | : | ,, |
| 12 | பொருள் | : | சமயம் - ஜைனம். |
| 13 | விலை | : | 15- 00 |

## ஆசாரியர் குந்த குந்தர் கல்வி நிறுவனம் ஆற்றும் தொண்டுகள்

ஸ்ரீ ஆசாரியர் குந்த குந்தரின் தபோ பூமியாகிய நீலகிரி அடிவாரத்தில் அமைதியான இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது ஆசாரியர் குந்த குந்தர் கல்வி நிறுவனம். 1981 ஆம் ஆண்டு அது தொடங்கப்பட்டது. சமய/சமுதாய அரும்பணிகளை அது இடையறாது ஆற்றி வருகின்றது.

### 1 குருகுலம்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வசதியற்ற தகுதியுள்ள இளம் சிறார்களைத் தேர்ந்தெடுத்து பண்டைய புகழ்மிக்க குருகுல முறையில் கல்வி கற்பிக்கப் படுகின்றது. தற்கால வாழ்க்கைக்குத் தேவையான கல்வி யுடன், நமது தர்மத்தை உணர்த்த வேண்டும் என்ற நோக்கில் சமய கல்வியும் தரப்படுகின்றது. மாணவர்கள் குருகுலத்திலேயே தங்கி அனைத்து வசதிகளுடன் எத் தகைய செலவும் இல்லாமல் பயின்று வருகின்றனர். தேவையான தகுதி பெற்ற ஆசிரியர்கள் பொறுப்பில் உள்ளனர். உணவு, உடை, புத்தகம், மருத்துவம் மற்ற அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. எட்டு, பத்து வகுப்புகளுக்கான அரசாங்கத் தேர்வில் மாணவர்கள் கலந்து கொண்டு அரசாங்கச் சான்றிதழ்களைப் பெறு கின்றனர்.

இன்றைய உலகச் சூழ்நிலையில் கற்கும் மாணவர் களுக்கு நேரக் கூடிய எத்தகைய இடர்ப்பாடுகளோ கெட்ட பழக்க வழக்கங்களோ குருகுல மாணவர்களை நெருங்க இயலாது. குருகுலம் நன் முறையில் இயங்கி வருவதற்குக் காரணம் நிறுவனத்தின் நிர்வாகம் மட்டு மல்ல. நல்ல உள்ளம் படைத்த நல்லோர்கள் மனமார அளித்து வரும் ஆதரவும் உதவிகளும் தான் கல்வி நிறு வனத்தின் அரும் பணிகளுக்கு அடிப்படை என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## 2 சுவடிகள் காப்பகம்

நமது ஆன்றோர்களால் ஆக்கி அளிக்கப்பட்ட ஆன்மீய கருத்துக்கள் நிறைந்த கருவூலங்களான ஓலைச் சுவடிகள் தமிழகத்தின் ஒவ்வொரு சமணர்தம் இல்லங்களிலும் போதிய கவனிப்பும் பாதுகாப்புமின்றி பயன் படுத்தப் படாமல் சீர்குன்றி வரும் நிலையினை அனைவரும் அறிவர். எனவே அந்த அரிய பொக்கிஷங்களைப் போற்றிப் பாதுகாக்கும் பணியினைக் கல்வி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அவை எவ்வாறு சேகரிக்கப்பட்டு தூய்மை செய்யப்பட்டு பல ஆண்டுகளுக்கு நின்று பயன் தரும் வகையில் போற்றப்படுகின்றது என்பதைக் கல்வி நிறுவனத்திற்கு நேரில் வருகின்றவர்கள் அறிவார்கள். சுவடிகளைத் தூய்மை செய்வதில் தகுதி படைத்த பொறுப் புள்ளவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். மிக்க செலவில் விஞ்ஞான முறையில் அவை பாதுகாப்பைப் பெறுகின்றன. தனியார் மற்றும் கோயில் பொறுப்பில் உள்ள சுவடிகளை யும் வரவழைத்துத் தூய்மை செய்து எண்ணெய் பூசி சுருத பாவாடை கட்டித் திருப்பித் தருகிறோம். அதோடு நூலின் பெயர், எழுதியவர் பெயர் முதலான தகவல்களை அட்டவணை செய்து தருகிறோம். இதுவரை 1000 சுவடி கள் அப்படிச் செய்யப் பட்டுள்ளன. இது இலவசமாகவே செய்யப் படுகிறது. இந்த அரும்பணி தொடர்ந்து நடைபெறும்.

## 3 நூலகம்

மக்களின் அனைத்து வளர்ச்சிகளுக்கும் இன்றியமையா அருந்துணையாக அமைவது நூலகம் என்பதில் எள்ளளவும் கருத்து வேற்றுமை இல்லை, அதிலும் எத்தகைய நூல்கள் பயன் தரத்தக்கவை என் பதைத் தேர்ந்தெடுத்து அவற்றைச் சேகரித்து அனைவரும் பயன்படுத்தும் வகையில் அரியதோர் நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நூல்கள் பெறப்பட்டு நூலகத்தைப் பெரிதாக்கும் பணியும் நடைபெற்று

வருகின்றது. ஆன்றோர்கள் பலரும் நூல்களாகவும் பணமாகவும் நன்கொடையாக வழங்கி இப்பணியினை ஊக்குவித்து வருகின்றனர்.

4 அச்சகம்

நமது சமய அறத்தினைத் தொடர்ந்து பரப்ப வேண்டும் என்ற நோக்கில் அச்சகம் ஒன்று இயங்கி வருகின்றது. பன்மொழி வல்லுநர்களால் மொழி பெயர்க்கப்படும் நூல்களையும், ஆன்றோர்களுடைய அறக் கருத்துக்களையும் நூல்கள் வாயிலாக வெளியிட வேண்டும் என்ற நோக்கத்திற்கு அச்சகம் உறுதுணையாக உள்ளது. மேலும் திங்கள் தோறும் வெளிவரும் 'அருகன் தத்துவம்' என்னும் இதழும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளியாகும் AKKEF NEWS என்னும் ஆங்கிலச் செய்தி இதழும் தொடர்ந்து வெளிவருவதற்கும் 'குந்த குந்தர் அச்சுப் பயிற்சி நிலையம்' என்னும் பெயரில் இயங்கும் இந்த அச்சகம் பெரிதும் பயன்படுகிறது. அச்சுக்கோர்ப்பு பயிலும் ஆர்வமுள்ளவர்கள் இங்குப் பயிற்சிப் பெறுவதற்கு வேண்டிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

5 தொழிற்கல்வி

கல்வி நிறுவனம் தற்கால வாழ்க்கை வளத்திற்குத் தேவைப்படும் கலைகளைப் பற்றி நன்கு உணர்ந்துள்ளதால் தொழிற் பயிற்சி நிலையம் (I. T. I.) ஒன்றினையும் நடத்தி வருகின்றது. 'குந்த குந்தர் தொழிற் பயிற்சி நிலையம்' என்ற பெயரில் 1987 ஆம் ஆண்டு முதல் இந்த நிலையம் செயல் பட்டு வருகின்றது. மூன்று தொழில்கள் (மோட்டார் மெக்கானிக், பிட்டர், அச்சுப் பயிற்சி) பயிற்றுவிக்கப்படுகின்றன. இது வரை சுமார் பத்து லட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. இந்தத் தொழிற் பயிற்சி நிலையம் அமைவதற்குப் பேருதவி செய்த அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்கின்றோம். குறிப்பாக திகம்பர சமுதாயத்தின் தலைவர் பத்மபூஷணம் சாகு ஸ்ரீஸ்ரேயான்ஸ் பிரஸாத் ஜெயின், பாரதவர்ஷிய தீர்த்தக்ஷேத்திர கமிட்டித்

தலைவரும் டைம்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்தின் (Times Research Foundation) தலைவருமான திரு. சாகு அசோக் குமார் ஜைன் திரு. சரத்குமார் (D. C. W.) முதலானோர் உதவி மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். தமிழகத்திலும் உயர் நோக்கும் வள்ளல் தன்மையும் நிறைந்த பெரியோர்கள் பலரும் பேருதவி புரிந்துள்ளனர். மேலும் மேலும் இத்தொழிற் பயிற்சி நிலையம் வளர்ந்து செழிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் அனைவரது ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.

நமது சமயத்தவர் மட்டுமின்றி மற்றவர்களும் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் தகுதி படைத்த மாணவர்கள் தொழிற் பயிற்சி நிலையத்தில் தடையின்றி சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

### 6 குழந்தைகள் பள்ளி

கிராமப்பகுதியில் வாழ்வோருடைய குழந்தைகளுக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும் எனும் நோக்கத்துடன் குழந்தைகள் பள்ளி (Kinder garten) தொடங்கப் பட்டுள்ளது. குழந்தைகளை அழைத்து வர ஊர்தி ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இதனைப் பள்ளி உயர் கல்வி நிலை (Matriculation) வரை வளர்க்கும் நோக்கம் உள்ளது.

### 7 நூல் வெளியீடு

அச்சாகாத ஆகம நூல்களை அச்சிடுதலும், ஆகமங்களை மொழி பெயர்த்து வெளியிடுதலும் நூல் வெளியீட்டு திட்டத்தின் குறிக்கோளாகும். சாஸ்திர தானத்தில் ஆர்முள்ள அன்பர்கள் வழங்கும் நன்கொடைகளைக் கொண்டு நூல்கள் அச்சிடப்பட்டு குறைந்த விலையில் அவை விற்கப் படுகின்றன.

நூல் வெளியிடும் தொண்டில் பரவலான அன்பர்கள் பங்கு பெறும் வகையில் இந்த ஆண்டு புதிய திட்டத்தினை நிறுவனம் அறிமுகப் படுத்துகிறது. இத் திட்டத்

தின்படி சாஸ்திர தானத்தில் ஆர்வமுள்ளவர்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் ரூ. 251/- வீதம் நன்கொடை வழங்க வேண்டும். இத் திட்டத்தில் பங்கு பெறுவோர் பெயர்கள் விவரம் அச்சிடப் படும் ஒவ்வொரு நூலிலும் அறிவிக்கப்படும். அச்சிடப்படும் நூல்களின் இரண்டு படிகள் ஒவ்வொரு நன்கொடை யாளருக்கும் வழங்கப்படும்.

### 8 அஞ்சல் வழிக் கல்வி

வளர்ந்து வரும் இளைய தலை முறையினருக்குத் தத்துவ கருத்துகளைக் கற்பிக்கும் நோக்கத்துடன் அஞ்சல் வழித் திட்டத்தினை 1991- ம் ஆண்டில் நிறுவனம் அறிமுகப் படுத்தியது. நான்கு அநுயோகங்கள் அடிப்படையில் பாடங்கள் தயாரிக்கப் பெற்று ஆர்வலர் களுக்கு அனுப்பப்படுகின்றன. முதல் ஆண்டு நிலைக்கு 'துந்துபி' என்றும் இரண்டாம் ஆண்டு நிலைக்கு 'புஷ்ப வ்ருஷ்டி' என்றும் பெயரிடப் பட்டுள்ளன.

இத் திட்டம் நன்முறையில் நடைபெற வேண்டும் எனும் பேரவாவுடன் திருவாளர்கள் முறையே கொரக் கோட்டை திரு. சுகுமாரன் ரூ. 5000/- திரு C. S. P. ஜைன் 1000/- திரு. கஸ்தூரி தரணிகுமார் 1000/- நன்கொடை வழங்கித் திட்டம் செயல் வடிவம் பெற உதவி செய்தனர் என்பதனை அன்புடன் நினைவு கூர்கிறோம்.

### 9 அறத் தொண்டுகள்

இது அல்லாது, புகழ்பெற்ற ஆசாரியர் குந்த குந்தர் திருவடிகளுக்கு நாள்தோறும் பூஜை நடைபெறும் திட்டத் தினையும் நிறுவனம் நடத்தி வருகிறது. அறத் தொண் டில் ஆர்வம் உள்ள அன்பர்களிடம் ரூ. 101/- நன்கொடை யாகப் பெறப்பட்டு அதன் வட்டியிலிருந்து அவர்கள் குறிப் பிடும் நாளில் அவர்கள் பெயரில் பூஜை செய்யப்படுகிறது. 363 ஆண்டு முழுதும் பூஜை நடைபெற குறைந்தது

அன்பர்களை இத் திட்டத்தில் இணைக்க முயற்சி நடை பெறுகிறது.

குருகுல முறையில் கற்கும் மாணவர்களுக்கும், ஆர்வமுள்ள மற்றவர்களுக்கும் நாள்தோறும் காலை நேரத்தில் தொடர்ந்து ஒரு மணி நேரம் அறவுரை ஆற்றப் படுகின்றது. பயன் தரும் முறையிலும், கேட்போர் ஆற்றலுக்கேற்பவும், எடுத்துக் கொண்ட நூல் முழுமையாக முடியும் வகையிலும் எளிய முறையில் இந்த அறவுரை நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது. எத்தகைய இடர்ப் பாடுகள் சூழினும் இப்பணி தடைபட்டதில்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பம்பாய் பாரத வர்ஷிய திகம்பர தீர்த்த க்ஷேத்ர கமிட்டி உலாவிட்ட ரத யாத்ரையை தமிழகத்தில் 8-3-92 முதல் 22-3-92 வரை உலாவரச் செய்து தமிழகப் பெரு மக்கள் தீர்த்த க்ஷேத்ர படிவங்களைக் கண்டு தரிசிக்க ஏற்பாடு செய்தது.

ஆசாரியர் குந்த குந்தர் கல்வி நிறுவனம் தன் பதி னோராம் ஆண்டு விழாவினை மிகச் சிறப்பாக 29-3-92 அன்று கொண்டாடியது. விழாவுக்கு மேதகு ஆளுநர் திருமிகு பீஷ்ம நாராயணசிங், மாவட்ட ஆட்சியர் திரு C. S. ராஜ்மோஹன், திரு. சாஹுஷரத் குமார் (DCW) வருகை தந்து சிறப்புச் செய்தனர். இவ் விழாவுடன் ரதத்தை வழி அனுப்பு விழாவும் மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் இவ் விழாவில் பங்கு கொண்டனர்.

இப்படிச் சமய/சமுதாய பணிகள் பலவற்றைச் செய்து வரும் நிறுவனத் தொண்டில் பங்கு பெற விரும்பும் அன்பர் களை அன்புடன் வரவேற்கிறோம். செயலால், செல்வத் தால், சொல்லால் தக்கவாறு பயன் தருக; புண்ணிய பயன் பெறுக!

(முதல் தொகுதியின்)

## பதிப்புரை

நம் பாரத நாட்டில் பிறந்த சமயங்களுள் அருக சமயமும் ஒன்று; இது மிகவும் பழமையானது. நம் தமிழ்நாட்டில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே இச்சமயம் வேரூன்றியிருந்த செய்தி வரலாற்றுச் சான்றுகளால் தெளிவாகிறது. சமய போதனைகளுடன் தமிழ் மொழிக்கு இச்சமயத்தார் படைத்துள்ள இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலிய நூற் செல்வங்கள் பலவாம். சங்க இலக்கியம் தொட்டே இலக்கியங்கள் முதலியவற்றில் அருகக் கடவுளைப் பற்றிய செய்திகள் பலவாகக் காணப்படுகின்றன. திருக்குறள் நாலடியார் முதலிய அறநூல்களும், பெருங்கதை, சீவக சிந்தாமணி, சூளாமணி முதலிய பெருங்காவியங்களும், யசோதரகாவியம், நாககுமார காவியம் முதலிய சிறு காவியங்களும், நேமிநாதம், நன்னூல் முதலிய இலக்கணங்களும், திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டுகளும் சமண சமயச் சான்றோர்களால் தமிழுக்குத் தரப்பட்டன.

மேலே சுட்டிய நூல்களில் எல்லாம் அங்கங்கே அருகன் துதி மலர்கள் காணப்படுகின்றன. பின்னாளில் பல சிற்றிலக்கியங்களும் அருகன் புகழைப் பேசுகின்றன. திருநூற்றந்தாதி, திருக்கலம்பகம், திருப்பாமாலை, ஜிநேந்திர ஞானத் திருப்புகழ் முதலியவை தோத்திர நூல்களாகும். அப்பாண்டைநாதர் உலா, அடிமதிக்குடி ஐயனார் பிள்ளைத் தமிழ், மேருமந்திரமாலை, ஜீவேந்திர சரிதம், பார்சுவநாதர் அம்மானை போன்ற சிற்றிலக்கியங்களிலும் துதிப் பகுதிகள் உள. திருநறுங் கொண்டைப் பத்துப் பதிகம், தீபங்குடிப்பதிகம் போன்ற பதிகப் பாமாலைகளும் உள; யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை முதலிய நூல்களின் உரைகளிலே உரையாசிரியர் எடுத்துக் காட்டாகத் தந்துள்ள பாடல்கள் பலவும் அருகன் துதிகளே.

இவ்வாறாகத் தமிழ் நூற்பரப்பில் மிளிரும் அருகன் துதிகளை எல்லாம் ஒருங்கு திரட்டின் காலந்தோறும் வந்த துதிப்பாடல்களின் போக்கினை நாம் நன்கு உணர்தல் கூடும். நாள்தோறும் பாராயணம் செய்யவும் உறுதுணையாயிக்கும். இம் முயற்சியின் முதல் தொடக்கமே இந்தத் துதிமாலை. இதில் சீவக சிந்தாமணிப் பெருங் காவியத்தில் திருத்தக்க தேவர் தந்துள்ள துதிப்பாக்கள் திரட்டித்தரப்பட்டுள்ளன, இவை பொருள் அடிப்படையிலும் பாமுறை ஒப்புமையிலும் பாகுபடுத்தி அமைக்கப்பட்டுள்ளன. இப் பாடல்களின் பொருளை விளங்கிக் கொள்வதற்குத் துணையாகக் குறிப்புரையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து ஏனைய நூல்களில் காணும் துதிமாலைகளும் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

மு. சண்முகம் பிள்ளை.

முற்றும் உணர்ந்தான் திருத்தாள் போற்றி

# அருகன் துதிமாலை

## திருநூற்றந்தாதி

(அவிரோதியாழ்வார் அருளியது)

### நேமிநாதர் துதி

**மறமே முனிந்து மயிலா புரிநின்று, மன்உயிர்கட்கு**
**அறமே பொழியும் அருட்கொண்டலே அதரம்சிவந்த**
**நிறமே கரிய ஒண்மாணிக்கமே!-நெடுநாள்ஒளித்துப்**
**புறமே திரிந்த பிழையடியேனைப் பொறுத்து அருளே.**

---

குறிப்புரை

நேமிநாதர் துதி:

மயிலாபுரி-மயிலை, மயிலாப்பூர் என வழங்கும் ஊர். சென்னையில் ஒரு பகுதியாகிய இந்த ஊரில் நேமிநாதர் திருக்கோயில் விளங்கியது. இக்கோயில் பின்னாளில் கடலால் கொள்ளப்பட்டு மூழ்கியது என்பர். மறம்-பாவம்; முனிந்து-கடிந்து போக்கி; மன்-நிலை பெற்றுள்ள; அறமேபொழியும்-நல்ல நெறிகளையுடைய வேதம் தலிய நூல்களை உபதேசித்தருளும்; அருட்கொண்டல்-அருளாகிய நீர் நிரம்பிய மேகம்; அதரம்-உதடு; ஒண்-ஒளிபொருந்திய; மாணிக்கமே-மாணிக்க மணியே; நெடுநாள்-பலநாள்கள்; ஒளித்து-நின்னிடம் வாராது மறைந்து வாழ்ந்து; புறமே திரிந்த-வேறுபட்ட வழிகளிலே சென்று கொண்டிருந்த; பிழையடியேனை-குற்றம் இழைத்த அடியேனாகிய என்னை; பொறுத்தருள்-பொறுத்து ஆட்கொள்வாயாக.

'ஒழித்து' என்றும் பாடம்; இதற்கு வீணாகப் போக்கி எனப்பொருள் உரைப்பர்.

## அந்தாதி மாலை

பூக்கொண்டு பொன்னுலகம் கொடுப்பானை–புலவர்செஞ்சொற்
பாக்கொண்டு முத்திபணிக்க வல்லானை-பைங்கோகிலங்கள்
கூக்கொண்டுசேரும் குளிர் பிண்டியானை–குணம்புகழ்வான்
மாக்கொண்டல் விழ்துளிஎண்ண, என்பேய்
மனம்மால்கொண்டதே 1

கொண்டல் கண்டீர்கொடை, குன்றுகண்டீர்புயம்
[என்றுகொண்டே
தொண்டர்கண் டாரைஎல்லாம் துதியாவண்ணம், தொல்உலகில்
பண்டு கண்டே அறியாப்பொருள்ஈய, என் பாக்கியத்தால்,
கண்டு கொண்டேன் பிண்டிநிழலின் கீழ்ஒரு கற்பகமே. 2

கற்பகமே! கருணைக் கடலே! கடல்போற்குணத்துஎம்
பற்பதமே! பகடிப்பகைவா! பரவைப் புனல்மேல்

---

1. பூ-அருச்சனை செய்கின்ற மலர்; பொன்னுலகம்-தேவலோகம்; முக்தி-சித்தி; பைங்கோகிலங்கள்-அழகிய குயில்கள்; கூ-கூவுதல்; பிண்டி-அசோகமரம்; மாக்கொண்டல்-பெரியமேகம்; மால்கொண்டது-ஆசைப்பட்டது. மேகத்தின் துளிகளை எண்ணி முடிவுகட்ட இயலாததுபோல சுவாமியின் குணங்களும் வரையறைப்படுத்தக்கூடா என்பதாம்.

2. கொடை-ஈகை; கண்டீர்-தேற்றப் பொருளில்வந்த இடைச்சொல்; குன்று-மலை; புயம்-தோள்; தொண்டர்-அடிமையானவர்; துதித்தல்-புகழ்ந்து சொல்லுதல்; தொல்-பழமை; ஈதல்-தருதல்; பொருள்-இங்கே மோட்சம்; பாக்கியம்-புண்ணியம்.

3. பற்பதம்-பருவதம், மலை; பகடி-எண்வகை வினை; அவை யாவன: ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம் அந்தராயம் என்பன. பரவை-பரப்பு; புனல்-நீர்;

புற்புதமே அன்னபொய்க்குடி வாழ்க்கையைப் போகவிட்டு,உன்
நற்பதமே அடைந்தேன், சுமந்துஏகு நளினம்ஒத்தே. 3

ஒத்துஅகலாமதி ஒன்றிரண்டு ஒக்கும்ஒண் பொற்குடைகீழ்
அத்த!கல்யாணம் ஒர்ஐந்துஉடையாய்!-அடியோ மினும்மெய்ப்
பித்தர்களாய் உனைப்பற்றி நின்றேவினைப் பற்றுஅறுக்கும்
எத்தர்க ளோபெறுவார்-இறைவா! நினது இன்னருளே. 4

அருளோடு எழும் அறவாழி அப்பா! பிறவாழியிற்பாய்
இருள்ஒவிய கரைஏற உய்ப்பாய்! இந்தியங்கள்என்னும்
மருளோடுஉழலும் மனத்துஎன்னை ஆட்கொண்ட
[மற்றுஉனக்குப்
பொருளோ, புவனங்கள்மூன்றையும் ஆட்கொள்கை?
புண்ணியனே! 5

---

புற்பதம்-குமிழி; பொய்க்குடி வாழ்க்கை-நிலையாமை குடி கொண்டிருக்கிற இம்மைச் செல்வம், போகவிட்டு-முழுதும் கைவிட்டு; நளினம்-தாமரைப்பூ, 'பொய்க்குடில் வாழ்க்கை' என்றும் பாடம்; பொய்க்குடில்-நிலையில்லாத உடம்பு.

4. மதி-பூர்ணசந்திரன்; ஒன்றிரண்டு-மூன்று; ஒண்மை-அழகு, ஒளி; அத்த-சுவாமியே, விளி: கல்யாணம் ஓர் ஐந்து-பஞ்ச கல்யாணம்: சொர்க்காவதரணம் மந்திராபிடேகம், மகாப்பிரஸ்தானம், கேவலோத்பத்தி, பரிநிர்வாணம்; அறுக்கும்-கெடுக்கும்; எத்தர்-வீரகர்; எத்தர்களோ-ஓகாரம் பிரிநிலை; நினது அருள் யாமும் பெற வேண்டாவோ என்பதாம்.

5. பிறவாழி-அறத்திற்குப் பிறவான பொருளும் இன்பமும் ஆன கடல்; இருள் ஓவிய கரை-மயக்கம் ஒழித்த கரை, எனவே வீடு ஆயிற்று; இந்திரியம்-இந்தியம், ஐம்புலன்கள்; மருள்-மயக்கம்; ஆட்கொள்ளல்-அடிமையாகக் கொள்ளல்; மற்று-அசை; புவனங்கள்-உலகங்கள்.

புண்ணியம் ஆனசெம்பொன் தளைபோலப்
[பொல்லாவினையால்
பண்ணிய பாரஇருப்புத்தளை பரிந்துஏற உய்த்தல்
கண்ணிய வெங்கதிர்க் காந்தம்கண்டர்-கதிர்மாமதிபோல்
தண்ணியவான்குடை மூன்றுஉடையான் அடித் தாமரையே. 6

தாமரையே எத்தவங்கள் செய்தாய்-சகம் மூன்றினுக்கும்
தாம் அரைசேஎன்று சாற்றுவபோலும் முச்சத்திரத்துத்
தாமரை சேர்திருவைத் திருமார்பில் தரித்தவர்செந்
தாமரை ஏய் சரணம் தலைமேற் கொண்டு தாங்குதற்கே! 7

தாங்கு வளைக்கரச்சக்கரர் வாழ்வொடு அத்தாமரைமேல்
பூங்குவளைக் கண்ணினாளொடு புல்-உடன் போர்த்தகொண்மூ
நீங்கு வளைத்திகழ் நீள்சுடர்போல் வினைநீங்கலும் புக்
காங்கு வளைத்த வெம்மூவொளியான் மெய் அடியவர்க்கே 8

---

6. பொல்லாவினை-தீயவினை; தளை-விலங்கு; பரிதல்-அறுத்தல்; ஏற உய்த்தல்-வீட்டுநெறி செலுத்துதல்; கதிர்-ஒளி; வான் குடை-சிறந்த முக்குடை; கண்ணல்-கருதுதல்; கதிர் காந்தம்-ஒளி படைத்த காந்தம்; இரும்பைப் பற்றும் தன்மையது. பாவத்தை இரும்புத் தளையாகவும் புண்ணியத்தைப் பொன்தளையாகவும் கூறினார்.

7. எத்தவம்-என்ன புண்ணியம்; சகம்-உலகம்; சாற்றுதல்-சொல்லுதல்; சத்திரம்-குடை; திரு-முத்தித்திரு; சரணம்-திருவடி; தாமரையே பெருமான் திருவடியைத் தாங்குவதற்கு என்ன புண்ணியம் செய்தாய் என்று வியந்தபடி.

8. சக்கரர்-சக்கரவர்த்திகள்; தாமரை மேற் பூங்குவளைக் கண்ணினாள்-திருமகள்; திருமகளால் வரும் செல்வம்; புல்-புல்போல அற்பமாகும்; கொண்மூ-மேகம்; சுடர்-சூரியன்; வினை-எண்வகை வினை; வெம்மை-விருப்பம்; மூவொளி-ஒளிவட்டம் மூன்று; மெய் அடியார்-உண்மைத் தொண்டர்; நினது அடியார் செல்வத்தை மதியார் என்பாம்.

**அடியேன் அறிவநற்கு-அழகியவாதவம்!-ஆடகம்ஆம்**
**கோடிசேர் நிரைமதில் கோபுரக்கோயில் குற்றேவல்செய்ய**
**முடிசேர் அமரர்கள் மொய்த்துஎங்கும்நிற்பர்; சொர்க்கம்**
**[குனிப்பார்**
**தொடிசேர் புயத்துச் சுரேந்திரர்சேர் பணைத்தோளியரே. 9**

**தோளா மரச்செவித் தூராவயிற்றுச் சுமடர்க்குஎல்லாம்**
**வாளாவிருக்க வரம்தருமோ-வஞ்சம்அற்ற நெஞ்சொடு**
**ஆளானவர்க்கு அல்லது ஆயிரம்கண் அமரேந்திரர்க்கும்**
**கேளா முதற்பொருள் கேட்டார்க்குஉரைக்கும்**
**[எம்கேவலியே. 10**

---

9 அறிவன்-இறைவனாகிய சுவாமி; ஆடகம்-பொன்; குற்றேவல்-சிறிய ஏவிய பணிகள்; அமரர்-தேவர்; மொய்த்தல்-நெருங்குதல்; சொர்க்கம்-கூத்துவகை; குனித்தல்-ஆடுதல்; தொடி-வாகுவலயம்; சுரேந்திரர்-தேவேந்திரர்; பணை-மூங்கில்; தோளியர்-தோள்களையுடையவர்.

10 தோளாமரச்செவி-துளை யிடப்படாத மரம் போன்ற காது; தோளல்-துளையிடல்; தூர்தல்-நிறைதல்; சுமடர்-மூடர்; வாளா விருத்தல்-சும்மாவிருத்தல்; கேளா முதற்பொருள்-ஒருவருக்கும் கேளாத ஜீவாதி பதார்த்தம், அவை ஜீவ, அஜீவ, புண்ணிய, பாப, ஆச்ரவ, பந்த, ஸம்வர, நிர்ஜர மோக்ஷம் என்னும் நவ பதார்த்தம்; கேட்டார்-கேள்தார்-சுற்றத்தின் ஒழுங்கு; எனவே பன்னிருகணம் என்பது பெறப்படும்; அவை ரிஷிகள், தேவஸ்திரீ, ஆரியாங்கனைகள், ஜோதிஷ்க ஸ்திரீகள், வியந்தர ஸ்திரீகள், பவனஜ ஸ்திரீகள், பவனவாசிகள், வியந்தரர், ஜோதிஷ்கர், கல்பவாசியர், சக்கரவர்த்தி முதலிய நரவரர்கள், திரியக்வர்க்கம் என்பன: கேவலி-கேவல ஞானியான சுவாமி; கேவல ஞானம்-திரிகாலவுணர்ச்சி.

கேவலம் உற்பத்தியாம் அளவே கிளர்பூசனைக்குஎன்று
ஏவல் இயற்றும்அவ் இந்திரனுக்குமுன் எண்குணத்துஎம்
காவலனைக் கவிப்பார் வளைப்பார் முளைப்பார்களைப்போல்
மூவுலகத்து உள்ள நால்வகைத்தேவரும் முன்னுவரே. 11

முன்னை என்வல்வினைபோக்கி, முக்குற்றத்தைநீக்கி, முத்தி
பின்னையும் நல்க அமையும்-பெரும!-பிறப்பு அறுத்த
உன்னையும் என்னையும்அன்றி மற்றுஒன்றும்உள்ளாமல்,
[உள்ளம்
தன்னையும், நின் அருள்போல், வசமாக்கித் தரப்பெறினே. 12

பெறுவது மூவுலகுஆளும்பெருமை; அருமை பொய்ம்மை
தெறுவது; நாதனைச்சிந்திப்பது; சிறுமுள்ளி மொய்க்கும்
அறுபதம் ஆம்என, ஐம்புலன்மேல்விழுந்து, ஆவதங்கட்கு
உறுவதும் ஏதும்உறாததும் பேதைகள் ஓர்கிலரே. 13

ஓர்கின்றிலை; உனையோனிகள்தோறும்; பல்ஊழி உய்த்தும்,
ஆர்கின்றிலை, இன்னும் ஆசை;-நெஞ்சே!-இனி அந்தகனார்

---

11 கேவலம்-கேவல ஞானம்: உற்பத்தி-தோன்றுகை; பூசனை-பூசை; இந்திரன்-சௌதர்மேந்திரன், முளைப்பார்-தோன்றுபவர்; நால் வகைத் தேவர்-பவணர், வியந்தரர், சோதிடர், கற்பவாசியர்; முன்னல்-கருதுதல், மூவுலகும் ஏவல் செய்யக் கருதுதலாலே இவனது தவ மகிமை இருந்தவாறு என் என்பதாம்.

12 முன்னை-பழமை; முக்குற்றம்-காமம், வெகுளி, மயக்கம்; உள்ளல்-நினைத்தல்; உள்ளம்-நெஞ்சு; அமையும்-போதும், பொருந்தும்.

13 தெறுவது-நீக்குவது, ஒழிப்பது; சிந்தித்தல்-நினைத்தல்; முள்ளி-முள்ளிப்பூ; மொய்த்தல்-சூழ்ந்து பற்றுதல்; அறுபதம்-வண்டு; வீழ்தல்-விருப்பம்; உறுவது-அடைவது, இலாபம்.

14 ஓர்கின்றிலை-அறிகின்றிலை; யோனி-பிறப்பு; தேவர், மக்கள், நரகர், விலங்கு என்னும் நால்வகைப் பிறப்பு; பல்ஊழி-நெடுங்காலம்;

சார்கின்றபோது, உனக்குச்சரண் ஆர்? சொல்லும்-
[தாமரைப்போது
ஊர்கின்ற பாதர் அல்லால் உரியார்மற்று ஒருத்தரையே. 14

ஒருத்தரும் மத்தர்கள்போல் உணரார், உயிர்ஓம்பும் எங்கள்
திருத்தருமத்தர் அல்லாச் சிறுமானிடர்;-சேர்ந்தவர்க்குத்
தருத் தருமத்தரையோடு விண்ணோர்பதம்தந்து, பின்னும்
அருத் தருமத்தரை ஆதிபட்டாரகர் ஆம்பரிசே. 15

பரித்த மலர்ப்பதத்தார் உருக்கொண்டு, பைந்தோலும்நஞ்சும்
உரித்துஉமிழ் சற்பம்எனத்துறவார், தொண்டர் ஓங்குஉலகை
அரித்தும் அளித்தும்அழிப்பவர் ஆத்தர் என்று ஆபரணம்
தரித்தும் முடித்தும்தவம் செய்குவார்ஒத்து
[அவம்செய்வரே. 16

---

ஆர்தல்-நிறைதல்; அந்தகனார்-யமன்; சார்தல்-அடுத்தல்; சரண்-
துணை; சொல்லும்-சொல்வாய்; போது-மலர்; ஊர்தல்-நடத்தல்;
ஒருத்தர்-ஒருவர்.

15 மத்தர்-உன்மத்தர்; ஓம்புதல்-காத்தல்; திருத்தருமத்தர்-ஜிநதரு
மத்துள்ளார்; சேர்ந்தவர்-அடைந்தவர்; தரு-கற்பக மரம்; தருமத்
தரை-நரேந்திரபதம்; பதம்-பதவி, செல்வம்; அருத்தருமத்தர்-சித்த
பதத்தினர்; ஆதிபட்டாரகர்-முதல் கருத்தா; பரிசு-முறைமை, பேறு.

16 பரித்தல்-தாங்குதல்; மலர்ப் பரித்த பதத்தார்உரு-ஜிநவேஷம்;
பைந்தோல்-பசுமையான மேல் தோல்; நஞ்சு-விடம்; உமிழ்தல்-
கக்குதல்; சற்பம்-பாம்பு; பாம்பு தோலை உரித்து நஞ்சை உமிழ்வது
போல புறப்பற்றும் உட்பற்றும் விட்டுத் துறத்தல் வேண்டும் என்
பதாம். தொண்டர்-அடியார்; அரித்தல்-படைத்தல்; ஆத்தர்-
அத்தர், தலைவர்; முடித்தல்-ஆடைகளை உடுத்தல்; அவம்-தவ
மல்லாத வீணான செயல். 'உடுத்தும் என்றதனாலே ஆடை வரு
வித்தாம்' என்னும் புழைய வுரையால் 'முடித்தும்' என்பதற்கு 'உடுத்
துய' என்னும் பாடபேதமும் உண்டு என அறியலாம். "பற்றற்றே
வினை நீங்க வேணடும் ஆதலாலே பற்றோடு கூடிய தவம் தவமல்ல
எனப் பாசண்டமூடம் விலக்கியதாம்" என்பது பழைய வுரை.

அவம்செய்கின்றேன் என்று அறிகின்றதேயில்லை; அந்தம்
[இல்லாச்
சிவம்செய்கின்றான் எங்கள்தீர்த்தப்பிரான் திருவாய் மொழிந்த
தவம் செய்கின்றாயில்லை; தானம் செய்தாயில்லை; நீநடுவே
எவன்செய்கின்றாய்?- இந்தியம் சொன்னவாசெய்யும்
[என்நெஞ்சமே! 17

என்நெஞ்சமே இடமே உடைத்தே- இந்திராதி விண்ணோர்
முன்னம் செய்பன்னிரண்டு ஓசனைத்தாய், முழுமாமணித்தூன்
மன்இஞ்சி மூன்றோடு, மானாங்கணம்முதல் ஏழ்நிலத்துப்
பொன்னின் சினாலயம் ஆயிற்று அன்றோ,
[எங்கள்புங்கவற்கே. 18

புங்கவன், பூரணன், புத்தன், புராதனன், பூண்புனையாச்
சங்கரன், சக்கரன், தாமரையோன்எனத் தாஇல்செங்கண்

---

17 அந்தம்-முடிவு; சிவம்-நன்மை: தீர்த்தப்பிரான்-தீர்த்தங்கர சுவாமி; தவம்-துறவறம்; தானம்-இல்லறம்; எவன்-யாது; இந்தியம்- ஐம்பொறிகள்: மெய், வாய், கண், மூக்கு, செவி.

18 இறைவனை இடைவிடாது நினைத்த மனத்தை ஒருவன் புகழ் தலாய் அமைந்தது இப்பாடல். ஓசனை-ஓசலை என்னும் பரப்பளவை; இஞ்சி-மதில்; மதில் மூன்றாவன: உதயதரம், பிரீதிதரம், கல்யாண தரம்; மானாங்கணம் முதல் ஏழ்நிலம்- மானஸ்தம்பம் முதலாகிய ஏழிடங்கள்: அவை மானஸ்தம்பம், ஜலகாதிகை, புஷ்பவனம், சைத் திய விருக்ஷம், துவஜபூமி; சித்தார்த்த விருக்ஷம், ஸ்தூபகர்மாவலி என்பன. அங்கணம்-இடம்; சினாலயம்-சமவசரணம் நிலம்-வட்ட வடிவமான பிராகாரமாகிய சுற்றாலை; புங்கவன்-உயர்ந்தவன், சுவாமி.

19 பூரணன்-நிறைந்தவன்; புத்தன்-அறிவுடையவன்; புராதனன்- பழையோன்; சங்கரன்-சுகத்தைச் செய்கின்றவன்; தா-கேடு;

சிங்க வன் பேரணைத் தீர்த்தனைத்-தீவினைத் தெவ்வெனும்பேர்
மங்க அன்றோ-வெள்ளை வாள்கொண்ட வீரனை
[வாழ்த்துவதே 19

வாழ்த்துதி, நின்புகழ் வாழ்த்த வல்லாரை; தம் வாய் வலத்தால்
பாழ்த்துதி செய்து உனைப் பாடா தவர்களைப் பல்வினைக்கே
சூழ்த்துதி; யாம் அறி யாச் சுழல் துன்பப் பெருங்குழிக்கே
ஆழ்த்துதி;- ஆர்வமும் செற்றமும் நீக்கிய அச்சுதனே! 20

அச்சும் அல்லா அல்லும் ஆர் எழுத்து ஆதியும் அந்தமுமா
வச்சது, எல்லா மதி நூலும் போதிந்தது, மந்திரமாய்
மெச்சும் எல்லாருக்கும் வேண்டிற்று அளிப்பது-
[மெய்த்தவத்தோர்
நச்சும் அல் ஆர் குடை மூன்று உடைநாயகன் நற்பெயரே. 21

---

தீர்த்தன்-அருகதேவன்; தெவ்-பகை; மங்க-கெட; வெள்ளைவாள்-சுக்கிலத்தியானம்; வீரன்-வினைகளை வென்றோன் ஆதலாலே வீரன் என்றார்.

20 வாழ்த்துதி-வாழப்பண்ணுவிப்பை; வாழ்த்தவல்லார்-ஏத்தவல்லார்; வாய்வலம்-சொல்வன்மை; பாழ்த்துதி-பிறதெய்வங்களைக் குறித்துச் செய்யும் பாழான தோத்திரம்; பல்வினை-பலவாகிய தீவினை; சூழ்த்துதி-வளையப் பண்ணுகின்றாய்; பெருங்குழி-கடல்; ஆழ்த்துதி-அமிழ்ந்து போகச் செய்வாய்; ஆர்வமும் செற்றமும்-விருப்பும் வெறுப்பும்; அச்சுதன்-கேடில்லாதவன்.

21 அச்சு-உயிர்; அல்-மெய்; ஆதியும் அந்தமும்-முதலும் இறுதியும்; வச்சது-வைக்கப்பட்டது; மதி நூல்-பரமாகமம்; வேண்டிற்று-விரும்பிய வற்றை; நச்சுதல்-விரும்புதல்; அல்ஆர்குடை-இருளை உண்ணுகின்ற, அதாவது போக்குகின்ற ஒளி மயமானகுடை; ஆர்தல்-உண்ணுதல்; குடைமூன்று-சந்திராதித்தியம், நித்யவிநோதம், ஸகலபாசனம்.

பெயர்த்து அன்பர் இம்பர் நன்னாமை நல்கும்
பெருமைச்சரணாம்
புயத்து அம்பர அம்பர! போற்றிவிண்ணப்பம்!
அப்புன்னெறித் துன்
நயத்து அன்பிலாரோடு தீவினைத் தேவ் வென்று நாட்டிய நற்
சயத்தம்பமோ-நப்ப! நின்திரு வாயில் தனித்தம்பமே. 22

தம்பத்தின் மேல் புழை ஏழ் உளவாக்கித் தமித்துவைத்த
கும்பத்தினோடு நிகர்ஒக்கும்-ஆம்குணிப்பு இன்றி ஐந்து ஆம்
பம்பத்தி காயம் பணித்த பிரான் பசுந் தாமரைத்தாள்
செம்பத்தியாலி வணங்காச் சிறியார்தம் சிரத்திரளே. 23

சிரத்திரள் நான்குஇலன்; ஐம்படை ஏந்திலன்; திண்சிலையால்
புரத்திர யங்களையும் பொடியாக்கிலன்; போதி என்றுஓர்

---

22 பெயர்த்து-மீண்டும்; இம்பர்-இவ்வுலகம்; சரணாப்புயம்-திருவடித் தாமரை, அம்பரம்-ஆகாயம்; அம்பர அம்பர-திசையாடையை உடைய நம்பனே; போற்றுதல்-துதித்தல்; விண்ணப்பம்-வேண்டுகோள்; தூன்னுதல்-சேர்தல்; அன்பிலார்-உள்ளன்பில்லாதபிறர்;சயத்தம்பம்-வெற்றித்தூண்; நம்பன்-இறைவன்; தம்பம்-தூண்'.

23 புழை-துளை; தமித்து வைத்தல்-தனியாக வைத்தல்; கும்பம்-குடம்; நிகர்ஒக்கும்-மிகவும் ஒத்திருக்கும்; குணிப்பு-கணிப்பு, விசாரம்; பம்பத்திகாயம்-பஞ்சாஸ்திகாயம்; அவை ஜீவாஸ்திகாயம், அஜீவாஸ்திகாயம், தர்மாஸ்திகாயம், அதர்மாஸ்திகாயம், ஆகாசாஸ்திகாயம்; பணித்தல்-அருளிச்செய்தல்; பசுமை-செவ்வி, அழகு; செம்பத்தி-செவ்விதாகிய அன்பு; சிரத்திரள்-தலைக்குவியல்.

24 சிரத்திரள் நான்கு-நான்கு முகங்கள்; ஐம்படை-சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு; திண்மை-வலிமை; சிலை-வில்; புரத்திரயம்-முப்புரம்; போதி என்று ஓர் மரத்திரள்-அரசு என்னும் பெயரையுடைய திரண்ட மரம்; மாயம்-சூனியவாதம்; பரத்திரயம்-மேலான ரத்னத்திரயம்; அவை நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம்; பண்ணவன்-அருகன்

மரத்திரள்சேர்ந்து, பல்மாயம்சொல்லான்,—எந்தை,
[மன்உயிர்க்குப்
பரத்திரயங்கள் பணித்தபிரான், எங்கள் பண்ணவனே. 24

பண்ணவனார், சகம்மூன்றும்ஓர் மாத்திரைபார்க்கும் எங்கள்
கண்ணவனார் தன்மைகேட்டு அறியார்கொல்?—
[களிகளைப்போல்.
விண்அவன், காற்றுஅவன், வெந்தீஅவன், விரிநீர், பொதிந்த
மண்அவன், மற்றும்எல்லாம்அவனே என்னும் மாவிடரே! 25

இடர்ஆர் பவக்கங்குலின்கண் மற்றுஎன்னையும் காணஒட்டாப்
படர்ஆர் வினைந்தொல் இருள்போய்இரிய, பைம்பொன்
[அணைமேல்
அடர்ஆர் மலர்ப்பிண்டியோடும் புகுந்து, என்அகத்துஇருந்த
சுடர்ஆர்விளக்கை மெய்ஞ்ஞானங்குலி கொண்டு
[தூண்டுவனே. 26

---

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், புத்தன் ஆகியோர் பொய்த்தேவர் எனவும் அருகனே மெய்த்தேவர் எனவும் விளக்கியபடி.

25 பண்ணவனார்-அருகன்; கண்ணவனார்-கருத்தையுடையவர்; களிகள்-கள் உண்டு களிக்கும் மாதங்கர்; விண்-ஆகாயம்; விரிநீர் அவன் எனவும் ஒட்டுக. அவனே-அந்தப் பிரம்மமே. இதில் அத்துவைத மத கண்டனம் சொல்லப்பட்டது.

26 இடர்-துன்பம்; ஆர்தல்-பொருந்துதல், நிறைல்; பவக்கங்குல்-பிறப்பாகிய இரவு; ஒட்டா-விடாத; படர்-துன்பம்; இரிதல்-விலகிப் போதல்; அடர் ஆர்மலர்-தகடு நெங்கிய பூ; சுடர்-ஒளிமயமான பரஞ் சோதியார்; அருகன்-அச்சோதி ஆலோகம், பிரபாமூர்த்தி, கனப் பிரபை என மூன்றாம். விளக்கு-அருகன் அருளிய பரமாகமம்; ஞானாங்குலி-ஞானமாகிய விரல், பரமாகமத்தை விளக்கு என்றும், அதற்கு ஏற்பத்தூண்டுவன் என்றும் கூறினார்.

தூண்டுதின் நேர்உருள்போலச் சுழன்று, தொல்யோனிகட்கே
மீண்டுகொண்டு ஏகும்அவ் வெவ்வினைக்குஅஞ்சி,
[நின்மெய்ச்சரணம்
பூண்டுகொண்டேன்; இனிப்போக வொட்டேன்;-
[பொருளாக என்னை
ஆண்டுகொண்டாய்;- அறவாழிகொண்டே வென்ற
[அந்தணனே! 27

அந்தரம் மேல்ஒருமந்தரம் வந்தென அம்மலர்மேல்
வந்த பிரான்அடிக்கு அன்பிலராயின் மறையவரேல்
நிந்தர்கள்; சாதியில் நீசர்கண்டீர்; அந்தநீசரும்அச்
சுந்தரன் நேசர்கள் ஆயின், விண்ணோரிலும் சுந்தர்களே. 28

சுந்தியைத் தானுடைச்சொல் அரும்பல்குணத் தொல்சுகத்த
சித்தியைத் தாஎன்று செப்புகிலேன்;- முதல்சிவன் உள்விட்டு

---

27 தூண்டுதல்-செலுத்துதல்; உருள்-சக்கரம்; அஞ்சுதல்-பயப்படல்; சரணம்-திருவடி; பூண்டு கொள்ளுதல்-பற்றிக் கொள்ளுதல்; போகவொட்டேன்-போகவிடேன்; ஆண்டு கொள்ளல்-அடிமையாகக் கொள்ளுதல்; வென்ற-வினைகளைவென்ற; அந்தணன்-அழகிய குளிர்ச்சி பொருந்திய அருளுடையான்.

28 அந்தரம்-ஆகாயம்; மந்தரம்-மந்தரமலை; அம்மலர்-அழகியமலர், 'அமமலர் என்றதனால் வெண்மையாகிய மலர் எனப்பொருள் கொள்க, மலருக்கு அந்தரத்தை உபமானமாக்கியமையால் நிர்மலமான வெள்ளிய ஆகாயம் எனப்பொருள் பெற்றாம்', என்பது பழையவுரை. மலர்மேல் வந்த பிரான்-அருகசுவாமி; மறையவரேல்-அந்தணர்களாயிருந்தாலும்; நீசர்-இழிந்தவர்; அச்சுந்தரன்-அழகிய சுவாமி; விண்ணோர்-தேவர்; சுத்தர்-அதிகர், மேலானவர்; 'இந்திரரை அதிகராதலினாலே சுந்தர் என்றார்' என்பது பழையவுரை.

29 சுத்தி-பரிசுத்தம்; சித்தி-மோக்ஷம்; செப்புதல்-சொல்லுதல்; முதல் சீவன் உள்ளிட்டு அத்தி-சீவன் முதலாகச் சொல்லப்பட்ட பஞ்சாஸ்திகாயம், 23 ஆம் பாடலின் குறிப்புக் காண்க.

அந்தியைத் தான்உள்ளவாறு அறைந்தாய்; அடிவிட்டுஅகலாப்
பத்தியைத்தா; அதுமுத்தி பெற்றாரின் பதின்மடங்கே. 29

மடங்கலின் ஆசனம், வார்தளிர்ப்பிண்டி, மும்மாமதில்சூழ்
கிடங்கு, அலர்சோலைகள், நாடகசாலைகள்,
[கேடுஇல்விண்ணோர்
அடங்கலும் ஆர்கின்ற ஆடகக்கோயிலினும், அடியேன்
முடங்கல் மனாலயமே இனிது ஆயிற்று எம்முத்தனுக்கே 30

முத்தன்என்கோ, முதல்மூர்த்திஎன்கோ, சகம் மூன்றினுக்கும்
அத்தன்என்கோ, எனை ஆளிஎன்கோ, அடியேனுடைய
சித்தன்என்கோ, பத்தர்செல்வம்என்கோ, வினைத்தெவ்
[ஒன்றுஇல்லா
நித்தன்என்கோ?—பிண்டிநீழலின் கோவை நிரந்தரமே. 31

நிரந்தரம் நான்மை நிறைந்திருந்தானும், நின்றார்களைப்போல்
தரம்தரமல்லன் என்றோ அருள்செய்வது; தன்தலைமேல்

---

விட்டு அகலாப்பத்தி-விட்டு நீங்காத அன்பு; பதின்மடங்கு-பத்து மடங்கு.

30 வார்தளிர்-நீண்ட தளிர்; கிடங்கு-அகழி; அலர்-மலர்; அடங்கலும்-முழுமையும்; ஆடகக்கோயில்-சமவசரணம்; முடங்கல் மனாலயம்-சிறிய மனமாகிய தாமரை; முத்தன்-கடவுள்.

31 முத்தன்-மோட்ச நாயகன்; முதல் மூர்த்தி-ஆதியாகிய மூர்த்தி; சகம்-உலகம்; அத்தன்-தலைவன்; ஆளி-ஆண்டவர்; சித்தன்-சிந்தையில் உறைபவன்; பத்தர்-அடியார்; தெவ்-பகை; நித்தன்-என்றும் அழிவில்லாதவன்.

32 நிரந்தரம்-எப்பொழுதும்; நான்மை-அனந்த ஞானம் முதலிய நாற்குணங்கள்; நின்றார்கள்-இவர் ஒழிந்துநின்ற தேவர்கள்; தரன்-உரியன்; தரமல்லன்-உரியன் அல்லன்; தலைமேல் கரம்தர நிற்றல்-

கரம்தரநின்று ஒருகால் வணங்கப்பெறின், காமர்செல்வப்
புரந்தரலோகம் புழைக்கடை ஆகும், எம்போலிகட்கே. 32

போலிப் பொருளுடைப், புன்னெறியாம் அப்புலிகிடக்கும்
காலிச் சிறுநெறிபோய்க் கழிவிர்! கழியாவளத்த
மேலின் பெருநெறிவீடேபுகின், பிண்டிவேந்தன் எங்கோன்
நூலில்பகர் செந்நெறிபோய்ப் புகுமின், நொடிவரையே. 33

வரை, அம்பு, காய்எரி, மாரிகளாய், அவ்வயிரி செய்த
திரையம் புகாக்கடல் பூக்கடல் ஆகத் தியானம் என்னும்
நரையம் புகா, வினைத்தெவ் வென்றவா நன்று;நாய்-அடியேன்
நிரையப்புகா நன்னெறிபணித்து ஆட்கொண்ட நின்மலனே. 34

---

தலைமேல் இருகைகளையும் கூப்புதல்; ஒருகால்-ஒருமுறை; காமர்-அழகு; புரந்தரலோகம்-தேவலோகம்; புழைக்கடை-புறக்கடை; புழைக்கடையாதலாவது அண்மையாயும் எளிதாயும் இருத்தல்.

33 புன்னெறி-தீயவழி; காலி-மாட்டின் கூட்டம்; புலி கிடக்கும் காலிச் சிறுநெறி-புலி கிடத்தற்கும் அது கிடப்பதை அறியாமல் மாடுகள் போதற்கும் இடனாய்க் காடு அடர்ந்த சிறியவழி; கழியாவளம்-நீங்காத பேரின்பம்; புகின்-செல்ல விரும்பினால்; எம்கோன் நூல்-பரமாகமம்; செந்நெறி-செவ்வையான நேர்வழி; நொடிவரை-சிறுபொழுது,

34 வரை-கல்; அம்பு-நீர்; காய்எரி-சுடுகின்றதீ; மாரி-மழை; வயிரி-பகைவன், இங்குக் கமடன் என்பானைச் சுட்டியது. திரையம் புகாகக் கடல்-அலைவீசாதகடல்; அம்-சாரியை; அம்திரை புகாக் கடல் எனக் கொண்டு நீர் உருவாகிய அலை இல்லாத கடல் என்றும் பொருள் கொள்ளலாம். நரை-எருது; புகா-புகுந்து; பணித்தல்-கட்டளையிடல்; நின்மலன்-தூயவராகிய சுவாமி; பிறர் செய்த தீங்கு பொறுத்தலே தலையாய அறம் என அதனை வியந்தவாறு.

நின்மாமலர்ப்பதம் தாங்கு நிரைஇதழ்த் தாமரையை
வன்மாஎனக்கொண்ட மற்றதற்காகக்கொல்—வான்கருப்பு
வில்மாரனைச் செற்றவீர!—மென்போதுஎன வீற்றிருப்பப்
பொன்மார்பு அளித்தது, அப்புண்டரிகாலயப்
பொன்னினுக்கே. 35

பொன், குணமாமணி, பூந்துகில்ஆதிப் பொருள்அடியேன்
முன் கொணர்வீர்என்று மோகிக்கிலேன்;—இந்தமூவுலகும்
நன்குஉணர் கேவலநாயகரே!—மூன்று நானுடைய
என்குறைம் யான்பெற எப்பெருமானை இரக்கின்றதே. 36

இரக்கும் தொழில்ஒழிந்து, யாமேஇனி இந்தஏழ்உலகும்
புரக்கும் பொருள்உடையோம்—புலவீர்!—வம்மின், பூமிஎல்லாம்
நிரக்கும் பொருட்குலை யாவையும் நீர்நினையாத எலாம்
சுரக்கும் சுரபிகள்மடர், ரின்டிநாதன்தன் தொல்அறமே. 37

தொல்அறமே படையாஉடை அச்சுத நாயகன்றன்
நல்லறம்மேவி, இந்நாற்கதி நீக்கிலர் தீக்கதிசேர்ந்து

---

35 வன்மா-வலிய குதிரை; வான் கரும்புவில்-சிறந்த கரும்பாலன வில்; மாரன்-மன்மதன்; மென் போது-மென்மையானபூ; பொன்மார்பு-அழகிய மார்பு, புண்டரிகாலயம்-தாமரையாகிய இடம்; பொன்-இலக்குமி, இதனால் பெரியோர் செய்த உதவிக்கு அளவுண்டோ என்பதாம்.

36 பூந்துகில்-அழகிய ஆடை; மோகித்தல்-ஆசைப்படுதல்; நானுடைய-எனக்கு உரியவான.

37 புரத்தல்-காத்தல்; வம்மின்-வாருங்கள்; சுரத்தல்-கொடுத்தல்; சுரபி-காமதேனு என்னும் பசு; தொல்-பழமை; அறம்-ஜிநதர்மம், உயிர்கட்கு ஜிநதர்மமல்லது புகலிடம் இல்லை என்பதாம்.

38 படை-ஆயுதம்; சுதநாயகன்-பரமாகமங்களுக்குத் தலைவன்;

அல்லறம் மேவுவர்என்று அறைந்நாலும், அறிவிலிகள்
புல்லறம் மேவுவர், போகத்தின்மேல் உள்ளமோகத்தினே. 38

மோகங்களால் சிலமூர்த்திகள் கண்டதும் முற்றுணர்ந்துஎம்
சோகங்கள்தீர்க்கும் அசோகர் சொல்லாதது—துன்மதிகள்
யாகங்கள்செய்தும் இருந்தசைதின்றும் ஈர்ங்கள்ளோடு ஒக்கும்
போகங்கள் ஆர்ந்து நம்மெய்யோடும் போய்ப்புகும்
போய்முத்தியே. 39

முத்தின் பொலிகுடைமூன்று உடையார்க்கு
இரண்டு இன்றி ஒன்றாம்
பத்திப் பெரும்பதம் அல்லதுஉண்டோ—பசிநோய்முதலாம்
புத்திக் கிலேசங்கள்நீங்கிப் புக்கார்க்குஎன்றும் போதல்இல்லா
சித்திப் பெயர்ப்பத்தனம் புகுவார்கட்குச் செவ்வழியே. 40

வழுவது அல்லா வதம்வல்லனதாங்கி,—வரத!—மற்றுஉன்
குழுவதுஎல்லாம் நின் திருவுருவாக் கொண்டு, குற்றம்உற்றால்
அழுவதுஅல்லாது அறியாமகப்போல், அடியேனும் நின்னைத்
தொழுவதுஅல்லாது, முழுதுணர்ந்தாய்க்கு என்கொல்,
சொல்லுவதே. 41

---

அல்லறப்-அறமல்லாதது; அறைதல்-சொல்லுதல்; புல்லறம்-தீயவழி; போகம்-இன்பநுகர்ச்சி; மோகம்-ஆசை.

39 மோகம்-அஞ்ஞானம்; சோகம்-துக்கம்; அசோகர்-அசோக மரத்தில் எழுந்தருளியிருக்கும் அருகர்; துன்மதிகள்-கெட்ட அறிவுடையவர்; ஈர்ங்கள்-குளிர்ச்சியான கள்.

40 பொலிதல்-ஒளிவிடுதல்; இரண்டு இன்றி ஒன்றாம்பத்தி-வேறு தெய்வம் இல்லை என்கிற ஒப்பற்ற பக்தி. பதம்-வழி; பசி நோய்-பசியும் நோயும்; கிலேசங்கள்-துயரங்கள்; போதல்-திரும்புதல்; பத்தனம்-பட்டணம்; செவ்வழி-நேர்மையானவழி,

41 வழுவது-வழு, குற்றம்; வதம்-விரதம்; மக-குழந்தை; என்கொல்-யாது, 'கவி தனது அறியாமை கூறுவது போல தவத்தியல்பு கூறியதாம்' என்பது பழையவுரை.

சொல்லார், பிறர்க்குஇதம்; சூழார், தமக்குஅரண் சூழ்பொருள்மேல்;
கில்லார், நசைவிட; கேளார், திருவறம்; கேள்வியினும்
கொல்லா வதத்து எங்கள் கொற்றவன்கூறிய நற்றவத்தே
நில்லார், நிரயத்து நிற்பான் இருக்கின்ற நீசர்களே. 42

நீ சரணாம் இடம்கண்டுகொண்டாய்—நெஞ்சம்!— நின்றுஇலங்கும்
நேசு அரணாம் ஒளிமூன்றுஉடையான் இருசெஞ்சுடரோடு
ஏய் சரணாரவிந்தங்கள் அல்லால், சுமந்து ஈன்றெடுத்த
தாய் சரணோ, தந்தைதான்சரணோ, நைந்து சாமவர்க்கே. 43

சாமரை, சங்கு, சிங்காசனம், மாசனம், சாதுரங்கம்,
சோமரை வெல்சுடர்வெண்குடை, நன்கொடித் துங்கமன்னர்

---

42 இதம்-இதமான இனிய சொற்கள்; அரண்-காப்பு; சூழார்-நினையார்; நசை விடக்கில்லார்-பொருள் மேல் பற்று விட மாட்டார்; நசை-ஆசை, பற்று; கொல்லா வதம்-கொல்லா விரதம்; நிரையம்-நரகம்.

43 சரணமிடம்-புகலிடம்; நெஞ்சம்-அண்மை விளி; இலங்குதல்-விளங்குதல்; நேசு-ஒளி; அரண்-ஆதாரம், பற்றுக்கோடு; ஒளிமூன்று-ஒளிவட்டம் மூன்று; செஞ்சுடர்-சூரியன்; ஏய்-ஒத்த; சரணாரவிந்தம்-திருவடித் தாமரை; ஈன்றெடுத்த-பெற்றெடுத்த நைதல்-வருந்துதல்; சாமவர்-இறக்கின்ற மானிடர்.

44 சாமரை-வெண்சாமரை; சங்கு-சங்கவாத்தியம்; மாசனம்-மந்திரி, புரோகிதர் முதலியோர்; சாதுரங்கம்-யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நால்வகைப்படை; சோமர்-சந்திரன்; துங்கம்-உயர்வு;

காமரசானவர் அத்திகளாதல் கண்டாலும், தொண்டர்
பூமரை மேல்வரும் கற்பகநீழல் புகுசிலரே. 44

புகாநின்ற ஞாயிறு போகின்ற செல்வமும், போம்புனலுள்
தொகாநின்ற தூய்மணல் ஒக்கின்ற சுற்றமும், சோர்ந்து இளமை
உகாநின்ற மேனியும், மேல்உதவாஎன்று உனைஅடைந்தேன்—
நகாநின்ற தாமரைமேல் நடந்துஏகிய நற்றவனே. 45

நற்றவர்க்குச் சித்திநல்க வல்லாற்கு இருநால்வினையும்
செற்றவற்கு, செய்ய தாமரைஏறிச் செவ்வேநடக்கக்
கற்றவற்கு, குருடுஒத்து உழல்வேற்கு நற்காட்சிதந்த
மற்றவர்க்கு, செய்வது ஆள்அல்லதுஏதும் கைம்மாறு
இலையே 46

---

மன்னர் காமரசானவர்-அரசர் விரும்பும் பெருஞ்செல்வமுடைய சக்கரவர்த்திகள், காமம்-விருப்பம்; அத்திகளாதல்-இரக்கும் தொழிலினராதல்; எலும்பாதலும் ஆம்; பூமரை-தாமரைமலர்; கற்பகம்-கற்பகமாய் விளங்கும் அருகசுவாமி; நீழல்-நிழல்; இங்கே துறவறத்தைக் குறிக்கும். 'இறைவனைக் கற்பகம் என்று உருவகம் செய்ததனாலே துறவறத்தை அதற்கேற்ப நிழல் என்றார்' என்பது பழையவுரை.

45 புகாநின்ற ஞாயிறு-எழுந்து விழுகின்ற சூரியன்; ஞாயிறு போல என உவமை வருவிக்க, போகின்ற செல்வம்-தோன்றி மறைகின்ற செல்வம்; போம்புனல்-போகின்ற ஆற்றுநீர்; தூய்மணல்-தூய புது மணல்; சோர்தல்-தளர்தல்; உகாநிற்றல்-கெடுதல்; மேல்-மறுமை; நகாநின்ற-ஒளிவிடாநின்ற.

46 சித்தி-மோட்சம்; இருநால்வினை-எண்வகைவினை; செற்றவன்-வென்றோன் ஆகிய சித்தபரமர்; செவ்வே-நேராக; தாமரைஏறிச் செவ்வே நடக்கக் கற்றவன்-அருகபரமர்; உழல்தல்-அலைதல்; நற்காட்சி-நல்லதரிசனம்; மற்றவர் என்னும் பன்மையால், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னும் மூவர்க்கும் ஆயிற்று. கைம்மாறு-எதிர்உதவி; இது பஞ்ச பரமேஷ்டிகளைப் புகழ்ந்ததாம்.

மாறா மனம்கொண்டு வாமேனார் தொழும்பிண்டி வாமன்
தேறாது ஒழிந்த சிறுமாளிடர் என்ப—தீமுதலாய் [மெய்ந்நூல்
நூறாயிரம்கொலை நோனாது எழுந்துவிழுந்து ஒருகால்
ஆறா நெடுந்துயர் ஏழாநரகம் அடைபவரே. 47

அடையுமவர் உமை என்கண்டு அடைகுவர்?—ஆசனமும்
குடையும் முதலிய விண்ணோர் குயிற்றிய கொய்சகம்சேர்
உடையும்அறுசுவை ஊணும் ஒண்பூணும் ஒன்னாரைவெல்லும்
படையும் படைவிழியாரும் இல்லாத பரம்பரரே! 48

பரம்பற்றி நீங்க ஒட்டா வினைப் பாசம், மெய்ப்பாவனைவாள்
அரம் பற்றி ஈர்ந்து, அடியேன் உய்யப்போம் வண்ணம்—
ஐவகைப்பூஞ்
சரம்பற்றினான் வலிசாய்வித்த வீரனை, தன்புகழ்போல்
வரம்புஅற்ற ஞானியை, மாசுஅற்ற சோதியை வந்திப்பனே. 49

---

47 மாறாமனம்-இடைவிடா மனம்; வாமன்-அருக பரமேசுவரன்; மெய்ந்நூல்-பரமாகமம்; தேறாது-தெளியாது; என்ப-என்று சொல்லுவர்; தீமுதலாய்-தீயில் இடுவது முதலாக; கொலை-வருத்தம்; நோனாமை-பொறாமை; ஒருகால்-ஒருபொழுதும்; ஆறுதல்-தணிதல், ஒழிதல்; ஏழாநரகம்-தமத்தமப் பிரபை என்பது.

48 கண்டு என்பதனுள் என்ன நூல் கண்டு என வருவிக்க. கண்டு-கேட்டு; குயிற்றுதல்-பண்ணுதல்; கொய்சகஞ்சேர்உடை-பெண்ணுடை; ஊண்-உணவு; ஒன்னார்-பகைவர்; படைவிழியார் வாள்போன்ற கண்ணுடைய மாதர்.

49 பரம்-மேல்; பாசம-ஆசை; பாவனை-தியானம்; வாள்அரம்-ஒளிபொருந்திய அரவாள்; ஈர்தல்-அறுத்தல்; ஐவகைப் பூஞ்சரம்-ஐந்து வகையான மலர் அம்பு, தாமரை, மா, முல்லை, அசோகு, நீலோற்பலம். பூஞ்சரம் பற்றினான்-மன்மதன்; சாய்வித்தல்-கெடும்படி செய்தல்; வரம்பு-எல்லை, அளவு; மாசு-குற்றம்; வந்தித்தல்-வணங்குதல்.

வந்திக்கவும் புகழ் வாழ்த்தவும் தாழ்த்தில வானர் எல்லாம்
கந்திக்க மேற்கொள்ளும் கார்க்கமலத்து எந்தைதாட்காமலம்
சிந்தித்தலும் பண்டைத் தீப்பரிணாமத்துத் தீவினையால்
பந்தித்தவை பண்டை நுண்துகள் ஆகிப் பறந்தனவே. 50

பறந்து புக்குப் பரவாதிகள் துன்னும் படுநரகு உன்
அறம் தலைப்பட்டவர்கட்கு அடைத்தே நிற்கும்—
ஆர்வம்உள்ளிட்டு
இறந்த முக்குற்றத்து எம் ஈச! நின்நேயர்கட்கு என்று எதிரே
திறந்து நிற்கும், சித்தி நன்னகர் வாயில் திருக்கதவே. 51

கதமொழிதீர்மின்; கறுவுகள் தேய்மின்; கருணை நெஞ்சோடு
இதமொழி கூறுமின்; இன்னுயிர் ஓம்புமின்; எப்பொழும்
சுதமொழி கேண்மின்; சுகம் மிக வேண்டின்; துறவர்சொன்ன
வதமொழிஏல்மின்:—இவை சினனார் திருவாய்மொழியே. 52

---

50 கந்தித்தல்-மணம் வீசுதல்; கார்க்கமலம்-குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர்; சிந்தித்தல்-தியானித்தல்; தீப்பரிணாமம-மித்தியா பரிணாமம்; பந்தித்தல்-கட்டல்; நுண்துகள்-சிறியதூசி; பறந்தன-ஓடிப்போயின, நீங்கின.

51 பறத்தல்-விரைதல்; பரவாதிகள்-வேறு சமயத்தவர்; துன்னுதல்-நெருங்குதல், சேர்தல்; படுநரகு-கொடிய நரகம்; தலைப்பட்டவர்-சேர்ந்தவர்; ஆர்வம்-ஆசை; இறந்த முக்குற்றம்-முக்குற்றம நீங்கிய வடநூல் வழக்கு; நேயர்-அன்பர்; சித்தி நன்னகர்-முத்தியாகிய நல்லநகர்; பரவாதிகளுக்கு நரகின் திறப்பும் வீட்டின் அடைப்பும் காட்ட வேண்டி அறத்தினுள்ளார்க்கு அவற்றின் திறப்பும் அடைப்பும் கூறியதாம்.

52 கதம்-கோபம்; தீர்மின்-தவிர்வீர்; கறுவு-சினக்குறிப்பு; தேய்மின்-சுருக்குவீர்; ஓம்புமின்-காப்பாற்றுவீர்; எப்பொழுதும் என்பதை இடைநிலை விளக்காகக் கொண்டு முன்னும் பின்னும் கூட்டுக, சுதம்-பரமாகமம்; வதம்-விரதம்; ஏல்மின்-ஏற்றுக் கொள்வீர்.

மொழிந்தேன் இயம்பும் மும்மூடர் சொற்கொண்டு,
முனைவன் மெய்ந்நூல்
பழித்தேன்; மயிரிகள் சொற்பொருள் கொண்டு,
மைப் பானல் அன்ன
விழிந்தேன் எழும் குரலார்க்கு இடர்கொண்டு,
விலங்குகள் போல்
கழித்தேன், மதி மந்தமாயே, அருமந்த காலத்தையே. 53

காலம் கழிதொறும் கோலம் கழிய, கறுத்த குஞ்சி
நீலம் கழிதர, நீரும் கழிதிர்; நிருமலன் தாள்—
மூலம் கழிதல் செய்யாது உய்ம்மின் என்னினும்
மூர்க்கர் அந்தோ,
வேலம் கழி விழியார் வலைக்கே பட்டு வீடுவரே. 54

வீடும் வினைகளின் பந்தமும் மெய்ம்மை விரிந்து உரைத்த
நீடு மலர்ப்பிண்டி நின்மல! நின் மலர்ப்பாத நன்னீர்
ஆடுமவர்க்கு அரமங்கையர் ஆடுவர்; அண்ணல்! நின்சீர்
பாடுமவரை இம் மூவுலகோர்களும் பாடுவரே. 55

---

53 மும்மூடர்-முழுமூடர்; முனைவன்-ஜிநேசுவரன்; மயிரிகள்: காமநூலியர்; பாணல்-நீலோற்பலமலர்: விழி-கண்; தேன்-வண்டு குரலார்- கூந்தலையுடைய மகளிர்; இடர்கொள்ளுதல்-வருத்தமுறுதல்; மதி-புத்தி; அருமந்த-அருமருந்தாகிய அமிர்தம் போன்ற.

54 காலம்-வாழ்நாள்; கோலம்-அழகு; கழிதல்-நீங்குதல்; குஞ்சி தலைமயிர்; நீலம்-கருநிறம்; கழிதர்-இறந்து போகின்றீர்; நிருமலன்-அருகபரமேட்டி; கழிதல் செய்யாது-விட்டு நீங்காது; உய்ம்மின்-பிழைத்துப்போவீர்; அந்தோ-ஐயோ, இரக்கக்குறிப்பு; வேலம்-வேல், அம் சாரியை; கழிவிழி-தோற்பித்தகண்; வீடுவர்-இறந்துபோவர்.

55 வீடும்-விடும்படியும்; பந்தம்-கூட்டு; மெய்ம்மை-உண்மை; நீடு மலர்-அதிசயத்தால் எக்காலத்தும் உளதாகியபூ; பாத நன்னீர்-திருப்பாதத்தை விளக்கிய தீர்த்தநீர்; ஆடுமவர்-தெளித்துக்கொள்ளுமவர்; அரமங்கையர்-தெய்வமகளிர்; சீர்-புகழ்; பாடுவர்-துதிக்குமவர்.

பாடுவனே, சிலபாதகத்தேரை? பல்நெறிமேல்
ஓடுவனே, நின் ஒரு நெறிகண்டு? பண்டு உன்னை உன்னா
வேடுவனே நின் அறத்தினை வித்தி விளைத்து உணப்பெற்று
ஆடுவனே இன்னும் ஆருயிர் வேட்டை—அதிசயனே! 56

அதி சோகமோடு, அயலார் களைப்போல், அடும்
கூற்றம் வந்தால்,
மதி சோர்தர மயங்கிக் கிடவோர்; மலர்மேல் நடந்தார்
துதி சேர் இணை அடியாம் துணையோடு அவர்
தொல்லறம்ஆம்
போதிசோறு உடையம்; இடையோம், இனித்
தனிப்போம் நெறிக்கே. 57

நெறிச் சென்று ஒரு வண்ணம் நின் அறமாகிய
நீள் நிலைச் செந்
தறித் தங்கிய என் மனத்தனியானை தளைபரிந்து, ஐம்

---

56 பாதகத்தேவர்-வஞ்சகத்தேவர்; ஒருநெறி-ஒப்பற்றசன்மார்க்கம் உன்னுதல்-கருதுதல்; ஆருயிர் வேட்டை-அரிய உயிர்களைக் கொல்லுதல்; அதிசயன்-ஒப்பற்ற மூன்று அதிசயங்களுடைய சுவாமியே! மூன்று அதிசயமாவன: ஸஹஜாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தைவீகாதிசயம்.

57 அதிசோகம்-மிகுந்த துயரம்; அடுதல்-கொல்லுதல்; கூற்றம்-யமன்! மதி-அறிவு; சோர்தருதல்-தளர்தல்; துதி-வாழ்த்து; பொதிசோறு-கட்டமுது; உடையம்-பெற்றிருக்கின்றோம். இடையோம்-வருந்தோம். தனிப்போம்நெறி-முக்திமார்க்கம்.

58 நெறி-வேறுமதமாகிய நிலைபெறாத கொடியவழி; ஒருவண்ணம்-ஒருபடியாக; அறம்-திருவறம்; தறி-கட்டுத்தறி; தளை-விலங்கு; பரிதல்-அறுத்தல்; ஐம்பொறி-மெய், வாய், கண், மூக்கு, செவி.

பொறிப் பன்றியோடு ஐம்புலன்களும் புக்கு அழியாமல்
இன்னும்
குறிக்கொண்டு அருளுகண்டாய்;—பிண்டி நிழற் குணதரனே. 58

குணதரரே, முனிமங்கையரே, கொலை நேர் விலங்கே'
பணதரரே முதல் நாற்சுரரே, அவர் பாவையரோடு
அணதரு நேமி அரதனரே அன ஆறிருமாக்
கணதரர் ஏறு செந்தாமரைகாண் எம் கருந்தலையே. 59

கருந்திரை காணினும் வெண்நரை காணினும்
காட்சி உள்ளிட்டு
அருந்திரயம் தந்த அன்னையைக் காண்கிலர்;—ஆர்கலிவாய்
வரும்திரை ஒய்வதும், போம்புனல் மாய்வதும், மாத்திரையில்
பருந்து இரை கொள்ள மெய் வீழ்வதும் காணும்
பாவகர்களே 60

---

ஐம்புலன்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்; குறிக்கொண்டு-எண்ணத்தில் கொண்டு: குணதரன்-குணங்களைத்தரித்த பரமன்.

59 குணதரர்-முனிவர்; முனியமங்கையர்-ஆர்யாங்கனைகள்; கொலைநேர்விலங்கு-கொலையைவிட உடன்பட்ட விலங்கு, பணதரரே முதல் நாற்சுரர்-பவணர்முதல் வியந்தரர், சோதிடர், கற்பவாசிரியர்; அவர்பாவையர்-நால்வகைத் தேவரின் மனைவிமார்; பவணர் மனைவியர், வியந்தரர் மனைவியர்; சோதிடர்மனைவியர், கற்பவாசியர் மனைவியர், அணதருநேமி அரதனர்-நல்வினை தானேயாகையாலே கிட்டப்பட்ட சக்கரத்தத்தை உடையவர்; கருந்தலை-பெரியதலை; கருமை-பெருமை, அருகதேவரைச்சூழ்ந்திருக்கும் பன்னிரண்டு கணதரரை இப்பாடல் குறிப்பிடுகிறது.

60 கருமை-மிகுதி; திரை-தோல்திரைதல்; நரை-நரைமயிர்; காட்சி நற்காட்சி; அருந்திரயம்-பெறுதற்கு அருமையான இரத்தினத்திரயம்-நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம, ஆர்கலி-கடல்; திரை; அலை; ஒய்தல்-தளர்தல்; போம்புனல்-ஓடுகின்றநீர்; மாய்வது-சுருங்கி அழிவது; மாத்திரை-நொடிப்பொழுது; மெய்-உடம்பு; வீழ்வது-சிறந்துபடுவது; பாவகர்-மூடர்.

பளகர் எல்லாம் மனைப்பாரம் பரிந்தனர்; பல்வினைக்கே
உளகர் எல்லாம் ஒத்து ஒவ்வாநெறி நின்றனர்; ஓடு அரிக்கண்
அளக மெல் ஓதியர்க்கு ஆர்வம் இல்லா அறவேந்த! அந்தச்
சளகர் அல்லாத சதுரர் நின் வேடம் தரித்தனரே. 61

வேடம் தரித்து, விதி அந்தரிக்க ஒழுகி, மெய்ந்நூற்
பாடம் தரித்து, உண்மை பாரா மூவரின்—பாய் அரிமான்
பீடம் தரிக்க இருந்த பெம்மான் அறம் பேணல் இன்றி,
மூடம் தரித்து, எண்மயத்து நின்றார் நல்லர், மும்மடியே. 62

மும்மடி சூழ்ந்த முழு ஒளிநாதர் எழும் சுடருக்கு
அம் மடி நல்ல அடியிணை தாங்கிலும், நன்னுதற்குத்
தம் அடியேன் மனம் போலவற்றோ?—தலைமீது கொள்ள
வம், அடிகேள்! என்னாட்டா முளரி மதுமலரே. 63

---

61 மனைப்பாசம்-இல்லறம்; பரித்தல்-தரித்தல், தாங்குதல், பூணுதல்; உளகர்-உள்ளாவர்; ஒத்து ஒவ்வாநெறி- இல்லற துறவறங்களுக்கு ஒவ்வாநெறி; ஒவ்வாநெறி-மித்தியாமார்க்கம்; அரி-செவ்வரி; அளகம்-கூந்தல்; சளகர்-குற்றமுள்ளவர்; சதுர -நல்லறிவு படைத்த திறனாளர்; பற்றில்லார் நின் வேடத்தை ஒத்துப் பற்றிலார் துறவுற்றனர் என்பதாம்.

62 வேடம்-தவவேடம்; விதி-செய்யவேண்டியகருமம்; அந்தரித்தல்-பேதித்தல்; மெய்ந்நூல்-பரமாகமம்; அரிமான்-சிங்கம்; பெம்மான்; மூடம்-மூவகை மூடத்தைக்கொண்டு; மூவகை மூடமாவன: உலோக மூடம், தேவதாமூடம், பாஷண்டமூடம்' எண்மயம்-எண்வகைச் செருக்கு; அவையாவன; பிறப்பு' குலம். வலி, செல்வம், வனப்பு, சிறப்பு, தவம், உணர்வு என்பன. "விளக்கைப்பிடித்து கிணற்றில் விழுகின்றார்; இவரே தறுகணர் எனக் கூடாவொழுக்கம் கூறியதாம்" என்பது பழையவுரை.

63 மடி-மடிப்பு; சூழ்தல் வளைதல்; முழுஒளி-ஒளி வட்டம்; செழுஞ்சுடர்- உதய சூரியன்; அம்மடி-ஒளிமிகுந்த; தம்-அசை; வற்றோ-வல்லதோ; வம்-வாரீர்; வம்மின் என்பது 'வம்' எனக் குறைந்தது, முளரி-தாமரை: மது-தேன். தாமரையினும் சிறந்தது தன் மனம் என்பதாம்.

மலம் தோய் வயிறும், அம் மா நரகங்களும், மண்ணும், விண்ணும்
கலந்தே கிடந்த உலகு ஒரு மூன்றும் கவர்தரும் ஐம்
புலம்தோய் பொறியுடைப் பொய்த்தேவர்கள் புன்னெறிக்கண்
புக்கு
அலைந்தேன் ;-அரவிந்த ஊர்தி! இனி என்னை அஞ்சல்
என்னே. 64

என்னை, இம்மண்ணுலகத்தோர் இயற்கை இறைவர் அல்லாத்
துன்நயவாதிகள் சொற்பொருள் நம்புவர்;-தூமணிசேர்
பொன் எயில் மன்னிய புங்கவ;-அங்கு அவர் பொய்ம்மை
கண்டு
பின்னையும் நின் அறம் தேறார், கிடந்து பிணங்குவரே. 65

பிணங்கோம், எவரோடும்; பேரோம், சிநன் அறம்; பேர்
படைத்தும்,
குணம் கோடிய குபதக் கொடுந்தேவர்தம் கோயில் கண்டால்,
வணங்கோம்; மனம் கொண்டு வாழ்த்துகிலோம்; அவர்
மானிடரோடு

---

64 மலந்தோய் வயிறு-மலம் படிந்த வயிறு உடைய மக்கட்கதி; மண்-என்பது விலங்கு கதியைச் சுட்டும்; விண்-தேவகதி; கவர்தல்-இழுத்தல்; தன் வயப்படுத்தல்; ஐம்புலம்-ஐந்து புலனுணர்ச்சிகள்; பொறி-ஐம்பொறி; புன்னெறி-கீழானவழி; அரவிந்த ஊர்தி-தாமரை மலராகிய வாகனத்தையுடையவரே; அஞ்சல்-அஞ்சாதே.

65 இயற்கை-இயல்பு நிலை; துன் நயவாதிகள்-துன்மார்க்கத்தோர், தீய நீதியைச் சொல்வோர்; நயம்-நீதி; தூமணி-தூயரத்தினம்; பொன்எயில்-பொன்னாலாகிய மும்மதில் சூழ்ந்த சமவசரணம்; மன்னுதல்-நிலைபெறுதல்; ''கொலை, பொய், களவு, பிறர் மனை விழைதல் முதலிய நினது நூல் விலக்கிய செய்தோரை இம்மையிலே அரசர் தண்டிப்பக் காண்டலின் 'கண்டும் தேறார்' என்றார்'' என்பது பழையவுரை. பிணங்குதல்-மாறுபடுதல்.

66 பேரோம்-நீங்கோம்; கோடுதல்-மாறுபடுதல்; குபதர்-தீநெறியோர்; அவர் மானிடர்-அம்மித்தியா தேவதைகளுடைய அடியார்;

இணங்கோம்; எழுமையும் என்கடவோம், அவ் இரு
வினைக்கே. 66

இருவினை வேலை ஒரு வினை நீ; எரிசேர் புரிபோல்
உருவினையேனும் அருவினைநீ; ஒருவர்க்கும் இல்லாத்
திருவினை நீ; எண்திசை முகன் நீ; சிறந்து ஓங்கு பிண்டித்
தருவினை நீ;- அருட்சக்கரம் ஏந்திய சங்கரனே! 67

சங்கை அஞ்சார்; தவர்நோய்க்கு இடையார்; தழல்போல்
விழித்து
வெங்கயம் சாரினும் மெய்ந்நடுங்கார்; விரை ஆர்களபக்
கொங்கை அம் சாயலர் கோலம் நம்பார்; கூற்றம் உட்கார்:-
பங்கயம் சார்பதபங்கயத்தான் அடிப் பத்தர்களே. 68

பத்தர் நல் சிந்தனை, பன்னிரண்டு ஓசனைப் பொன்னெயில் சேர்
அத்தனைப் பண்டு அறியாமையில், யான் அனந்தம் உயிர்கட்கு
எத்தனை தந்தையும் தாயரும் ஆயினன்; இன்று எனக்கே
எத்தனை தந்தையும் தாயரும் ஆனர் என்று எண்ணுவனே. 69

---

இணங்குதல்-சேர்தல், நட்புச் செய்தல்; இருவினை-நல்வினை, தீவினை; எழுமை-எழுபிறப்பு; என் கடவோம்-என்ன கடப்பாடு உடையேம்.

67 வேலை-கடல்; ஒருவினை-கடந்தனை, நீங்கினாய்; எரி-நெருப்பு; புரி-வைக்கோற்புரி; அருவினை-உருவற்றவன் ஆயினை; திரு-முத்திச்செல்வம்; எண்ணுதல்-மதித்தல்; திசைமுகன்-நான் முகனாகிய பகவன்; பிண்டித்தரு-அசோகமரம்; சங்கரன்-சுகத்தைப் பண்ணுமவன், மும்மூர்த்திகளும் பிறரும் நீ எனப் புகழ்ந்ததாம்.

68 சங்கை-விசாரம், மித்தியாதேவதை; இடைதல்-வருந்துதல்; தழல்-நெருப்பு; கயம்-யானை; விரை-வாசனை; களபம்-சந்தனச் சேறு; கூற்றம்-யமன்; உட்குதல்-அஞ்சுதல்; பங்கயம்-தாமரைமலர்; பத்தர்-அடியார்.

69 சித்தன்-சித்தத்தில் இருப்பவன்; ஓசனை-யோசனையளவு; பொன்னெயில்-சமவசரணம்; அத்தன்-சுவாமி; பண்டு-முன்பு. அனந்தம்-பல; ஆனர்-ஆயினர்; இன்' என்னும் இறந்தகால இடைநிலையின் இகரம் விகாரத்தால் தொக்கது.

எண்ணுடை மாலையொடு ஈர்படைகொண்டு, இடத்தும் வலத்தும்
பெண்உடையார் சிலர் பேதைகட்கு ஈசர்; பெருந்திசை ஆம்
நுண் உடைநாதர் நுவன்ற அருங்கலம் ஆகியமுக்-
கண்ணுடையார் இந்தக் காசினிமேல் நமக்கு ஈசர்களே. 70

ஈசன் என்றாலும், இறைவன் என்றாலும், இலங்கு ஒளிமுத்
தேசன் என்றாலும், மெய்த்தீர்த்தன் என்றாலும், சித்தித்திருவின்
நேசன் என்றாலும், என் நெஞ்சுள் இருந்து இந்த நீள்நிலத்தோர்
பேசநின்றார்தமக்கு ஏயும்; நின்றாரவர் பேரர்களே. 71

பேர் ஆயிரத் திருநான்கு உடையானை, பிறங்கியநல்
சீர் ஆயிரத்தின் சிறந்துடையானை, நற்சித்தி செய்யும்
காராய் இரத்தினம் மூன்று அளிப்பானை, கவிதை செய்யாது,
ஆராய் இரத்திர், அறியாதவரை-அறிஞர்களே! 72

---

70 ஈர்படை-கொல்லத்தக்க ஆயுதம்; பெண்-மாதர்; பேதை-மூடர்; பெருந்திசை ஆம் நுண் உடைநாதர்-திசையாடையுடைய அருக தேவர்; அருங்கலம்-இரத்தினத் திரயம்; முக்கண்ணுடையார்-மூன்று கண்ணினையுடைய முனிவர்; காசினி-பூமி; ஈசர்கள்-கடவுளர்.

71 முத்தேசன்-மூன்று ஒளிவட்டமுடையவன்; தேசு-ஒளி; மெய்த்தீர்த்தன்-உண்மைத் தருமம் உரைப்போன்; நேசன்-அன்பன்; நீள்நிலத்தோர்-பெரிய உலகத்திலுள்ளவர்; பேசநின்றார்-துதிக்க நின்றவர், அருகர்; ஏயும்-பொருந்தும்; நின்றார்-அருகர் ஒழிந்த தேவர்; பேரர்-பெயர் மாத்திரம் உடையவர்.

72 பேர்-திருநாமம்; ஆயிரத்து இரு நான்கு-ஆயிரத்தெட்டு; பிறங்குதல்-விளங்குதல்; சீர்-புகழ்; சிறந்துடையான்-மிகவுடையான்; நற்சித்தி-மோட்சம்; காராய்-மேகம்போலே; கவிதை-பாடல்; ஆராய்-யாராக; இரத்திர்-இரக்கின்றீர்.

அறியோம், அருந்தமிழ்; ஆரியம் கேட்டிலம்; ஆகமத்தும்
வறியோம்; மதுரக்கவிகள் அல்லோம்; மனம் வேண்டியலும்
பொறியோடு உழல் புன்புலமையினோம்; எம்புலமை எல்லாம்
முறியோடு அலர் பிண்டியார் அடியார் என்னம் முக்கியமே. 73

முக்குற்றம் நீக்கிய நின்குணம் முன்பு உணராமையில், யான்
புக்குற்ற தீக்கதி போயின எத்தனை; போனவற்றுள்
அக்குற்றமானது எல்லாம் அடியேன் குற்றம்; ஆட்புகுந்தேன்;
எக்குற்றம் எய்தினும் எம்பெருமானது, இனிக்குற்றமே. 74

குற்றம்விட்டார், குத்திமூன்றுஉடையார், செத்திஈர்ந்து
செற்றம்விட்டார், திருமேனிஎல்லாம் பெருமாசுவிம்ம [அடினும்
வற்றவிட்டார், வினைமாசுஉதிர்ப்பார், பிண்டிவாமன் அல்லால்
சுற்றம்விட்டார், திசைசூழ் துகிலார்—நம்தொழு தெய்வமே. 75

---

73 அருந்தமிழ்-தென்கலை; ஆரியம்-வடகலை; வறியோம்-தரித்திரராயிருந்தோம்; வறுமை-சிறுமை; புன்மை-அற்பம்; முறி-தளிர்; முக்கியம்-தலைமை; "தென் கலை வட கலை அறிந்து ஆகமம் ஓதி, மதுரகவிகளான பேரறிவினரே இறைவனை வாழ்த்த வேண்டும். மோகாந்தகாரச் சிற்றறிவினர் வாழ்த்தற்கு அரியர் என்பதாம்'' என்பது பழையவுரை.

74 முக்குற்றம்-காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றம்; புக்குற்ற-அடைந்த; போயின-கழிந்தன; ஆட்புகுதல்-அடிமையாக வந்தடைதல்; எக்குற்றம் எய்தினும்-குற்றங்கள் எத்துணைக் கொடுமையவாயினும்; எம்பெருமானது-இறைவனதேயாம், "இனிமேல் யான் செய்யும் பிழை பிழையல்ல; உண்டாயினும் அவற்றைப் பொறுத்துப் பாதுகாக்க வேண்டும் என்பதாம்'' என்பது பழையவுரை.

75 குற்றம்-கொலை முதலிய குற்றம்; குத்தி-அடக்கம்; மூன்று-மனம், மொழி, காயம்; செத்துதல்-செதுக்குதல்; ஈர்தல்-அரிதல்; அடுதல்-கொல்லுதல்; செற்றம்-கோபம்; மாசு-அழுக்கு; விம்முதல்-கனத்தல், அதிகரித்தல்; வற்றவிடுதல்-உண்ணா விரதத்தாலே உடம்பை வற்றவிடுதல்; சுற்றம் விடுதல்-உட்பற்று புறப்பற்று எல்லாம் விடுதல்; திசை சூழ் துகிலார் திகம்பரர்.

தெய்வம்வேறு ஒன்றுதேடுகின்றீர்! வினைத் தெவ்இரண்டால்
நைவது அல்லாது முத்திக்குநண்ணீர்; இருநால்வினை தீர்
ஐவதநாதர் அறுபதம்போது என்று எழுபதம் சேர்ந்து
உய்வது அல்லால் உமக்குஉய்யும் உபாயம் மற்றொன்று
இலையே 76

ஒன்றுஅறியிர்; முழுதும்உணர்ந்தீர்;— உணர்வுஒன்றும் இல்லா
வன்தறிபோல்பவர் வந்துஉம்மைத் தாழ்ந்திடின், மற்று
அவர்க்கு
நன்றுஅறிஞானம் கொடுத்து, உண்மைகாட்டுதிர்; நாமும்
இவ்வாறு
என்றுஅறியாது அவர் எம்பெருமான் ஒக்க இச்சிப்பரே. 77

இச் சிநனே புவனத்திருநாயகன் என்று எவர்க்கும்
நிச்சயமாக உணர்த்துதற்காக நிலா விரித்து
முச்சகம் முற்றும் நிழல்செய முப்புவனேந்திரர் ஆம்
தச்சர் சமைத்து உடன்வைத்தனர், நாதன்முச் சத்திரமே. 78

---

76 வினைத்தெவ்-வினைப்பகை; நைவது-வருந்துவது; நண்ணு தல்-அடைதல்; இருநால்வினை-எண்வகைவினை; ஐவதம்-பஞ்ச விரதம்: அறுபதம்போது என்று எழுபதம்-வண்டுகள் தாமரைப்பூ என்று மொய்க்க எழுகின்ற திருவடிகள்; உய்யும் உபாயம்-பிழைக்கும் வழி.

77 வன்தறி-வலியதூண்; தாழ்தல்-வணங்குதல்; காட்டுதல்-அறி வித்தல்; இவ்வாறு-இப்படியிருக்கக் கடவோம்; இச்சித்தல்-விரும்புதல் "இதனுள் ஒன்றும் அறியீர் எனவும் உண்மைப் பொருளையும் என வும் உம்மையும் எல்லாம் உணர்ந்தவரோ என ஓகாரமும் வருவிக்க" என்பது பழையவுரை.

78 புவனத்திருநாயகன்-மூவுலகத்துக்கும் தலைவன்; நிச்சயம்-உறுதி; நிலாவிரித்து-ஒளிபரப்பி; முச்சகம்-மூவுலகம்; நிழல்செய்தல்-குளிர்ச்சியை உண்டுபண்ண; முப்புவனேந்திரர்-மூவுலகுக்கும் வேந்தர்; சமைத்தல்-உண்டாக்குதல்; சத்திரம்-குடை.

சத்தியமே ஒன்றுசாற்றுகின்றேன்; சமயங்கள் எல்லாம்
கத்தி அஞ்ஞானம் கவல்கின்றதே; கடைச்சாரம் எய்தும்
முத்தியும்ஏகம்; முதல்வனும்ஏகம்; முதல்வனும்உற்-
பத்தியும் நாசமும் ஒன்றும்இல்லாத பரஞ்சுடரே. 79

சுடர்மண்டலம், சுரதுந்துபி, தெய்வத்துவனி, சிங்கப்
பிடர்மண்டல அணை, பிண்டி, வெண்சாமரை, பெய்மலரின்
அடர்மண்டல மழை, அம்பொற்குடை, மும்மையாம்;—
அடியோம்
இடர்மண்டலம் கெடுப்பாற்கு இமையோர் செயும்
எண்சிறப்பே. 80

சிறப்புஇன்று இவ்வாழ்வு என்றுதேவேந்திரர் தொழுந்திருத்த!
நின்சீர்
மறப்புஇன்றியே என்றும் வாழ்த்தப்பெற்றால், மனையான
வற்றுக்கு
அறப்பின்றி, ஆயிழையார் இன்றியே சென்று அடைபவர்க்கு ஓர்

---

79 சத்தியம்-உண்மை; சாற்றுதல்-சொல்லுதல்; கத்துதல்-கதறுதல்; கவல்தல்-கவலைப்படுதல்; கடைக்சாரம்-முடிவிடம்; ஏகம்-ஒன்று; முதல்வன்-ஈசுவரன்; உற்பத்தி-தோற்றுதல்; நாசம்-கெடுதல்; பரஞ்சுடர்-மேலானஒளி.

80 சுடர்மண்டலம்-ஒளிவட்டம்; மண்டலம்-வட்டம்; சுரதுந்துபி-தேவவாத்தியம்; தெய்வத்துவனி-திவ்யத்தொனி; அணை-ஆசனம்; பெய்மலரின் அடர்மண்டலம்-நெருங்கப் பொழிகின்ற பூமழை, இடர்மண்டலம-சூழ்ந்துகிடக்கின்ற துன்பம்; கெடுப்பார்-போக்குமவர்.

81 சிறப்பு-அதிகம், பெருமை; சீர்-புகழ்; மறப்புஇன்றியே-மறவாமல், இடைவிடாது என்றபடி; என்றும்-எந்நாளும், நாள்தோறும்; அறப்பின்றி-அதிகதூரமாய்; ஆயிழையாள்-மகளிர்; இறப்பு-தடை;

இறப்புஇன்றியே வெளியாய்நின்றவீடு எமக்கு
என்செய்கவே. 81

என்செயலாம், வினைகாள்! உமக்கு; எங்களையாம் பிறர்போல்
இன் செய வாயவர் கேள்வரைத் தேவர்என்று ஈண்டுஅறமாக்
கோன்செய வேண்டும் குபதர் அல்லோம்; குடைமூன்றுடையார்
தன்செய பாதங்கள் கண்டுகொள்வீர், என்தலைமிசையே. 82

மிசையார், தசை; இருள்மேவார்; நறை, மதுவின்பெறினும்
இசையார்; பொய், கொலை, களவுஅறியார்;
இள்ந்தோகையர்மாட்டு
அசையார்; பொருள் வரைந்து, ஐவரைப்பேணுவர்;
ஐம்புலன்மேல்
நசைஆறிய பிண்டியார் அடியார் எங்கள் நாயகரே. 83

---

'இடைவிடில் வினைக்கு இடமாம், இடைவிடாது நினைப்பார்க்கே வீடுபேறு என்பதாம்'' என்பது பழையவுரை.

82 பிறர்-பரசமயிகள்; இன்செயவாய்-இனிமையும் சிவப்புமுடைய வாய்; கொன்-பயனில்லாமை; குபதர்-மூடர்; செயபாதங்கள்-செம்மையான திருவடிகள், பாவத்தைப் போக்கவல்லதிருவடிகள், தம் செய பாதங்கள் என வர வேண்டுமிடத்து எதுகை நோக்கித் தன் சாரியை வந்தது. ''வினை பற்றுவது பற்றுள்ளாரையாதலின், பற்றற்றவனைப் பற்றில் வினை பற்றாவாதலாலே குறுகா என்பதாம்'' என்பது பழையவுரை.

83 மிசைதல்-புசித்தல்; தசை-மாமிசம்; இருள்மேவார்-இரவு உண்ணார்; நறை-கள்; மது-தேன்; இசையார்-உடன்படார்; அசைவு-தளர்வு; பொருள் வரைதல்-அறவழியில் தேடிய பொருளைப் பெறுதல்; ஐவர்-பஞ்சபரமேட்டிகள், 46 ஆம் பாடல் காண்க. நசை-விருப்பம்; ஆறுதல்-நீங்குதல். நாயகர்-தலைவர்; அருக சமயத்தார் பேண வேண்டிய அறம் இப்பாடலில் சுட்டப்படுகிறது. ஐவரைப் பேணுவர் என்பதற்குப் பதிலாக 'ஐயரைப் பேணுவர்' என்றும் பாடம் உண்டு.

நாயகத்தேவர்தம் நன்முதல் தேவரை, நாண்மலர்வான்
மீயகத்தே வரமேற்கொள்ளும் தேவரை, மெய்யடியார்
வாயகத்தே வரும் வண்புகழ்த் தேவரை, மாற்றி—நெஞ்சே!
நீஅகத்து ஏவரை இத்தனை நாளும் நினைத்தனையே. 84

நினைத்தனை ஆயினும், வாழ்த்தினை ஆயினும், நீயும்—
நெஞ்சே!
தினைத்துணை நல்லறம் செய்தனை ஆயினும், சேர்ந்தவரைப்
பினைத்தனை வந்தனை செய்யவொட்டாப் பிண்டியாற்கு
அரிதோ
உனைத்தனையே ஒக்க இத்தனை நாளில் உயர்த்துகையே! 85

கைத்துக் கடிதுஅடும் காஞ்சிரம் தின்பவன் தீங்கனியைத்
துய்த்துச் சுவைகண்டபின் விடுமோ? சுரராய்நரரோடு
ஒத்துத் திரிபவர்க்கு அன்புசெய்வார் உமதுஉண்மைகண்டால்
வைத்துப் பிரிவர்களோ—?பிண்டிநீழல் எம்மாமணியே! 86

---

84 நாயகத்தேவர்-தேவேந்திரர்; நாண்மலர்-அன்றலர்ந்த தாமரை மலர்; வான்-ஆகாயம்; மீ-மேல்; மேற்கொள்ளுதல்-மேலே எழுந்தருளுதல்; வாய்-ஆகுபெயராய் இங்கே நாக்கைச் சுட்டும்; வண் புகழ்-வளப்பமான மிகுந்த புகழ்; மாற்றி-கைவிட்டு; அகம்-மனம்; ஏவரை யாவரை; நன் முதல் தேவர் 'என்பதற்கு நம் முதல் தேவர்' என்றும் பாடம் உண்டு, இது மெய்யறிந்தான் ஒருவன் நெஞ்சொடுஉசாவியது.

85 தினைத்துணை-தினையளவு; சேர்ந்தவர்-உலகில் பகை, நொதுமல், நண்பு என்னாதே தன்னைச் சேர்ந்தவர்; பிணை-பின்னை; வந்தனை-வணக்கம்; இத்தனை நாள்-குறிப்பால் சிறிது நாள்.

86 கைத்தல்-கசத்தல்; கடிது-விரைவு; அடுதல்-கொல்லுதல்; காஞ்சிரம்-எட்டிக்காய்; தீங்கனி-இனியபழம்; துய்த்தல்-தின்னுதல்; சுரர்-தேவர்; நரர்-மக்கள்; திரிபவர்-கெடுமவர்; திரிதல்-கெடுதல்; சுழலுதலுமாம். அன்புசெய்வார்-பத்திசெய்யப்பட்டவர்; உண்மை கண்டால்-உள்ளபடி அறிந்தால்; வைத்துப் பிரிவார்களோ-விட்டுப்பிரிவார்களோ.

மணியாபரணமும், மாசு இல் — வெண் தூசும், வம்பு ஆர் மலரும்
அணியாது அழகிய அண்ணல்கண்டீர் — பெண்ணின் ஆசைவிடாப்
பிணி ஆர் முடை உடல்பேய் அனையீர்! — பிறழ்பூங் கருப்பின்
திணியார் வரிசிலைத் தேங்கணைக் காமனைச் செற்றவரே. 87

செற்றது காதிகள்; தீர்ப்பது அகாதிகள்; திக்கு அறியப்
பெற்றது கேவலம்; பேசுதல் கேவலம்; — பெண் முதலாய்ப்
பற்றது தீர்த்த எப்பாவனை தீர்த்த! — எப்பாவம் அற்றால்
அற்றது உன்மேல் துதி; யாரையும் ஏற்றுதி, ஆட்படினே 88

படினும் படார் தவம்; பாத்து உண்பதும் இலர்; பார்த்திபர் ஈர்ந்து
அடினும் அடாதனசெய்கை அஞ்சார்; அடியார்தம் அன்பு

---

87 தூசு-ஆடை; வம்பு-புதுமை, வாசனை; அண்ணல்-இறைவர்; பிணி-நோய்; முடை-தீநாற்றம்; பிறழ்தல்-ஒளிவிடுதல்; வரிசிலை-அழகிய வில்; தேங்கணை-தேனையுடைய பூவாளி, செற்றவர்-அழித்து வென்றவர், செற்றவர் அண்ணல் கண்டீர் எனக்கூட்டுக.

88 செற்றது-கெடுத்தது; காதிகள்-காதி கன்மங்கள்; இவை ஞானாவரணீயம், தரிசநாவரணீயம், மோஹநீயம், அந்தராயம் என நான்கு; தீர்ப்பது-இனிமேல் கெடுப்பது; அகாதிகள்-அகாதி கன்மங்கள்; அவையாவன ஆயுஷ்யம், வேதநீயம், கோத்திரம், நாமம் என்னும் நான்கு; திக்கு-உலகம்; கேவலம்-கேவலஞானம்; பேசுதல்-அருளப்பட்டது; கேவலம் முத்திவழி; தீர்த்தல்-ஒழிதல்; பாவனை-தியானம்; அறுதல்-நீங்குதல்; தவிர்தல்; யாரையும் ஏற்றுதி-யாரையும் சமமாக உயரப்பண்ணுவை

89 படார்-புகுதார்; பாத்தல்-பகுத்தல்; பார்த்திபர்-அரசர்; ஈர்ந்து அடுதல்-அரிந்து கொல்லுதல்; அடாதன செய்தல்-அறத்திற்கு ஆகா என்று விலக்கிய கொலை, பொய், களவு, காமம், அவா முதலிய தீமைகள்; அன்பு-பக்தி; அருட்கேவலி-அருளையுடைய

கெடினும், கெடார் அருட் கேவலிபோல் அயல் தேவர் நல்கார்
விடினும், விடார்கள்!—மித்தாக்கள்—கர்த்தாக்கள் கொல்
வெவ்வினைக்கே. 89

வினைவருமாறும், அவைவெல்லுமாறும், மிந்தாச் சமயத்து
அனைவரும் மாறுகொள நிற்குமாறும், உலகம் எல்லாம்
நினைவு அரும் ஆறுபொருள் நிற்குமாறும், நிறைந்த நன்னூல்
புனைவரும் ஆறுபுகு கடல்போலும் எம் பூரணனே. 90

பூரணையால் பதினால் கயிற்று ஒக்கப் புவனம் எல்லாம்
நீர் அணை மாருதம் தாங்கியது ஒக்கும்—நிவந்த சிங்கப்
பேர் அணையார்க்கு, இணையாரும் இல்லாப் பெரியோர்க்கு
விண்ணோர்
பார் அணையா அடி தாங்கச் செந்தாமரை பாரித்ததே. 91

---

கேவலி, அருகபரமர்; அயல்தேவர்-இதரதெய்வங்கள்; நல்கல்-பயன்படல்; மித்தாக்கள்-மிச்சர், மித்தியாவதிகள்; கர்த்தாக்கள்-தலைவர்கள்; கொல்வினை-பாவவினை; 'மித்தாக்கள் கர்த்தாக்கள் கொல்வெவ்வினைக்கே' என்பதற்கு, 'மிச்சத்தர்கள் கர்த்தர்கள் வெவ் வினைக்கே' எனவும் பாடபேதம் உண்டு.

90 மித்தாச் சமயம்-பரசமயங்கள்; மாறுகொள-மாறுபட; நினைவு அரும்-எண்ணுதற்கு அரிய; ஆறு பொருள்-சீவம், புற்கலம், தருமம், அதருமம், ஆகாசம், காலம் என்னும் ஆறு பொருள்; நிற்குமாறு-நிற்கின்றவழி; நன்னூல்-பரமாகமம்; பூரணன்-எங்கும் நிறைந்திருக்கின்ற கடவுளாகிய அருகபரமர்.

91 பூரணை-நிறைவு; ஒக்கம்-உயரம்; புவனம்-உலகம்; நீர் அணை-குணம் பொருந்திய; குணம்-குளிர்ச்சி, மணம்; மாருதம்-காற்று; நிவப்பு-உயர்வு; இணை-ஒப்பு; பார் அணையா அடி-நிலம் தோயாத் திருவடிகள்: பாரித்தல்-பண்ணுதல்.

பாரிடைஈர் இருநூற்று ஐம்பத்தெட்டு பத்தாம் பவணத்து
ஓர்எழுகோடி எண்ணொன்பான் இலக்கம் உயர்ந்த கற்பத்து
ஓர்இயல்யோனி தொள்ளேழாயிரச் சின்னம் எண்ணொண்ணா
சீரியவந்தரர் சோதிடத்துஈசர் நற் சேதியமே 92

சேதியம் முப்புவனத்து இருகூற்றமும் தீர்ந்தர் உள்ளிட்டு
ஏதில்குணத்தர் வணக்கம் ஓர்ஐந்தும் இயற்பெயரோடு
ஆதிஎழுத்தும் அருகனும் மவ்வும்ஒன்று ஆதிஐந்துஈறு
ஓதி, நினைப்பன்—வினைத்துகள் ஓடி ஒளித்திடவே. 93

---

92 பார்-பூமி; ஈர் இருநூற்று ஐம்பத்தெட்டு-நானூற்று ஐம்பத்தெட்டு; பத்தாம்-பத்தடுக்காயிருக்கின்ற; பவணம்-பவணலோகம்; எழுகோடி எண்ணொன்பான் இலக்கம்-ஏழு கோடியே எழுபத்திரண்டு நூறாயிரம்; கற்பம்-தேவலோகம்; யோனி-எண்பத்து நான்கு நூறாயிரம்; குறிப்பு மொழி. தொள்ளேழாயிரச் சின்னம்-தொண்ணூற்றேழாயிரத்து இருபத்து மூன்று; சின்னம் என்பது இருபத்து மூன்று என்னும் குறைந்த எண்ணைக் காட்ட வந்தது. வந்தரர்-வியந்திரலோகம்; சோதிடம்-சோதிடலோகம். ஈசர்-சினேந்திரர்; சேதியம்-இயற்கை செயற்கைச் சினாலயம்.

93 முப்புவனம்-மூவுலகு; கூற்றம்-கூறுபாடு; தீர்த்தர்-அருகதேவர்; ஏதில்குணத்தர்-குற்றமில்லாத குணங்களைப் பெற்ற பஞ்ச பரமேஷ்டிகள்; வணக்கம் ஓர் ஐந்து-பஞ்ச நமஸ்காரம்; இயற்பெயரோடு ஆதி எழுத்து-அருகர், அசரீரி ஆகிய இவ்வியற்கைப் பெயர்களிலே முதலெழுத்து; அருகன்-உபாத்தியாயரின் முதலெழுத்தாகிய உகரம்; மவ்வும்-முனிவர்களின் முதலெழுத்தாகிய மகர ஒற்று. ஒன்றுஆதி ஐந்துஈறு-ஒன்று முதலாக ஐந்து இறுதியாகச் சொல்வதனால் உண்டாகிய ஓங்காரம். ஓதுதல்-துதித்தல்; நினைத்தல்-தியானித்தல்; ஒளித்தல்-மறைதல்.

ஒளிவந்த நிழல்உயர் பிண்டிவேந்தன் ஒருத்தனுமே
விளிவந்து வேண்டும் விபூதிகள் நல்கும்; மெய்ப்
பொய்யைநம்பிக்
களிவந்து அவாவொடு கைவந்தவா செய்யும்
கையர்பின்போய்
இளிவந்து வாழ அருமந்த ஆருயிர்க்கு என்வந்ததே. 94

வந்தன, வெண்நரை; போயிற்று, உவா; மக்கள்
யாக்கைபெற்று
நம்தனமா ஒன்று நாடிற்றிலம்; பிண்டிநாதனைச் சேர்ந்து
உய்ந்தனம், இன்று; ஓதனத்தின்று இன்சொலார்
தனச்சேர்ந்து,
இந்தனம்ஆக நற்சந்தனவேர் பெற்று எரித்தினமே. 95

எரிதின்றுபோதல், இழுப்புண்டுபோதல், இன்நாயொடுபல்
நரிதின்றுபோதல் அல்லால், மெய்நில்லா; நமன்தூதர் வந்தால்
அரிதுஇன்றுபோதுதல் என்ன ஒண்ணாது; அதனுக்குமுன்னே
கரிதின்றிடா அரிஏந்து அணையான்அறம்
கைக்கொள்மினே. 96

---

94 விளிவந்து-கூப்பிடமுன்வந்து; விபூதிகள்-செல்வம்; மெய்ப்பொய்-பொய்யாகிய நிலையற்ற உடல்; களிவருதல்-செருக்குதல்; கைவந்தாவா-வேண்டியவற்றை; கையர்-திருடர், தீயர்; அருமந்த-பெறுதற்கருமையான.

95 உவா-இளமை; தனம்-பொருள்; உயந்தனம்-பிழைத்தோம்; ஓதனம்-விருப்பத்தை மிகுவிக்கின்ற நெய்யோடு கூடிய சோறு; இன்சொலார்-இனிய பேச்சினையுடைய மாதர்; இந்தனம்-விறகு: சந்தனவேர் என்பது உலகில் பெறுதற்குரிய மானிட உடம்பைச் சுட்டியதாம்.

96 எரி-நெருப்பு; இன்நாய்-சுத்தமில்லாத நாய் மெய்-உடம்பு; நமன்-யமன்; அரிது-கூடாது, இயவாது; கரி-யானை; அரி-சிங்கம்; அறம்-ஸ்ரீதருமம். கைக்கொள்மின்-கைக்கொள்ளுவீர், 'நாயொடுபல்' என்பதற்கு 'நாயொடுபேய்' என்றும் பாடம்.

கொண்மூ ஒருபருவம் பொழிந்தாங்கு இருகொட்பினுள்பா-
ருள் மூவிருவகைக் காலத்து இடைஉலகு உய்யக்கொள்ளும்
எண்மூவரும் அல்லதுஈசர் அல்லாமை நல்ஈசர் என்று
திண்மூடர்கள் தொழும்தேவர் மெய்காட்டித்
தெளிவிப்பரே. 97

தெளிக்கும் திருமொழி, திக்குஉடை, தொல்சகம்
முக்குடைக்கீழ்
அளிக்கும் திருவருள் ஆழிஎம்மான்அடி ஐம்புலநீர்க்
குளிக்கும் திரிவிதக் குற்றத்து மும்மதத்து என்மனம்ஆம்
களிக்குஞ்சரம் அணைக்கும் பணைத்தாளிணைக்
கந்துகளே. 98

கந்தாதிகள் கசிந்த நெஞ்சுஆக, கடிநறும்பூஞ்
செந்தாது இயைபிண்டியார் திருப்பாதத்துச் சேர்த்தும்
இன்சொல்

---

97 கொண்மூ-மேகம்; பருவம்-காலம்; பொழிந்தாங்கு-பெய்தாற்போல; இருகொட்பு-ஏறுகாலம் இழிவுகாலம் ஆகிய இரண்டு சுழற்சி; இடை-நடுவே; உய்யக்கொள்ளுதல்-பாதுகாத்தல்; எண்மூவர்-இருபத்துநாலு தீர்த்தகரர்; அல்லாமை-அல்லாமல்; மூடர்-அறிவிலிகள் தெளிவிப்பர்-அறிவித்து விடுவர். 'ஈசர் அல்லாமை' என்பதற்கு 'ஈசர் அல்லாரை' எனவும் பாடம்.

98 திருமொழி-திருவாக்கு; திக்குஉடை-திக்காகியஆடை! ஆழி எம்மான்-தரும சக்கரத்தையுடைய அருக்தேவர்; ஐம்புலநீர்-ஐந்து புலன்களாகியநீர்; திரிவிதக்குற்றம்-காமம், வெகுளி, மயக்கம் என்கிற முக்குற்றம்; களிக்குஞ்சரம்-செருக்குடைய யானை; பணைத்தாள்-பெரிய அடி; கந்து-தூண்.

99 கந்தாதிகள்-கந்தம் முதலானவைகள்; நெஞ்சு-மனம்; கடி நறும்பூ-மிகுந்த வாசனையுடையபூ; சேர்த்தும் இன்சொல்-சேர்த்துச்

அந்தாதியை அணிமாமலர் ஆக அணிந்து அடியேன்
முந்து ஆதி வல்வினைவெல்வன், எல்லாரினும் முந்துறவே. 99

முந்திய பேரன்பின் மூவுலகுஏத்த, முனீந்திரரோடு
எந்தைபிரான் அங்குஎழுந்தருளும் பொழுது, ஏறஅங்குஓர்
தந்திபொறாது என்றும், வாசிபொறாது என்றும்,
தாழ்வுடையேன்
புந்திபொறாது என்றும் தேவர் பொற்றாமரைப்
பூக்கொண்டதே. 100

---

சொல்லப்படுகின்ற இனிய சொல்; அத்தாதி-அந்தாதி என்னும் பிரபந்தம்; முற்பாடலின் இறுதி அடுத்துவரும் பாடலின் தொடக்கமாக வைத்துப் பாடப்பெறும் நூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம், அணி-அழகு; முந்து ஆதிவல்வினை-முற்பட்ட பழையவினை; முந்துறுதல்-முற்படுதல். 'செந்தாது இயை' என்பதற்கு 'செந்தாது இயல்' என்றும் பாடம்.

100 முந்திய-முற்பட்ட; மூவுலகு-மூவுலகத்திலுள்ளவர்; ஏத்த-புகழ; முனீந்திரர்கள்-முனிகளும் இந்திரர்களுமாகிய தேவர்கள்; எழுந்தருளுதல்-திருவுலாச் செய்தல்; ஏற-ஏறி அமர்வதற்கு; தந்தி-யானை; பொறாது-தாங்க வலியுள்ளது அன்று; வாசி-குதிரை; தாழ்வுடையேன்-குற்றமுடையேன்; புந்தி-மனம்; பொற்றாமரைப் பூக்கொண்டது-பொற்றாமரைப் பூவின் மேலே எழுந்தருளினது.

அந்தாதிமாலை முற்றும்

卐

## நூற்பயன்

பூக்கொண்டு நாளும் புனிதன் திருவறம் போற்றிநின்று,
நாக்கொண்ட செஞ்சொல் அவிரோதி நாதன் நவின்ற நன்னூற்
பாக்கொண்டு நாளும் பணிந்தும் நினைந்தும் படிக்கவல்லார்
தீக்கொண்ட வல்வினை சேரார் சிவகதி சேர்குவாரே 1

சிந்தாகுலம் இல்லை; தீவினை போம்; செய்ய தாமரையாள்
வந்து ஆதரிக்கும்;—மடநெஞ்சமே!—மறவாதிருக்க,
கொந்துஆர் அலங்கல் குடைஒரு மூன்றுஉடை
யான்குணத்தை
அந்தாதி யாக அவிரோதி ஓதிய ஆகமே. 2

---

## நூற்பயன்

1 செஞ்சொல்-குற்றமற்ற அழகிய சொல்; அவிரோதிநாதன்-அவிரோதியாழ்வார்; நவின்ற-பாடியருளிய; பணிதல்-வணங்குதல்; நினைதல்-சிந்தித்தல்; தீக்கொண்ட-தீமையைக் கொண்ட; சிவகதி-வீடுபேறு

2 சிந்தாகுலம்-மனத்துயரம்; செய்ய தாமரையாள்-சிவந்த தாமரைப் பூவிலிருக்கும் திருமகள்; கொந்து-பூக்கொத்து; அலங்கல்-மாலை ஆகமம்-நூல்.

# அருகன் துதிமாலை

## திருமேற்றிசை அந்தாதி

காப்பு

**திரு மா மகள் உறைகின்ற செந்தாமரை ஒன்றதன்மேல்**
**வரு மா மலர்கள் இரண்டு உடையான்-மதிபோல் நிழற்றும்**
**ஒரு மா மணிக்குடை மூன்று உடையான்-குணம்**
**நான்கும் அமைந்த**
**பெருமான்-நறுங்கொண்டை என்ன வல்லார்க்கு**
**இல்லை, பேர் இடரே.**

---

குறிப்புரை :

காப்பு

திரு மாமகள்-இலக்குமிதேவி; வரு மா மலர்கள் இரண்டு-தாமரை மலர் போன்ற திருவடிகள்; மதி-பூர்ணச் சந்திரன்; நிழற்றும்-நிழலைச் செய்யும்; ஒளி வீசும் ஒரு-ஒப்பற்ற; மா-பெருமை; மணிக்குடை-அழகிய குடை, மணிகள் பதித்த குடை; குடை மூன்று-முக்குடை; அவை யாவன: சந்திராதித்தம், நித்திய விநோதம், சகல பாசனம். குணம் நான்கு-நான்கு திருக்குணங்கள்; கடையிலா அறிவு, காட்சி, இன்பம், ஆற்றல் என்னும் நான்மை. 'அனந்த குணம் நான்கால் அகிலம் உணர்ந்து' என்பர் அனந்த விசயர் (அப்பாண்டை நாதர் உலா 557). நறுங்கொண்டை-திருநறுங் கொண்டை என்னும் திருத்தலம். இடர்-துன்பம். இப்பாடலில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என எண்ணலங்காரம் அமைந்துள்ளது.

## அந்தாதிப் பூந்துணர்

பூவும் புனலும் பொழிந்து, ஒரு மூன்று புவனத்து எல்லாத்
தேவும், புகழ்ந்து அமையாத் திருத் தீபையில்-செய்தவத்தோர்
மேவும் திருப்பாழியில்-திருமேற்றிசை வீரனை என்
நாவும் பரவும் என்றால், என் சொலார், இந்த நாட்டவரே. 1

நாடேன், நினது அறமல்லது; நாற்கதி நாடகம் புக்கு
ஆடேன்; அவர் இவர் தேவர் என்று ஐயம் உற்று,
அங்கும் இங்கும்
ஓடேன்: இனி வந்து உனை அடைந்தேன்;-ஒருகால் நினைக்க
வீடே தரும் திருத் தீபையில் மேற்றிசை விண்ணவனே! 2

விண்ணில் புகுந்தும், நிரயத்து அழுந்தியும், மீள வந்து
மண்ணில் பிறந்தும், இறந்தும் செல்லார்-வடபாழி வந்து, என்
கண்ணில் புகுந்து. என் கவியில் துவக்குண்டு,
என் காதல் நெஞ்சத்து
உள்நிற்கும் எந்தை சரணே சரண் என்று உணர்ந்தவரே. 3

---

1 புனல்-நீர்; பொழிதல்-சொரிதல்; மூன்று புவனம்-மூன்றுஉலகம்; தே-தெய்வம்; தீபை-திருநறுங்கொண்டை என்னும் திருத் தலத்திற்கு உரிய ஒரு பெயர்; பாழி-தவத்தோர் உறைவிடம்; 'செய் தவத்தோர் மேவும் திருப்பாழியில்' என்னும் ஆசிரியர் வாக்கே இதற்குச் சான்றாம். திருமேற்றிசை வீரன்-மேலைத் திக்கு நோக்கி நிற்கும் பார்சுவநாதப் பெருமான். நா-நாக்கு; நாட்டவர்-நாட்டிலுள்ளவர், உலகத்தவர் என்பதாம்.

2 நாடுதல்-விரும்புதல்; நாற்கதி-தேவர், மக்கள், நரகர், விலங்கு என்னும் நால்வகைப் பிறப்பு; ஆடுதல்-திரிதல்; தேவர்-தெய்வத் தன்மையர்; ஒரு கால்-ஒரு பொழுது; ஒரு கணப்பொழுது. விண்ணவன்-தேவன்.

3 விண்-ஆகாயம்; நிரயம்-நரகம்; மீள வருதல்-திரும்ப வருதல்; வடபாழி-திருநறுங்கொண்டையில் பார்சுவநாதர் எழுந்தருளி யிருக்கும் இடம். கவி-பாட்டு; துவக்குண்ணுதல்-கட்டுப்படுதல்; காதல்-அன்பு; சரண்-திருப்பாதம்; புகலிடம்.

உணர்வது, கண்டுமம்; கேவலப் பாவையை உள்ளத்துள்ளே
புணர்வது; மாற்றுவது, ஐம்பொறி வாயில்;-பொறிப் பணத்தால்
உணர் வரி வன்தலைப் பாப்பரசன் செய்தது ஒப்பி நிற்ப,
இணர் வரி வண்டு அரற்றும் பிண்டி நீழல் இருந்தவனே! 4

இருந்தும் கிடந்தும், நின்றும் சென்றும், நாள்தோறும்
இவ் உடம்பு,
வருந்தும் தொழில் அன்றி ஒன்று அறியாது; மனமும் இன்னம்
திருந்தும் குறியில் வருகின்றதில்லை; திருவடிக்கீழ்ப்
பொருந்தும் திறமும் உண்டே?-வடபாழிப் புயல்வண்ணனே. 5

வண்ணம் கரியது; அருள் நீரது; மறு ஒன்று இல்லாது
என்னும் திருமறு ஆயிரத் தெட்டினது; எண் குணத்தது;-
உள் நின்று எழும் ஒரு பேரின்ப வெள்ளத்து உம்பர் எல்லாம்
தன்னும் குடதிசைக்கே அடியேன் பெற்ற நன்மணியே. 6

---

4 கண்டுமம்-இதன் பொருள் விளங்கவில்லை; கேவலப் பாவை-முத்தி மகள்; புணர்தல்-சேர்தல், பொருந்துதல்; மாற்றுவது-போக்குவது; ஐம்பொறி வாயில்-ஐம்பொறிகளுக்கும் புலனாகும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்; பொறி-புள்ளி; பணம்-படம்; வரி-கோடு; பாப்பரசன்-பாம்புகளின் தலைவனாகிய தரணேந்திரன்; இணர்-பூங்கொத்து; வரி வண்டு-கோடுகளுடன் கூடிய வண்டு; அரற்றுதல்-ரீங்காரம் செய்தல்; பிண்டி-அசோக மரம்; நீழல்-நிழல்.

5 குறி-குறிக்கோள், இலட்சியம்; திறம்-வழி; புயல் வண்ணன்-புயல் போலும் நிறமுடைய பார்சுவநாதர்.

6 வண்ணம்-திறம்; மறு-குற்றம்; திருமறு-அழகிய மச்சம்; எண் குணம்-கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு; உம்பர்-தேவர்.

மணியால் அணிந்த செம் பொன்னெயில் போல,
இம்மண்ணில் விண்ணில்
அணியா விளங்கு நும் கோயில் பல் கோடிகளாயினும், என்
பிணி ஆம் பிறவிக்கு நன் மருந்து ஆம் பெருமான் அடிகள்
பணியாலயத்து அன்றி யான் அறியேன், உன்னைப்
பாவிப்பதே. 7

பாவிப்பது நின் பணவரங்கம்; பணிந்து ஏத்துவது உன்
வாவிப் பதும மலர்ச் சேவடியே; வாய்ந்து அடியேன்
சேவிப்பது நின் திருத் தொண்டரை;-திருமேற்றிசையாய்!-
வீவிப்பது, பண்டு செய்து செய்து ஈட்டிய வெவ் வினையே. 8

வினை தரும் துன்பப் பகைப் பெரும் போர் வென்று வீற்றிருப்ப
நினைதரும் தொண்டர் நினையும் திருநகர்-அந்தலத்தின்
வனைதரு முக்குடை, திக்குடை ஆடை, மணி உரகப்
புனைதரு பந்தற் பணமுடையார் மன்னும் பொன்னகரே 9

---

7 மணி-இரத்தினம்; செம் பொன்னெயில்-சமவ சரணம்; அணி-அழகு; பிணி-நோய், துன்பம்; பணியாலயம்-பாம்பின் படங்களாலாகிய இருக்கை.

8 பாவித்தல்-நினைத்தல்; பணிதல்-வணங்குதல்; ஏத்துதல்-துதித்தல்; வாவி-நீர்த்தடாகம்; பதும மலர்-தாமரை மலர்; சேவடி-சிவந்த நிறமுடைய திருவடி; சேவித்தல்-வணங்குதல்;வீவித்தல்-அழித்தல், கெடுத்தல்; வெவ்வினை-கொடிய தீவினை.

9 அந்தலம்-வானுலகம்; வனைதருதல்-செய்யப் பெறுதல்; மணி-இரத்தினம்; உரகம்-பாம்பு; பிணம்-பாம்பின் படம்; பொன்னகர்-அழகிய நகர், திருநகர் பொன்னகரே என இயைக்க.

**பொன்னும் துகிரும் புனைகுடை மூன்றுடன் பூசல் வண்டு**
**துன்னும் துணைப் பிண்டி தண் நிழற் செய்யவும், குளிகைமேல்**
**மன்னும் பருமணி வான் வெயில் வீச விடமுகப் பாம்பு**
**இன்னும் குடதிசை யாய்க்கு என்கொல் நிழல் இடுகின்றதே? 10**

**இடுசுடர் போல் நின்று எரியும் பணாமணி எப்பொழுதும்**
**விடுசுடர் பல் பகலாய் வெயில் வீசும்; வெவ்வினை வேர்**
**அடுசுடர் ஞானத் தவஞ்செய் கின்றாய்க்கு எழுந்த கதி படப்**
**படுசுடர் வாள் வெயிலும் படவேண்டும்-கோலப்**
**பண்ணவனே! 11**

**பண் அறிந்தோம் அல்ல; பாட்டு அறிந்தோம் அல்ல;**
**எட்டெழுத் தோடு**
**என் அறிந்தோம் அல்ல; இன்று அறிந்தோம்,**
**முற்றும் - எவ் உயிர்க்கும்**
**கண் அறிந்தோம் என்று அறிந்தோர் தொழும்**
**பனைக்காவணத்தார்**
**தண் நறுந் தோடு அவிழ் தாமரைத் தாள் நிழல் சார வந்தே. 12**

---

10 துகிர்-பவளம்; குடை மூன்று-சந்திராதிதகம், நித்திய விநோதம், சகல பாசனம் என்னும் ஒன்றன்மேல் ஒன்று அடுக்கிய மூன்று குடைகள். பூசல்-மோதுதல் இரைதல்; துன்னுதல்-நெருங்குதல்; துணர்-பூங்கொத்து; பிண்டி-அசோக மரம்; குளிகை-உச்சி; வான் வெயில்-மிகுந்த ஒளி.

11 சுடர்-நெருப்பு, நெருப்பின் கொழுந்து; பணாமணி-இரத்தினம்; பல்பகல்-பலநாள்; வெயில்-ஒளி; அடுதல்-கல்லி எறிதல், மாய்த்தல்; சுடர்-தோன்றும் சூரியன்; வாள்-ஒளி; கோலம்-அழகு.

12 பண்-இசை; எட்டெழுத்து-எட்டில் எழுதப்பெற்ற நூல்; எண்-கணிதம்; முற்றும்-முழுமையும்; கண்-இருப்பிடம், ஆதாரம்; காவணம்-பந்தல்; நறுந்தோடு-மணமுள்ள இதழ்; அவிழ்தல்-கட்டு விடுதல், விரிதல்.

சாரும் கதிகள் நமதே, முடிவில்; தகாதாமவரைக்
காரும் மணியும் அனையர் என்று ஏத்தி, எக் காடும் கண்ட
ஊரும் இரை கனை புள் ஒத்து நாம் உழந்து, ஓடிவந்து
சேரும் இடம்-எம்பிரான் நின்ற மேலைத் திசாமுகமே. (13)

முகம் மதி, ஓதி முகில், விழி நீலம், மொழி அமிழ்து என்று
அகம் மதி வாடினை, இல் நெடுநாள்; இனி, அண்டர் முன்னே
தொகு மதி முக்குடைக் கீழே விரிபணைச் சுந்தரர்க்கு ஆம்
புகு மதியே மதி; அல்லால் நினை மதி புன்மதியே. (14)

மதி உடையோம்; பெருவாழ்வு உடையோம்; எண் இல்,
மண்ணில் வைத்த
நிதி உடையோம் என்று இருப்பார் இருக்க-நிலவு முத்திப்
பதி உடையோம்; ஐம்பதம் உடையோம்; பணக் காவணத்தார்
துதி உடையோம்; இனி, என் உடையோம் என்று
சொல்லுவதே. (15)

---

13 தகாதாமவர்-தகுதியற்றவர்; கார்-மேகம்; மணி-சிந்தாமணி; கொடைக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுவன காரும் மணியும். ஏத்துதல்-புகழ்தல்; இரை-உணவு; கனைதல்-ஒலித்தல்; புள்-பறவை; உழத்தல்-வருந்துதல்.

14 மதி-சந்திரன், அறிவு; ஓதி-கூந்தல்; முகில்-மேகம்; விழி-கண்; நீலம்-நீலமலர், குவளை; மொழி-சொல்; அகம்-உள்ளம்; இல்-இல்லம், மனைவாழ்க்கை; அண்டர்-தேவர்; சுந்தரர்-அழகர்; ஆட்படுதல்-அடிமையாதல்; புன்மதி-கீழானபுத்தி.

15 மதி-அறிவு; எண் இல்-அளவு இல்லாது; நிதி-செல்வம்; முத்திப் பதி-வீட்டுலகம்; ஐம்பதம்-பஞ்ச மந்திரம்; அ, சி, ஆ, உ, சா. இவை பஞ்ச பரமேட்டிகளைக் குறிக்கும். அவராவர் அருகர், சித்தர், ஆசாரியர்கள், உபாத்தியாயர்கள், சாதுக்கள்.

சொல்லார், திருவறம்; சூடார், திருமணல்; தொண்டருடன்
செல்லார், இறைவர் திருநகர்; சூழத் திகழ்ந்து இலங்கும்
கல் ஆர் பணப் பெருங் காவணம் கண்டு, கண்ணீர் ததும்ப
நில்லார்;-பிறவிப்பிணிக்கு என் செய்வார்? - சிலர்
நீசர்களே. (16)

நீசக் கமடன் எறிந்த கற்குன்றினும், நீ நடந்த
வாசக் கமல மலரினும், தொண்டர் வலிய வினைப்
பாசத்தின் நீங்கித் தரும் கமழ் போதினும், - பல்மணி வாள்
வீசப் பணப்பந்தர் நின்றாய்க்கு - என்கொல்,
மெல்லியதே. (17)

மெல் இயல் மங்கையர் கொங்கைத் துணை விட்டு, விட்டுலகம்
செல்லிய சிந்திப்பவர் திகையார் - திருத் தீபையில் என்
சொல் இயல் மாலை புனை பணக் காவணம் சூழ்ந்து எறிக்கும்
கல் இயல் வெஞ்சுடர் ஆயிரமே வழி காட்டும் என்றே. (18)

---

16 திருவறம்-பரமாகமம்; தொண்டர்-அடியார்; திருநகர்-திருக் கோயில்; இலங்குதல்-ஒளிவிடுதல்; கல்-இரத்தினம்; நீசர்-இழிந்தோர்.

17 கமடன்-விசுவபூதி என்பவனின் மகன், பார்சுவநாதருக்குப் பகையாய்த் துன்பம் விளைத்தவன்; வாசம்-மணம், கமலமலர்-தாமரை மலர்; தொண்டர் தரும் கமழ் போது-அடியாரின் நெஞ்சமாகிய மலர்; மெல்லியது-மென்மையானது.

18 கொங்கை-முலை; துணை-இரண்டு; சொல்இயல் மாலை-சொற்களால் அமைந்த பாமாலை; எறிதல்-ஒளி வீசுதல்; கல்இயல் வெஞ்சுடர் ஆயிரம்-பார்சுவ நாதருக்குப் பணி செய்யும் பாம்பின் ஆயிரம் தலை மணிகளிலிருந்து வரும் ஒளி.

என்றும் கடி கமழ் தாமரைப் போதும், எப்போதும் வண்டு
துன்றும் நறுமலர்த் தொங்கல் அம் பிண்டியும், தொண்டருடன்
சென்று உம்பர் ஏத்தும் திருமேற்றிசையும், செழுங் கவிகை
ஒன்றும் இரண்டும் உடைத்து - எம்மை ஆளும்
ஒரு வடிவே. (19)

வடியும் பிணையும் அனைய கண்ணார் வணங்கும் மருங்கில்
துடியும் முலையும் நினைந்து உழல்வீர்! தொழுவீர் - துறந்தார்
முடியும் கடகமும் முத்து அணி ஆரமும் மூரிப் பைம்பொற்
கொடியும் குடையும் மிடை, திருமேற்றிசைக்
கொண்டலையே! (20)

கொண்டலை, அண்டர் தொழுதெழும் கோனை, எம்
கொற்றவனை,
வண்டு அலர் தாமரைப் பொற்றேர் வலவனை, மஞ்சு உறங்கும்
தண்டலை மாடு உயர் திபையுள் பச்சைத் தவக்கொழுந்தை-
கண்டு அலை ஆழி நிகர் ஆம் பிறவி கழிந்தனமே. (21)

---

19 கடி-மணம்; தொங்கல்-மாலை; உம்பர்-தேவர்; ஏத்துதல்-துதித்தல், புகழ்தல்; கவிகை-குடை; ஒன்றும் இரண்டும்-மூன்று; முக்குடை என்றபடி.

20 வடி-மாவடு; பிணை-பெண்மான்; இங்கே பெண்மானின் கண்ணைக் குறிக்கிறது; வணங்குதல்-வளைதல்; மருங்கு-இடை; துடி-உடுக்கை; பெண்களின் இடைக்கு உவமை. உழல்தல்-திரிதல், துன்புறுதல்; கடகம்-கைவளை; முத்து அணி ஆரம்-முத்து மாலை; மூரி-வலிமை; மிடைதல்-நெருங்குதல்; கொண்டல்-மேகம்; இங்கே மேகவண்ணராகிய பார்சுவநாதரைக் குறித்தது.

21 அண்டர்-தேவர்; கோன்-தலைவன்; கொற்றவன்-வெற்றி படைத்த தலைவன்; வலவன்-தேரோட்டி; தாமரையைப் பொற்றேராக உருவகித்தமையால் மலர்மேல் நடக்கும் பெருமானை வலவன் என்கிறார். மஞ்சு-மேகம்; உறங்குதல்-தூங்குதல், தங்குதல்; தண்டலை-சோலை; மாடு-பக்கம்; பச்சைத் தவக்கொழுந்து-பார்சுவநாதர்; ஆழி-கடல்; நிகர்-ஒப்பு; கழிதல்-நீங்குதல்.

கழியும் தெரிவையர் பற்று என்று - பொற்பணக் காவணத்தாய்!
மொழியும் திருமொழி யார் தெளிவார்? ஒரு மூழ்த்தமும் நீ
ஒழியும் பொழுது இல்லை; கேவலப் பாவையை
உள்வத்து உள்ளே
பொழியும் களி கொண்டு அகலாள், கமலப்
பொலங்குழையே. (22)

பொலங்குழை மாதர் நடம் செயும் பொற்றோடு அன்ன
புண்டரிக
நலம் கிளர் போது இரண்டாயிரம் சேவிப்ப, நாற்றிசையும்
இலங்கு இதழ் ஆயிரத்தெட்டுடன் ஈரிரு காத எல்லை
மலர்ந்தது, மேற்றிசையான் அடி ஏந்து மணமலரே. (23)

மணப்பந்தரில் உம்மை வாழ்த்திய மாதரும் மைந்தரும், பின்
பிணப்பந்தரில் கண்டு அரற்றா முன்னம் - பேதுறும் தீக்
குணப் பந்த வல்வினை பற்று அற மேற்றிசைக் கோளரவின்
பணப்பந்தர் நீழல் நின்றான் திருத்தாள் சென்று
பாடு மின்னே. (24)

---

22 தெரிவையர்-மகளிர்; மூழ்த்தம்-முகூர்த்தம், கணப்பொழுது; ஒழிதல்-நீங்குதல்; கேவலப்பாவை-முத்திமகள்; களி-களிப்பு, மகிழ்ச்சி; அகலுதல்-நீங்குதல்; கமலப்பொலங்குழை-தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்.

23 பொலம்-பொன்; குழை-குண்டலம் என்னும் காதணி; புண்டரிகம்-தாமரை; நலம் கிளர்தல்-அழகு மிகுதல்; போது-பூ; சேவித்தல்-பணிதல், வணங்குதல்; காதம்-காத தூரம்.

24 மணப்பந்தர்-திருமணம் நிகழும் பந்தல்; அரற்றுதல்-புலம்புதல்; பேதுறல்-மயக்கமுறுதல்; கோளரவு-கொடிய பாம்பு; பணப்பந்தர்-படங்களாலாகிய பந்தல்.

பாடியும், எந்தை பணைப்பந்தர் வாழ்த்தியும், பண்ணவன் தாள்
சூடியும் நன்னெறி சென்று துன்னார் - துவராடையின் மெய்ம்
மூடியும் வீழ்சடை கட்டியும் முக்கோல் பிடித்தும் முன்னீர்
ஆடியும் - மூடர் படுவர் அந்தோ, நின்று அலந்தலையே! (25)

தலைப்படுமின், குடதிக்கு நின்றார் அறம்; தாழ்குழலார்
வலைப்படு தெய்வம் வழிபடல் ஓம்புமின்; - வல்வினைப்பேர்
அலைப்படு துன்பப் பிறவிக்கடல் பின்னை ஆழமின்றி
நிலைப்படும்; அக் கடல் பொய்த்தரையாம், தம்மை
நேர்படவே. (26)

பட அரவின் குளிர்ப் பந்தரின்கீழ்ப் பச்சை மேகன் நின்ற
வட வரைபோல் வடபாழித் திருமணல் வாரிக்கொண்டு
தடவரவே பிணி போம்; தவ வேந்தரைச் சேர்ந்து ஒழுக,
அடவரும் சீற்ற வெங் கூற்றமும் போம், தம்மை
ஆசை அற்றே. (27)

---

25 எந்தை-எம் தந்தை, அருகதேவன்; பண்ணவன்-தேவன்; நன்னெறி-நல்வழி; துன்னுதல்-நெருங்குதல், அடைதல்; துவராடை-துவர் நிறமுடைய காவியாடை; முன்னீர்-கடல்; அலந்தலை-துன்பம்.

26 தலைப்படுதல்-கைக்கொள்ளுதல்; தாழ்குழலார்-வளர்ந்து தாழ்ந்த கூந்தலையுடைய மகளிர்; ஓம்புதல்-பரிகரித்தல், நீங்குதல்; நிலைப்படும்-நிலைக்கும், முடிவுக்குவரும்; நேர்படுதல்-அடுத்தல், வணங்குதல்.

27 பச்சை மேகன்-பார்சுவநாதன்; வடவரை-மேருமலை; தடவருதல்-தடவுதல்; தவவேந்தர்-தவ வேந்தராகிய அருகப் பெருமான்; அடவருதல்-கொல்ல வருதல்; கூற்றம்-யமன்; ஆசை-விருப்பம்.

அற்றோம், இருவினை; அஞ்சோம், நெடுந்துயர்;
ஆர்வம் செற்றம்
செற்றோம்; நினது அறமே தெளிந்தோம்; திருமேற்றிசைக்கே
உற்றோம்; இனி ஐயம் ஒன்றும் உறோம்; உனையே துதிக்கப்
பெற்றோம்;-முகில் வண்ண!-மற்று அடியோம் என் பிற
நின்றதே. (28)

நின்றும் இருந்தும் பணைப்பந்தர் வேந்தை நினைந்து நினைந்து
ஒன்றும் முனிவர் உலாவும் திருமுன்றில், உள்ளத்துள்ளே
நன்றும் பெருகும் நசைக்கடல் ஈன்ற நவைக்கடலைப்
பொன்றும்படி நின்று இறைக்க வல்லார்க்கு இடம்
பொற்றுலையே. (29)

துலை மேல் எடுத்து இடை தூக்கினன்போல் முறை சூழ் மறலி
கொலை மேல் வரினும், உயிர் கோட்படுகிலும்,
கொண்டல் ஒன்று
மலை மேல் வளர்வது போல் வடபாழி மகிழ்ந்தவர் தாள்
தலை மேலன; எங்கள் நாமேலன, அவர்தம் புகழே. (30)

---

28 அறுதல்-நீங்கிப்போதல்; இருவினை-நல்வினை, தீவினை; அஞ்சுதல்-பயப்படுதல்; ஆர்வம்-விருப்பம்; செற்றம்-சினம், வெறுப்பு; செற்றோம்-அழித்தோம்; உற்றோம்-அடைந்தோம்; ஐயம்-இதுவோ அதுவோ என்னும் சந்தேகம்.

29 ஒன்றுதல்-ஒருமை நிலையடைதல்; நன்று-பெரிது; நசை-விருப்பம்; நவைக்கடல்-குற்றமாகிய கடல்; பொன்றுதல்-இறத்தல், அழிதல்; பொற்றுலை-பொன்னுலகம்.

30 துலை-தராசு; இடை-பாரம்; முறை-நீதி; மறலி-யமன்; கோட்படுதல்-கொள்ளப் படுதல்; கொண்டல்-மேகம்.

புகழும் புலவர் புகழ்தற்கு அரியது; புன்னெறி நின்று
இகழும் கயவர் இகழ்தற்கு எளியது; - இறந்து அவமே
நிகழும் பொருளும் நிகழ்கின்றனவும் நினைப்பில் அங்கைத்
திகழும் கனிபோல் உணர் பகுஞ்சோதித் திருவறமே. (31)

திரு வளர் தீபைத் திருப்பாழியில் திருமேற்றிசைக்கே
உரு வளர் பச்சைமலை ஒன்றுமே புணை; உம்பர் செம்பொன்
தருவளர் வானம் தரும் - நிரையக்குழி தந்து அமையாக்
கரு வளர் பல்பிறவிப் பெருவேலை கடப்பவர்க்கே. (32)

கடல் ஒன்று ஒரு கதிர்மண்டலத்துக் கண்டது ஒப்பச் செங்கேழ்
மடல் ஒன்று தாமரைமேல் வருவீர்! ஒற்றை வைகலும்இவ்
விடல் ஒன்று செய்தம்; நன்று உண்டல்ல; என் செய்வது,
உம் அடியேன் -
அடல் ஒன்று வெம்படை ஏவி வெங்காலன்
அணிநிற்கிலே? (33)

அணியா அணிகலத்து எம்பெருமான் அறம் கேட்பவர்க்குத்
தணியாது அழலும் தழல் வெம் பசி இல்லை; தண் தரள

---

31 புன்னெறி-தீயநெறி; கயவர்-கீழோர்; அவம்-வீண்; அங்கை-உள்ளங்கை; கனி-நெல்லிக்கனி; 'உள்ளங்கை நெல்லிக்கனி' என்பது பழமொழி. திருவறம்-சினதருமம்.

32 புணை-பற்றுக்கோடு; உம்பர்-தேவர்; செம்பொன்தரு-செம்பொன் வழங்கும் கற்பக மரம்; நிரையக்குழி-நரகக்குழி; கரு-கருப்பம்; வேலை-கடல்.

33 கதிர்மண்டலம்-ஒளிவட்டம்; செங்கேழ்-செந்நிறம்; மடல்-இதழ்; கதிர் மண்டலம் தாமரைக்கும் கடல் பார்சுவநாதருக்கும் உவமை; செய்தம்-செய்தோம்; அடல்-வலிமை; படை-ஆயுதம்; படைஏவுதல்-படை விடுதல்; காலன்-யமன்; அணிநிற்றல்-அணுகிநிற்றல்.

34 அணிகலம்-ஆபரணம்; எம்பெருமான் அறம்-சினதருமம்; அழல்தல்-சுடுதல்; தழல்-நெருப்பு; வெம்பசி-மிகுந்தபசி; தண்-குளிர்ச்சி;

மணியால் விளங்கு ஒளி முக்குடை நிழல் அவ்
வாமன் வைகும்
பணி ஆர் மணி அரங்கம் பணிவார்க்கு இல்லை,
பல் பிணியே. (34)

பிணிகளும் தீவினையும் போய், நின் சரணம் பெய் சரம்பூ-
அணிகளும் சாந்தமும் ஆன நின் சேவடிக்கு ஆட்புகுந்தேன்;
பணிகளும் கொண்டு அருள் செய்யத் தகாவல்ல -
பாந்தட்பணா-
மணிகளும் பச்செனப் பச் செனத் தோன்றும் மரகதமே. (35)

மரகத மேனி, வெண்சாமரை, பூ மழை, மா மதுரச்
சுரகத கீதம் உடைய பெம்மாற்கு இடம் - சூழ் கதிரோன்
குரகத வீதி தொடு வடபாழிக் குடதிசையும்,
உரகத மன்னவர் பல் பணக் காவும், என் உள்ளமுமே. (36)

உள்ளத்து உணர்வை, உணர்வின் பயனை, உணர்வின் இன்ப
வெள்ளக் கடலை முகந்துகொண்டேன், இனி - மீன் ஒதுங்க
அள்ளற் பழனத்து நெல் அரிவார் அரிதாளில் முத்தம்
கொள்ளக் குறைவுபடாத் திருத்திபைக் குடதிசைக்கே. (37)

---

தரளமணி-முத்து; வாமன்-அருகன்; வைகுதல்-தங்குதல்; பணி-பாம்பு.

35 சரணம்-திருவடி; சரம்பூ-சரமாகத் தொடுத்தபூ; சாந்தம்-சந்தனம்; பணி-குற்றேவல், தொண்டு; பாந்தன்-பாம்பு; பணாமணி-படத்தின் தலையிலே உள்ள நாகமணி; பச்சென-பசுமையாக; மரகதம்-மரகத மணிபோல பசுமை நிறம் படைத்த பார்சுவநாதர். நாகத்தின் தலையிலுள்ள செம்மணி பார்சுவநாதரின் திருமேனி ஒளியால் பச்சை நிறமாகத் தோன்றியது என்க.

36 மேனி-திருவுடம்பு; மதுரம்-இனிமை; சுரகதம்-இசைப்போக்கு; ஏழிசை நிலை; கீதம்-இசைப்பாடல்; கதிரோன்-சூரியன்; குரகத வீதி-குதிரை செல்லுகின்றவழி; உரகத மன்னவர்-பாம்பரசன், தரணேந்திரன்; கா-சோலை.

37 வெள்ளம்-மிகுந்த நீர்ப்பெருக்கு; அள்ளல்-சேறு; பழனம்-வயல்.

குடதிசை நோக்கி, மரகதமா மணிக் குன்றம் ஒன்று
வடதிசை மேருவில் நின்றது போல், வடபாழியில் எம்
இடர்திசைநீங்க நின்றார்க்கு அறம் ஆயுதம்;
எண் குணம் பூண்;
படர் திசை ஆடை; உரகேந்திரன் பணப்பல் குடையே. (38)

குடை மன்னவர் முதல் எக்குலத்தோரையும் கோத்தெடுத்த
தொடை மன்னு செய்யுட் துறைக்கு ஓர்முடிவுஇல்லை;
-தோல் அறநூல்
நடை மன்னு தீபை வடபாழியுள் நின்ற ஞான ஒள்வாட்
படை மன்னவரை அல்லல் இனி யாரையும் பாடலமே. (39)

பாடலம் ஐம்பதம்; அம்புயத்து ஓர் பசுஞ்சோதி பொற்றாள்
சூடலம்; எந்தை துணையடித் தாமரைத் தூய நன்னீர்
ஆடலம்; ஆடாப் படிவத்து அருந்தவர்க்கு ஆவது ஒன்றும்
நாடலம்; நம் பிறவிக்கு என் செய்கோம், இனி நல்
மருந்தே. (40)

---

38 மேரு-மேருமலை; பொன்னிறமான மேரு பெருமான் வீற்றிருக்கும் செந்தாமரை மலருக்கு உவமை; திசைநீங்குதல்-மாறிப்போதல்; படர்திசை-பரந்த திக்கு; உரகேந்திரன்-பாம்பரசன்.

39 எக்குலத்தோர்-எல்லாக் குலத்தோர்; அந்தணர் முதலிய வகுப்பாரைச் சுட்டும்; தொடை-எதுகை மோனை முதலிய சொல்லின் தொடை நயம்; ஞான ஒளிவாள்-ஞானமாகிய ஒளி பொருந்திய வாள்; பாடலம்-பாடோம்.

40 பாடலம்-பாடுதலைச் செய்யோம்; ஐம்பதம்-பஞ்சமந்திரம்; சூடுதல்-அணிதல்; நீர் ஆடுதல்-குளித்தல்; ஆடாப் படிவத்து அருந்தவர்-நீராடாத உடம்பினையுடைய பெருந்தவ முனிவர், சமண முனிவர்; நாடுதல்-விரும்புதல்.

**மருந்தே! குடதிசை மாமணியே! மடமாதர் செவ்வாய்**
**முருந்தே முறுவல் முனிந்தோன் நீ நிற்க - முற்றுலகம்**
**தரும் தேவரும், அழிக்கும் தனித் தேவரும், சக்கரக்கைப்**
**பெருந் தேவரும் தேவரா எம்மில் நீங்கிப் பெறுபவரே. (41)**

**பெறுவார் பெறுக, உலகு ஒரு மூன்றும்; பிறவியின் வேர்**
**குறுவார் குறுகும் குடதிசையசய்! ஒரு குற்றம் இல்லா**
**மறுஆர் மரகத மா மணியே! மணி மூன்றையும் என்**
**இறுவாய் வரும் அன்றும் ஆம் என்று வரம் ஒன்று எனக்கு**
**அருளே. (42)**

**அருள் தரு செங்கண் பணக்காவணத்து அறிவா! அறியா**
**இருள் தரு நெஞ்சு உடையேன், ஒன்று கேட்பது உண்டு;**
**எவ் உயிர்க்கும்**
**பொருள் தரு நல்லறம் நீ தரும் போது, நின்பூம் பிண்டிசேர்**
**மருள் தரு வண்டினம் என் செய்தவோ தவம்?**
**யா தெளிவோ?. (43)**

---

41 மடமாதர் - இளம் பெண்டிர்; முருந்து-சிறகின் அடிமுள்;முறுவல்-பல்; முற்றுலகம் தரும் தேவர் - உலகைப் படைக்கும் பிரமதேவர்; அழிக்கும் தனித்தேவர்-அழித்தல் தொழில் செய்யும் உருத்திரன்; சக்கரக்கைப் பெருந்தேவர் - சக்கராயுதமுடைய திருமால்.

42 குறுதல் - பறித்தல்; கல்லி எறிதல், மறு-ஆயிரத்தெட்டுமறு, நல்லொழுக்கம். வரம் அருளுதல் - பெரும்பேறு நல்குதல்.

43 இருள் - மயக்கம்; அஞ்ஞானம்; நல்லறம் - திருவறம்; சினதருமம்; மருள் - இந்தளப்பண்.

தெளிக்கின்ற நல்லறம் தேர்ந்து உணரார், பல தீர்த்தங்கள் போய்க்
குளிக்கின்ற மாந்தர் தமக்கு என் செய்வார்? - குடக்கே திசை நோக்கு
அளிக்கின்ற நாதர் திருவடி நீர் படிந்து ஆடிச் சிந்தை
களிக்கின்றிலர்; அவர்தம் துதி கேட்கிலர்; கற்கிலரே. (44)

கற்கின்ற செந்தமிழ்ப் பாக் கொண்டு, 'இவர் செங்கை கற்பகம்; தோள்
மற்குன்றம்' என்று இனி வாழ்த்தல் செய்யேன்; - வடபாழி என்னும்
பொற்குன்றின் மீது, குடபால் முகஞ்செய்து, பூமிசையே
நிற்கின்ற கோல மணிக்குன்று எனக்கு இன்று நேர்பட்டதே. (45)

பட்டக் களிற்றின் மிசை வெண்நிலா விரிப்பத் திரு முத்த
வட்டக் குடை, நிழல் வேண்டுவரே, பின்னும்; - மன்னர் கன்னல்
வெட்டத் தரளம் சொரி திருத்தீபையுள் மேற்றிசையான்
முட்டப் பரந்த பண நிழற் காணும் முடி மன்னரே. (46)

---

44 தீர்த்தம் - புனிதநீர்; குடக்கே திசைநோக்கு அளிக்கின்ற நாதர்-மேற்கு நோக்கித் திருமுகமண்டலம் செய்துநிற்கும் பார்சுவநாதர்; சிந்தை - மனம்; துதி - புகழ்.

45 கற்பகம்-கற்பகமரம், கொடைக்குஉவமை; மல்-வலிமை; குடபால்-மேற்குத்திக்கு; பூமிசையே - தாமரை மலரில்; நேர்பட்டது - எதிரானது; காட்சிதந்தது.

46 பட்டக்களிறு - பட்டத்து யானை; அரசப்பெருயானை; மன்னர் - உழவர்; கன்னல் - கரும்பு; தரளம் - முத்து; முடிமன்னர்-பேரரசர் பண நிழல் - பாம்பின் பட நிழல்.

**மூடிக்கும் குறை இனி ஒன்று உளதோ? - இந்த மூன்று உலகும்**
**படிக்கும் புகழ்த்திருத் தீபை கண்டோம்; அப் பதியுற் அம்பொற்**
**கொடிக்கும்ப சாவரச் சூளிகைப் பாழிக் குடதிசைக்கே**
**வடிக்கும் திருவறத் தெள்ளமுது ஊற்று மடுத்தனமே. (47)**

**மடுக்கும் நறவு தெளியிருள் உண, மடவார் விழைவு,**
**கெடுக்கும் கொலை, பொய், களவு, புலால், பொருள் கேளிர், சுற்றம்**
**விடுக்கும் முனிவரை வைதல் ஒல்லார்; -முத்தவெண்குடைக் கீழ்**
**அடுக்கும் பணக்குடையார் அடி நீழல் அடைந்தவரே. (48)**

**அடையோடு நாள்மலர் கொண்டு அடைவாய்; இனி, ஆருயிர் மேல்**
**படையோடு காலன் வர எண்ணுமோ? - வினைப் பாவையர் கட்**
**கடையோடு வார் குழைமேல் சென்றுஉலாவி, கனதனம் சேர்ந்து**
**இடையோடு நையும் நெஞ்சே! - எங்கள் மேற்றிசை ஈசனை யே. (49)**

---

47 குறை - வேண்டும்பொருள்; படித்தல் - துதித்தல்; சூளிகை-உச்சி வடித்தல் - கசிதல்; மடுத்தல் - பருகுதல்.

48 நறவு - கள்; உண - உணவு; விழைவு -விருப்பம்; புலால் - மாமிசம்; கேளிர் - உறவினர்; சுற்றம் - சூழ்ந்துள்ள நட்பினர் முதலியோர்; வைதல் - இகழ்ந்து பேசுதல்; ஒல்லார் - பொருந்தார்; செய்யார்; பணக்குடையார் - பாம்பின் படத்தாலாகியகுடையினையுடையார்.

49 அடை - இலை; நாள்மலர் - அன்று மலர்ந்த பூ; படை - யமன் தூதர்; காலன் - யமன்; கட்கடை-கண்ணின்நோக்கம்; வார்குழை-நீண்டகுண்டலம்; கனதனம் - பருத்தமுலை;நைதல்-வருந்துதல்.

ஈசனை, நான்முகனை, திருமாலை, இன்னாப்பிறவி
நாசனை நம் திருமேற்றிசை நாதனை, நாற்றிசையாம்
தூசனை, ஆயிரம் ஆயிர ஞாயிறு தொக்க மிக்க
தேசனை, - யாம் அடைந்து, இன்றே வினையிருள்
செற்றனமே. (50)

செற்றோம் இருவினை; செய்தவத்தார் பெறும் சித்தி அன்றே
பெற்றோம்; இனி நாம் பெறாதது என்னோ? - பிழையா அறநூல்
கற்றோர் புகழும் திருத் தீபையுள் பணக் காவணத்தார்
பொற்றாமரையில் உலாவரும் தாமரை போது கண்டே. (51)

போது கண்டால் எந்தை பொன் அடிக்கு ஏற்றி, எப்போதும்
அன்பாய்
ஓது கண்டாய்! திருமேற்றிசையான் என்று; - ஒளி இழையார்
சூது கண்டால் அன்ன கொங்கைச் சுவடு தொடர்ந்துபின்போய்
யாது கண்டாய்; இங்ஙனே நெடுநாள் உழந்து? - என்
நெஞ்சமே! (52)

நெஞ்சே! கொடிய மறலியும் சேனையும் நேர் வரும் என்று
அஞ்சேன்; இனி, நம்மில் யார் வலியார்? சுரேசனும் ஏவ, அவ்
வெஞ்சேனையும் கெடத் தியான ஒள்வாள் கொண்டு
வென்றார்
செஞ்சேவடிக்கு அல்லவோ, இன்று நான் தொண்டு
செய்கின்றதே! (53)

---

50 ஈசன் - அருகபெருமான்; இன்னாப்பிறவி-துன்பப்பிறப்பு; நாசன்-நாசம் செய்பவன்; கெடுப்பவன்; தூசன்-திசை ஆடையுடையான்; ஞாயிறு-சூரியன்; தேசன்-ஒளிபடைத்தவன்; செற்றல்-அழித்தல்.

51 சித்தி - மோட்சம்; பிழையா அறநூல் - மெய்யான அறநூல்கள்.

52 போது - மலர்; ஏற்றுதல் - அணிதல்; சூது - சூதாடுகருவி; கொங்கை - முலை; உழத்தல் - அலைந்து திரிதல்; துன்புறுதல்.

53 மறலி - யமன்; சேனை - யமதூதர்களாகிய படை; சுரேசன் - இந்திரன்; தியான ஒள்வாள்-தியானமாகிய ஒளிபொருந்தியவாள்.

**செய்யோம் அருந்தவம்; சேவடிக்கு ஆவன செவ்வி மென் பூக்**
**கொய்யோம், முனிவர் குழாம் அணுகோம்; குல மேரு என்று**
**வெய்யோன் வலங்கொள் வடபாழியில் பச்சை மேகம்**
**என்னோம்;**
**அய்யோ பிறந்து அவமே வினைப் பாசத்து அழுந்தினமே.(54)**

**அழுந்தும் துயர்ப்பிறவிக்கடல்வாய் அலைப்புண்டு அழுந்தி**
**எழுந்தும் பதைப்பதற்கு என் கடவோம்; இமையோர்**
**நெடுங்கண்**
**விழுந்தும் களிப்ப எழும் பசுஞ்சோதி விசும்பு முட்டக்**
**கொழுந்தும் விடக் குடதிக்கில் நின்றார் எங்கள்**
**கொற்றவரே. (55)**

**கொற்றக்குடை, சுடர்மண்டிலம், பூமழை, கோத்த முத்தக்**
**கற்றைக் கவரி, முரசு, சிங்காசனம், காமர் வண்டு**
**சொற்றத் தழைக்கும் அசோகம், துவனி - தொழான் நிருதன்**
**செற்றப் படை கடந்தார்க்கு உம்பர் கோன் செய்**
**திருச்சிறப்பே. (56)**

---

54 செவ்வி - பதங்கெடாதது; அழகு; கொய்தல் - பறித்தல்; குழாம்- கூட்டம்; அணுகுதல் - அடுத்தல்; சேர்தல்; மேரு - மேருமலை; வெய்யோன் - சூரியன்; வலங்கொள்ளுதல் - வலமாகச்சுற்றுதல்; அய்யோ - இரக்கக்குறிப்பு; அவம்-வீண்; அழுந்துதல்-மூழ்குதல்; தோய்தல்.

55 அலைப்புண்ணுதல் - நிலையின்றி அங்கும் இங்கும் அலையப் பண்ணுதல்; அழுந்துதல் - மூழ்குதல்; கடவோம் - செய்வோம்; இமையோர் - தேவர்; முட்டுதல் - தாக்குதல்; குடதிக்கு-மேற்குத் திசை; கொற்றவர் - தலைவர்; அருகப்பெருமான்.

56 கொற்றம் - வெற்றி; சுடர்மண்டிலம் - ஒளிவட்டம்; கற்றைக்கவரி- தொகுதியான வெண்சாமரை; காமர் - அழகு; சொற்றல் - ஊது தல்; துவனி - தெய்வக்குரல்; நிருதன் - அசுரன்; கடத்தல்- வெல்லுதல்; உம்பர்கோன் - தேவேந்திரன்; இப்பாடலில் அருகப்பெருமானுக்குத் தேவேந்திரன் செய்யும் எண்வகைச் சிறப்புகள் சுட்டப்பட்டுள்ளன.

சிறக்கும் பெருஞ்சித்தி சிந்தை செய்யோம்; நினைச் சிந்தை
செய்யாது
இறக்கும் கொடுவினை மாக்களை நீங்கி, இருவினையும்
துறக்கும்திருமேற்றிசைச் சுடரே என்று சொல்லிச் சொல்லிப்
பிறக்கும் பிறவி எல்லாம் நினையே தொழப்பெற்றனமே. (57)

பெற்றெடுத்தாரும் கிளையும் என்னோரும் பிறர்தமக்கு ஒன்று
உற்றிடத்தால் வந்து உதவல் அன்றோ - ஒரு தனியே நீ
பிற்றொடர்ப்பாடு இகந்தாய் - நின்றதெப்பமது ஏற்று
அவுனன்
விற்றொடர்ப்பாய் அவன் வெங்கணை மாரி விழவிழவே. (58)

விழப்போர் கடந்து ஆடும் வெங்கடற்று இனைவது -
மெல்லிநல்லார்
அழப்போம் உடம்பு சுமந்து உழல்வீர்! - ஒற்றை ஆழியந்தேர்
எழப்போக ஒங்கும் திருப்பாழி இந்திர நீலவெற்பைத்
தொழப்போம்; வழிப்போது உமக்கு அதுபோலும் துணை
இல்லையே. (59)

---

57 சிந்தைசெய்தல் - நினைத்தல்; மாக்கள்-மிருகப்பிராயமான மக்கள்.

58 பெற்றெடுத்தார் -தாய்தந்தையர்; கிளை - சுற்றத்தார்; என்னோர்- ஏனையோர்; உற்றிடம் - துன்பம்வந்தஇடம்; இகத்தல்- நீங்குதல் கணை மழை - அம்பு மழை.

59 வெங்கடறு - கொடிய காடு; இனைதல் - துன்புறுதல்; மெல்லி நல்லார்-மென்மைத்தன்மைவாய்ந்தபெண்கள்; உழல்தல்-திரிதல், துன்புறுதல்; ஒற்றை ஆழியந்தேர் - ஒருசக்கரமுடைய சூரியனது தேர்; இந்திர நீலவெற்பு-பார்சுவநாதரைச் சுட்டும்; வழிப்போது - வழிநடையின் பொழுது; போது - பொழுது.

துணையும், பெருங்கடற் சுற்றமும், சுற்றக் கடல் கடக்கும்
புணையும், பெறல் அரும் போகமும், ஆவன—பொன்முடி மேல்
அணையும், தவம் செய்த ஐந்தலைப் பாம்பும் அசோகின்
அம்போற்
பணையும் கவிப்ப நிற்கும் பரஞ்சோதி பதயுகமே. (60)

பதம் பார்த்து அரசர் கடை நின்று, உள்புக்குப் பணிந்து,
அவருக்கு
இதம் பார்த்து உரை செய்வது எண்ணி நில்லார்; - இகல் வாள்
அவுணன்
கதம் பார்த்து, அரவரசன் பணத்தால் இட்ட காவணத்தார்
சுதம் பார்த்து, அவர் அருளிச் செய்த மாற்றம்
துணிந்தவரே. (61)

துணிந்தோம்; பிறவித்துயர் ஒழிந்தோம்; தொண்டர்
தம்மிடைப்புக்கு
அணிந்தோம்; குடதிசை முன்றில் திருமணல்; அத் திசைக்கே
தணிந்தோம்; பிறப்பு அறத் தாழாப் பெரு நசை தாழ்ந்து,
சென்னி
பணிந்தோம்; பணக் காவணப் பற்றில் ஆவினைப்
பற்றினமே. (62)

---

60 புணை-தெப்பம்; பெறல் அரும் - பெறுதற்கு அரியவான; போகம்- இன்பம்; பொன்முடி-அழகியதிருமுடி; பணை - கிளை; கவித்தல்- மூடுதல்; பதயுகம் - இரண்டு திருவடிகள்.

61 பதம் - ஏற்றகாலம், செவ்வி; கடை - வாயில்; இதம் - இன்பம்; இகல் - மாறுபாடு; வாள் - கொடுமை; கதம் - மிகுசினம். அரவரசன்-தரணேந்திரன்;சுதம் - பரமாகமம்; மங்கலம்; மாற்றம் - உரை இங்கே பரமாகமம்.

62 ஒழிதல் - நீங்குதல்; தொண்டர் - அடியார்; முன்றில் - முற்றம் தணிதல்-தாழ்தல், வணங்குதல், நசை-விருப்பம்; சென்னி-தலை பற்று - இடம்; ஆ - பசு; தேவலோகப்பசுவாம் காமதேனு போல அருட்கொடை நல்குபவர்.

பற்றுடையாரைப் பரமர் என்று ஏத்திப் பலபதங்கள்
பெற்றுடையார் உளராயினும், பச்சைப்பிரான், உலகை
முற்றுடையான், ஒளி மூன்று உடையான், திசை நான்கும் அன்றி
மற்று உடை ஆடை இல்லா என்னை ஆளுடை வானவனே. (63)

வானும் புவியும் தொழுமணியே! உன்னை வாள் அவுணர்
கோனும் படையும் பொரவந்த நாள், அன்பு கூர்ந்து உரகன்
தானும் துணைவியும் செய்த நன்றிக்கு அவர்தம்மை அல்லால்
யானும் கிளையும் துதியால் தொழும் தெய்வம் எத்தெய்வமே. (64)

எத் திக்கிலும் நின்று இமையோர் வணங்க, இணை இல் இன்பச்
சித்திப் பெரும் பதம் சென்று அடைவார்:-திருமேற்றிசைக்கே
மூத்தின் பொலி குடை மூன்றுடன் மாணிக்கம் மொய்த்த துத்திப்
பத்திப் பணக்குடை ஐந்து உடையாரைப் பரவினரே. (65)

---

63 பற்றுடையார் - பற்றுகளைக் கொண்டவர்; பரமர் - மேலோர்; தெய்வங்கள்; ஏத்துதல் - துதித்தல்; பதங்கள் - பதவிகள்; பச்சைப்பிரான் - பச்சைவண்ணராகிய பார்சுவநாதர்; முற்றுடையான் - முழுவதுமாக உடையவன்; ஒளி - ஒளிவட்டம்; பிரபாவலயம்.

64 வான்-வானுலகத்தார்; தேவர். புவி-பூமியிலுள்ளாராகிய மக்கள் பொரவருதல்-போர் செய்ய வருதல்; கூர்தல்-மிகுதல்; உரகன்-பாம்பு ஆகிய தரணேந்திரன்; துணைவி-மனைவி; நன்றி-உதவி; எத்தெய்வம்-எந்தத்தெய்வம்.

65 சித்திப்பெரும்பதம்-வீட்டுலகம்; அடைதல்-சேர்தல்; துத்தி-புள்ளி பணக்குடை ஐந்து-ஐந்தலைப் பாம்பு கவிக்கும் ஐந்து குடை; பரவுதல்-துதித்தல்.

பரவார், மறந்தும் பிறிது ஒரு தெய்வம்; பசி பிணி கூர்ந்து
இரவார், புறங்கடை நின்று ஒருநாளும்; இழி கதிவாய்
விரவார்; விரவுவது உம்பர் குழாத்திடை; - மேற்றிசை வாழ்
அரவு ஆர் பணிநிழலார்க்கு அன்பு கூரும் அடியவரே. (66)

அடி தொழு தொண்டர் பணி தலைமேற்கொண்டு அரவரசின்
முடி கெழு பல் பணத்தானைப் பணிந்து உய்ம்மின்;-
மூண்ட சினத்து
இடி கெழு வெங்குரல் கூற்று எதிர்ந்தால், உமக்கு
எவ்விடத்தார்;
வடி கெழு வேற்கண் மகளிரும் கேளிரும் மைந்தருமே. (67)

மைந்தர்க்கு இரங்கி, மகளிர்க்கு இணங்கி, வழி அறியா
அந்தர்க்கும் வீட்டுநெறி தருங்காண்;- மணி வஞ்சி என்னும்
கந்தர்ப்பன் வந்து அணுகா வடபாழிக் கடவுள் பணப்
பந்தர்ப் பரப்பி நிறைத்த செஞ்சோதிப் பருமணியே. (68)

பருமணி வேயும் பணப்பந்தரில் பச்சை மா முகில் நின்று
அருள்மழை நாளும் தர வல்லதே; தன் அடியவர்க்குத்
திருமகள், பூமகள், சீர்மகள் நாமகள், சித்தி என்னும்

---

66 பிணி-நோய்; இரத்தல்-யாசித்தல்; புறங்கடை-வெளி வாசல்; இழிகதி-தீப்பிறப்பு; விரவுதல்-கலத்தல்; சேர்தல்; உம்பர்குழாம் தேவர்கூட்டம்; அன்பு கூர்தல்-அன்புமிகுதல்; பக்தி செய்தல்.

67 பணி-கட்டளை; உய்தல்-பிழைத்தல். கூற்று-யமன்; வடி-மாவடு; வேற்கண்-வேல் போன்ற கண்; கேளிர்-சுற்றத்தார்.

68 மைந்தர்-புதல்வர்கள்; அந்தர்-குருடர்;மணிவஞ்சி-அழகியவஞ்சிக் கொடி போன்ற பெண்; கந்தர்ப்பன்-மன்மதன்; செஞ்சோதி-நாகரத்தினத்தினால் வெளிப்பட்ட செவ்வொளி.

69 வேய்தல்-பொருத்துதல்; பரப்புதல்; பச்சை மாமுகில்-பார்சுவ நாதர்; திருமகள்-இலக்குமி; பூமகள்-பூமாதேவி; சீர்மகள்-வெற்றி

பெருமகள் போகம் எல்லாம் இங்கும் அங்கும்
பெருகுவதே. (69)

பெருகும் தவங்களில் என் செய்தவோ - பின்பு பேணித்
தொண்டர்
உருகும் குடதிசை வீரன் உலாவர, உற்று அமிர்து
முருகும் ததும்பும் செந்தாமரைமேல் மொய்த்து, முன்னும்
பின்னும்
மருகும், பிரிவு அறியா அரவுடன் சேவிக்கும் ஆடல்
வண்டே. (70)

வண்டு அலர் தாமம் பெறல் இன்றி வல்வினையேன் மகள் தன்
கண் துயிலாள் என்னும்கைக்கிளைத் தேவரைக் கண்டு
இறைஞ்சித்
தொண்டு செய்வார் செய்க; யான் தொண்டு, சூழ்திசையே
வெண்துகிலாக உடை பணக் காவண வீரனுக்கே. (71)

---

மங்கை; நாமகள்-கலைமகள்; சித்தி-முத்தி; இங்கு-இவ்வுலகம் அங்கு-மறுவுலகம்; வானுலகம்.

70 பேணுதல்-விரும்புதல்; உருகுதல்-மனம்நெகிழ்தல்; உலாவருதல் வீதியில் எல்லார்க்கும் காட்சிதர எழுந்தருளுதல்; அமிர்து-தேன் முருகு-மணம்; மொய்த்தல்-நெருங்குதல்; மருகும்-மறுகும்;சுழலும் ஆடல் வண்டு-பறந்து திரியும் வண்டு.

71 அலர்தல்-மொய்த்தல்; தாமம்-பூமாலை; கைக்கிளைத்தேவர்-ஒருதலைக்காமத்திற்கு இடமாய் அமைந்த தெய்வங்கள்; இறைஞ்சுதல்-வணங்குதல்; தொண்டு செய்தல் - அடிமை செய்தல்; வெண்துகில்-வெள்ளைஆடை; வீரன்-பொறிபுலன்களைவென்று உயர்ந்த அருகப்பெருமானாகிய பார்சுவநாதர்.

வீரனை, மும்மதில் வேந்தனை, வேரி. அம் தாமரைப் பூந்
தேரனை, மேற்றிசைச் செல்வனை, மல்லல் அம் தீபை என்னும்
ஊரனை, ஊரும் பேயருமே இல்லானை, ஓராயிரத்து எண்
பேரனை-எத்திறத்தான் என்று நாம் சில பேசுவதே. (72)

பேசார் இறைவர் பணப் பெருங் காவணம், பேர் அறம் கொண்டு
ஆசார நன்மணிப் பூண் அணியார், முகந்து அங்கம் எங்கும்
பூசார் அவர் திருமுன்றில் திருமணல், புன்னெறியை
ஏசார் பிறர் நம்மை ஒப்பார் இருக்கின்றது எப்படியோ? (73)

படியேன், நினது அறமல்லது: பாரில் எப்பற்றும் அற்ற உன்
அடியேற்கு அருள் செய்யும் எந்த நாள் நாள்?-அன்று அவுணன் விட்ட
இடியேறு என வந்து எதிர்ந்து எழு சீற்றத்து இடிதடுத்த
கொடியே! எறி சிகரத் திருப்பாழி குணக்குன்றமே. (74)

---

72 மும்மதில் வேந்தன் -சமவசரணத்தில் வீற்றிருக்கும் அருகப்பெருமான்; வேரி-தேன்; தேரன் -தேரையுடையவன், மல்லல்-வளப்பம்; ஓராயிரத்து எண்பேரன்-ஆயிரத்தெட்டுத்திரு நாமங்களை உடையவன்; எத்திறத்தான்-என்ன தன்மையுடையான்

73 காவணம்-பந்தல்; ஆசாரம்-ஒழுக்கம்; முகத்தல்-அள்ளுதல், வாரியெடுத்தல்; அங்கம்-உடம்பு; புன்னெறி-தீயவழி; ஏசுதல்-இகழுதல்.

74 படித்தல்-கற்றல்; அறமல்லது - அறம் அல்லாத பிற; அறமே கற்பேன் என்றபடி; அவுணன்-அசுரன்; இடியேறு-உக்கிரமான இடி; சீற்றம்-மிகுசினம்.

குன்றால் வளைப்புண்ட பூகண்டமும் அண்டர்கோன் உலகும்
என்றால் அவை எட் பகவும் ஒவ்வா-தனது எல்லை வயம்
சென்றார் வினை துறக்கும் திருத் தீபைக் குட திசைக்கே
நின்றான் இருக்கின்ற வண்ணம் எப்போதும்
நினைப்பவர்க்கே. (75)

நினைக்கின்ற நெஞ்சும், மொழிகின்ற நாவும் கண்ணீரினின்று
நனைகின்ற மெய்யும், பணிகின்ற சென்னியும், நாகர்தம் கோன்
வனைகின்ற பந்தற் பணக் காவணத்தார் அடிமலரான்
புனைகின்ற கையும் உடையவராம்—எம் புரவலரே. (76)

புரம் கொண்ட பொன்மலை வில்லியை அம் மலைவல்லி புல்லச்
சரம் கொண்ட வில்லி திகிரி செல்லாப் பாழி வெற்பைச்
சிரம் கொண்டு இறைஞ்சியும், வாய் கொண்டு வாழ்த்தியும்,
செம்மலர்தூய்க்
கரம் கொண்டு நீர் தொழுவீர்; வெவ்வினை தன்னைக்
கைவிடுமே. (77)

---

75 குன்று-மலை; சக்கரவாளமலை; பூகண்டம்-பூமிப் பரப்பு, அவுணர் கோன்-தேவராசனாகிய இந்திரன்; எட் பகவு-எள்ளின்பிளவு; ஒவ்வுதல்-பொருந்துதல்.

76 மொழிதல்-பேசுதல்; நா-நாக்கு; மெய்-உடம்பு; பணிதல்-வணங்குதல்;சென்னி-தலை; நாகர்தம்கோன்-பாம்பரசன்; தரணேந்திரன், அடிமலரான்-திருவடிமலரை; புரவலர்-காப்பவர்.

77 புரம்-முப்புரம்; பொன்மலை-மேருமலை; வில்லி-வில்லையுடையவன்; பொன்மலைவில்லி-மேருமலையை வில்லாகக்கொண்ட சிவபெருமான்; மலைவல்லி-மலைமகள்; உமாதேவி; சுரம்-அம்பு; சரம் கொண்ட வில்லி-மன்மதன்; திகிரி-ஆணைச்சக்கரம்; இறைஞ்சுதல் -வணங்குதல்; தூய்-தூவி; கரம்-கை.

கைவிடப் போக்கிய காதியஞ் சோதிதன் கார் வணம் ஆம்
வெவ் விடப் பாம்பு ஒன்று மேற்றிசைக்கே நிற்பப் போற்றி
செய்வார்;
அவ்விடத்தே வந்து நீயும் நின்றாய்; நெஞ்சம் ஆனதற்பின்
எவ்விடத்தே நிற்கில் என், பல கோளும் இனி உனக்கே? (78)

உனது என உண்டு என்று ஒரு பொருள் நிற்க, உலகம் எல்லாம்
நினது என வேண்டுதியாயின்,-நெஞ்சே!-நினையாது இரு தன்-
தனது என; முத்தி தரும் பச்சை மேகம் தரும் பொருளே
எனது எனது என்று இருப்பாய், வடபாழியிடை
மகிழ்ந்தே. (79)

இடைபடு பொன்னின் இயன்று உரகேந்திரன் இட்ட வட்டக்
குடைகெழு பல் பணத்தானைப் பணிமின்; கொலை உழந்து
கடைபடுவீர் விடுவீர்; கெடுவீர், நாற்கதியில் செல்லில்;
தடைபடுவீர், என்றும் நெஞ்சினில் நீர்படும் சஞ்சலமே. (80)

சஞ்சலம் தீரத் திருவாய் மொழிந்து, அத் தருமம் வைகி,
அஞ்ச வெந்தீவினை சேர் வழி மாற, மழை உருமேறு
அஞ்ச வந்தாலும் அழியாமையில் அடியேனுடைய
நெஞ்சம் அன்றோ,-நெடியாய்!-வடபாழியில் நிற்பதுவே (81)

---

78 காதிபோக்கிய சோதி என்க, காதிகர்மங்களைக் கடந்தவர்; கார்வணம்-கரியநிறம்; விடப்பாம்பு-நஞ்சுடையநாகம்; போற்றி செய்தல்-துதித்தல்; கோள்-கிரகம்; சூரியன் முதலிய கோள்கள்.

79 நெஞ்சுக்கு உரைத்த அறிவுரைப்பாடல்; வேண்டுதல்-விரும்புதல்; பச்சை மேகம்-பார்சுவநாதர்.

80 இடைபடுபொன்-மாற்று உயர்ந்தபொன்; கடைபடுதல்-துன்பமுறுதல்; தடைபடுதல்-தடுத்துநிறுத்தப்படுதல்; சஞ்சலம்-துயரம்.

81 தருமம்-நல்லறம்; வைகுதல்-தங்குதல்; மாறுதல்-நீங்குதல்; மழை-மேகம்; உருமேறு-இடி; நெடியாய் என்றது பார்சுவநாதரைக் குறித்த விளி.

நீ செய்வது ஒன்று உண்டு, நின் அடியேனுக்கு 'நெஞ்சம் நல்லார்
வாய் செய்ய, கண் செய்ய' என்று ஓதியே மதி மயங்கி, மற்றும்
பேய் செய்வ செய்து உழலாமல் பிடித்து, என்னைப் பெற்றெடுத்த
தாய் செய்வதே செய்தல் காண்-பச்சை மேனித் தவக்கொழுந்தே! (82)

கொழுந்தும் தளிரும் மலரும் கெழுமிக் கோல வண்டும் அச்
செழுந் தும்பியும் திரு நிழற் கீழ்ச் செழுந்தேன் நறுந்தேனும்
விழுந்து உண்டு எழும் களி கண்டுகொல்-தொண்டர் விழியும் நெஞ்சம்
அழுந்துங் கடவுட் பணநிழல் வேண்டிற்று அறிவனுக்கே. (83)

அறிவான் அறிவின் அறிய வொண்ணாததும், அன்பு உருகிச்
செறிவார் செறிந்து தெரியத் தெரிவதும்,-தீவிழிக்கண்
பொறிவாள் அரவின் பணைப்பந்தரில் பொற்பொகுட்டுச் செங்கேழ்
வெறி ஆர் கமலத்து யான் கண்ட வேத விழுப்பொருளே. (84)

---

82 நல்லார்-மகளிர்; ஓதுதல்-சொல்லுதல்; மதி-அறிவு; பெற்றெடுத்த தாய் செய்வ செய்தல்-பெற்றதாயினும் மிகவும் பரிந்து உதவுதல்.

83 கொழுந்து-இளந்தளிர்; தளிர்-இலை; கெழுமுதல்-நிறைதல்; கோலம்-அழகு; தும்பி-வண்டில் ஒருவகை; தேன்-வண்டில் மற்றொருவகை; நறுந்தேன்-வாசனை மிக்க பூந்தேன்; களி-களிப்பு; விழி-கண்; அழுந்துதல்-தோய்தல்; பண நிழல்-பாம்பு படத்தின் நிழல்.

84 அறிவான்-அறிகின்ற ஒருவன்; செறிதல்-நெருங்குதல்; கூடுதல். தீவிழி-நெருப்புப் போல் சிவந்த கண்; பொறி-புள்ளி பொகுட்டு-தாமரை மலரின் நடுக் கொட்டை; கேழ்-நிறம்; வெறி-மணம்; கமலம்-தாமரை; விழுப் பொருள்-மேலான பொருள்.

பொருநாகர் பந்தற் பிரான் திருமேற்றிசை போற்றித் தொண்டர்
வருநாள் வழங்கும் திரு மா மணலை மனை துறந்து
கருநாடி தந்த அக் கேவலப் பாவையைக் கைப்பிடிக்கும்
திருநாள் வர, முளைச் சாந்தும் பண்ணாம் என்பர்
தேர்ந்தவரே. (85)

தேரும் சுருதித் திசைமுகத்தோன் முதல் தேவர் தம்மை
சாருமவர் மெய்த்துயரம் தணிக்கிலர்; தம் அடியேம்
கூரும் பிணி தணித்தற்கு எங்கள் நாதர் குடதிசைக்கே
வாரும்; திருமனல் வாரா நெறியும் வருவிக்குமே. (86)

வருவது போவது ஒழியாப் பெருவழி மாற்றவல்லார்
ஒருவரை நாடி இனி உழலேன்; உலகு ஏழினும்தன்
திருவருளாழி நடாத்தும் குடதிசைச் செங்கனிவாய்க்
கருவரை கண்டு குவிந்து அகலாது என் கரதலமே. (87)

கரத்தின் தொழுது முடியின் பணிமின்-கமடன் விட்ட
சரத்தில், சனகையில், தாராசிவத்தில், தமிழ் மயிலைப்
புரத்தில், கரி வலஞ்சூழ் நகர் பொன்மண்டபத்தில், அண்டர்
சிரத்தில், திருத்தீபையில் திருமேற்றிசைச் செல்வனையே. (88)

---

85 மனை-இல்லம்; மனைவி; கேவலப் பாவை-முத்தி மகள்; முளை-முளைப்பாரி; சாந்து-சந்தனம்.

86 சுருதி-வேதம்; திசை முகந்தோன்-நான்முகனாகிய பிரமன்; சாருமவர்-அடுப்பவர்; சேர்ப்பவர்; கூர்தல்-மிகுதல்; வாரா நெறி-வீட்டுலகிற்கான வழி.

87 வருவது போவது-பிறப்பதும் இறப்பதும்; ஒழியாமை-நீங்காமை; உழல்தல்-திரிதல்; உலகு ஏழு-ஏழ் உலகங்கள்; ஆழி-சக்கரம்; அகலாது-நீங்காது; கரதலம்-கை.

88 கரம்-கை; முடி-தலை; சரம்-அம்பு; மயிலைப்புரம்-மயிலாப்பூர்; பொன் மண்டலம்-சமவ சரணம்; அண்டர்-தேவர்; சிரம்-தலை.

செல்வழி தேடி, வரும் வழி நாடி, திகைத்து, அவமே
கல்வழி ஓடிக் கடைப்படுவீர்! - கவராது செல்லும்
நல்வழி யாவது தொல்லறமே என்று நற்றவத்தோர்
சொல்வழியே சென்று, மேற்றிசை பாடித்
தொழுமின்களே. (89)

மின்னினும் வான் இடு வில்லினும் வீழ்பெயல் மொக்குளினும்
புல் நுனி நீரினும் நில்லாது இளமை; பொருளும் அற்றே;
என் இனி யாம் செய்வது! என்று, நெஞ்சே! இரவும் பகலும்
உன் நினைவாய் உணர்வாய், பச்சை மேகத்து
ஒளியினையே. (90)

ஒளிக்கும் பழவினை; நாளிடைப் பார்த்து உயிர் கோள்
இழைத்து
விளிக்கும் கடுங் கூற்றினும் வெகுளாது மிகைத்து எழுந்து
களிக்கும் பொறிப்பகை ஐந்தும் பொறிப்பணைக் காவலைத்தார்
அளிக்கும் பதம் ஐந்தில் ஐந்தெழுத்தே கொண்டு
அவித்தவமே. (91)

---

89 கல் வழி-கற்கள் நிறைந்த மலை வழி; கவர்தல்-பிரிவு படுதல்; தொல்லறம்-சின தருமம்.

90 மின்-மின்னல்; வான் இடுவில்-வானவில்; இந்திரவில்; பெயல்-மழை; மொக்குள்-குமிழி; புல் நுனி நீர்-நீர்த்துளி; அற்று-அத்தன்மைத்து.

91 ஒளித்தல்-மறைத்தல்; நாள்-இறுதி நாள்; விளித்தல்-கொல்லுதல்; வெகுள்தல்-கோபித்தல்; பொறிப்பகை-ஐம் பொறிகளாகிய பகை; பதம் ஐந்து-பஞ்ச மந்திரம்; ஐந்தெழுத்து-பஞ்ச மந்திரத்திற்குரிய ஐந்தெழுத்து.

அவிக்கும் பொறிப் பன்றி; வானோர் உலகிற்கும் ஆழிவட்டப்
புவிக்கும் ஒரு நசை உற்று இரங்கார்; - அடி போற்றி நின்று
குவிக்கும் கரத் திருத் தொண்டர் குழாமும் குட திசையும்
கவிக்கும் பணக் குடையும் பச்சை மேனியும் கண்டவரே. (92)

கண்டேன் உரகர் பணப் பெருங் காவணம்; கண்டு களித்து,
உண்டேன் இன்று, அவர் திருவறத் தேன் அமிழ்து; உண்டு
சென்னி
கொண்டேன் அவர்தம் திருவடிப் போது; இனிக் கூற்றுவனார்
தண்டு ஏவினும் அவர் தாமே மலைப்பினும் தாக்குவனே. (93)

தாக்கும் பழவினைப் போர் கடப் போர் தவப் பாழி வெற்பை
நோக்கும் திருத் தொண்டர் நோற்றது என்னோ? மற்றை
நூலுக்கு எல்லாம்
மூக்கும் சுருதிப் பழுது இல் நன்னூலின் முடிவு உணர்ந்தோர்
கோக்கும் கடவுள் மரகத மா மணிக் கோலத்தையே. (94)

கோலத் தரள மணிக்குடை மூன்றும், கொடிய செங்கண்
ஆலத்து உரகர் பணக்குடை ஓர் ஐந்தும், ஐந்து அவித்த
சீலத்தவர்தம் திருப்பாழியும், திருமால் உறையும்
மேலைத் திசாமுகமும் தொழுவாரது வீட்டுலகே. (95)

---

92 அவித்தல்-அடக்குதல்; அழித்தல். பொறிப்பன்றி-ஐம்பொறிகளாகிய பன்றி; ஆழி-கடல்; புவி-பூவுலகம்; நசை-ஆசை; விருப்பம்; குவிக்கும் கரம்-இரு கையும் கூப்பித் தொழுகை; குழாம்-கூட்டம்.

93 திருவறம்-சினதர்மம்; அமிழ்து-அமிர்தம்; கூற்றுவனார்-யமன்; தண்டு-தண்டாயுதம்; மலைத்தல்-போர் செய்தல்; வருத்துதல்.

94 மூத்தல்-முற்படுதல்; சுருதி-வேதம்; கோத்தல்-சேர்த்தல்; தழுவிக் கொள்ளுதல்; கோலம்-அழகு.

95 ஆலம்-நஞ்சு; ஐந்து அவித்தல்-ஐம்பொறிகளையும் அடக்குதல்; திருப்பாழி-துறவியர் தங்குமிடம்.

வீடு ஆவதும், இமையோர் உலகு ஆவதும், வேலை முன்னீர்
நாடு ஆவதும், செல்வ நன்னகர் ஆவதும், நானுடைய
பீடு ஆவதும், என் பெரும் புகல் ஆவதும், பெற்ற பெற்ற
மாடு ஆவதும் - எம்பிரான் வட பாழி வரையகமே. (96)

வரையா அருட் பெரு மாதவத்தோர் வடபாழி என்று என்று
உரையார், உணர்வு ஒன்றிலார், பணக் கோயில் உலகு இறைஞ்சும்
திரையாழி வண்ணர் தம் தீர்த்த நன்னீரில் திருமணற் போய்க்
குரையார், பெரும்பிணி கூர்ந்து அழிவார் - என் அழிகின்றதே? (97)

அழியோம், விரதம்; திருமந்திரத்து எழுத்து ஐந்தும் அன்றி
மொழியோம்; மறந்தும் பரச மயத் துறை மூர்க்கர் சொல் கேட்டு
இழியோம்; இழித்தே மறை பழிப் பாரையும் யாம் அழித்துப்
பழியோம்; - மணி அரங்கப் பணியானைப் பணிந்த பின்னே. (98)

96 வேலை முன்னீர்-கடல்; வேலையாகிய முன்னீர் என்க, நானுடைய-என்னுடைய; பீடு-பெருமை; புகல்-புகலிடம்; மாடு-செல்வம்.

97 வரைதல்-அளவிடல்; பணக் கோயில்-ஐந்தலைப் பாம்பின் படத்தின் கீழ் அமைந்த இருப்பிடம்; திரை-அலை; ஆழி வண்ணர்-கடல் நிறத்தார்; குரைதல்-பொருந்துதல்.

98 திரு மந்திரம்-பஞ்ச மந்திரம்; மொழிதல்-சொல்லுதல்; பரசமயம்-வேற்றுச் சமயம்; மணி அரங்கப் பணியான்-இரத்தினங்களோடு கூடிய பாம்பினை உடையவன்.

**பணியேன் நினசரண்; பாடேன் நின திறம்; பாவ நெஞ்சில்**
**துணியேன் நினது அறம்; சொல்லியவாறு ஒன்று தொண்டர்**
**போற்றாள்**
**அணியேன்; நினது திருமேற்றிசை நினைந்த அன்பர் சிந்தா -**
**மணியே! எனக்கும் உண்டோ சொல்லு வாழி வரகதியே (99)**

**வரம் தரும் தீபையுள் மேற்றிசையானை மதியுடையோர்**
**நிரந்தரமாக நினைக்கின், குறையே நினைந்து ஒருகால்**
**கரம் தரு சென்னியர் ஆனபின், யாவரும் கைதொழுவார்;**
**புரந்தரர் ஆகுவர், பூவும் புனலும் பொழிந்து நின்றே. (100)**

---

99 சரண்–திருவடி; திறம்-வல்லமை; புகழ்; சிந்தாமணி-அடுத்தார்க்கு வேண்டுவன வழங்கும் தேவலோக இரத்தினம்; வரகதி-மேலான மோட்சம்.

100 தீபை-திருநறுங் கொண்டைத் திருத்தலம்; மதி-அறிவு; நிரந்தரம்-எப்பொழுதும்; ஒருகால்-ஒரு முறை; புரந்தரர்-தேவர்.

---

'பூவும் புனலும் பொழிந்து நின்றே' என்னும் இறுதித் தொடர் இந்த அந்தாதி முதற் பாடலின் தொடக்கமான 'பூவும் புனலும் பொழிந்து' என்பதுடன் மண்டலித்து அந்தாதி ஆயினமை காண்க.

அந்தாதிப் பூந்துணர் முற்றும்.

# ஸ்ரீ உதீசி தேவர் பாடிய
# திருக் கலம்பகம்

### காப்பு

### வெண்பா

**பதினறுவர் பொன்வண்ணர், பச்சை இருவர்,**
**மதிவண்ணர் மற்று ஓர் இருவர், — கதி அடைந்த —**
**செம்மை நிறத்து ஓர் இருவர், சேர்ந்த முகில் இருவர்,**
**எம்மைக்கும் தெய்வம் எமக்கு.**

---

## புலவர்மணி. மு. சண்முகம்பிள்ளை

### குறிப்புரை:

### காப்பு

பஞ்சம கதியைத் சேர்ந்த இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களும் எப் பிறப்பினுக்கும் சுவாமி என்று உதீசிதேவர் போற்றுகிறார். மற்று அசைச் சொல்; கதி அடைந்த பதினறுவர் பொன்வண்ணர் என்று இவ்வாறு ஒவ்வொரு வகையினரோடும் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். கதி அடைந்த - முக்தி பெற்ற; தீர்த்தங்கரர் எல்லாரும் தன்மையால் ஒருவரே யாகையால், 'தெய்வம்' என ஒருமையாகக் கூறினார். பொன்வண்ணர் பதினறுவராவார்: விருஷபதேவர், அசிதர், சம்பவர், அபிநந்தனர், சுமதி, சீதளர், சிரேயாம்சர், விமலர், அநந்தர், தர்மர், சாந்தி, குந்து, அரர், மல்லி, நமி, வர்த்தமானர். பசுமை நிற முடைய இருவர்: பார்சுவர், சுபார்சுவர். சந்திரன் போன்ற வெண்ணிறத்தார் இருவர்: சந்திரப் பிரபர், புஷ்பதந்தர். சிவப்பு நிறம் படைத்தவர் இருவர் : பத்மப் பிரபர், வாசு பூச்சியர். மேக நிறமுடைய நீல வண்ணர் இருவர் : முநிசுவ்விரதர், நேமி. எம்மைக்கும்—இம்மை, மறுமை, அம்மை என்னும் எப் பிறப்பினுக்கும். இம்மை - இப் பிறப்பு; மறுமை - வரு பிறப்பு; அம்மை - முத்தி.

## கொச்சக ஒரு போகுக் கலிப்பா

**பூநான்கும் பொதுளி, வெறி திசை நான்கும் போய் உலவ,**
**தேன்ஆர்ந்து சுரும்பு ஆட, திகழ் பிண்டித் திருநிழல்,**
**நிலஉமிழ்ந்து நீர்ததும்ப நிழல் மாலை நித்திலம் சூழ்**
**குலஇலங்கு மதி மூன்றின் குடை மூன்றும் உடன்நிழற்ற,**
**பாங்குஇலகு மணிக் கவரி பல்நூறா யிரம் அசைய,**
**ஓங்குஅரியா சனத்துஉம்பர், உலகு தொழ, இருந்தனையே**

— **இது தரவு.**

**கயல்பிறழ்வ தெனப்பிறழும் கருந் தடங் கண்ணார்கலவிச்**
**செயல்பிறவி வித்து என்று செறிதவர் முன் உரைத்தருளி,**
**தேறாத பிறப்பு இகந்த சித்திஎனும் கன்னியுடன்**
**மாறாத பேரின்பம் மகிழ்வதுநின் குணன் ஆமோ?**

---

1 பூ நான்கு - நால்வகை மலர்கள்; கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதர்ப்பூ, பொதுளி - நெருங்கி; வெறி - வாசனை; உலவுதல் - திரிதல், ஆர்ந்து - பருகி, உண்டு; சுரும்பு - நால்வகை வண்டுகள்; கருவண்டு, பொன்வண்டு, ஞிமிறு, சுரும்பு. ஆட - இசை பாட; பிண்டி - அசோகு; திருநிழல் - அழகிய நிழல்; நில உமிழ்ந்து - ஒளிவீசி; நீர் ததும்ப - குணம் துளும்ப; நிழல் - குளிர்ச்சி; மாலை நித்திலம் - முத்துமாலைகள்; குலம் - விளக்கம்; குலஇலங்கு - மிகவும் விளங்குகின்ற; மதி மூன்றின் குடை - மதிபோலக் காட்சி தரும் முக்குடை. குடை மூன்றாவன: சந்திராதித்தம், நித்திய விநோதம், சகலபாசனம். நிழற்ற - நிழல் செய்ய; பாங்கு - பக்கம்; இங்கே இருபக்கம் என்க. மணிக் கவரி - அழகிய சாமரைகள்; நூறாயிரம் - லட்சம்; ஓங்குதல் - உயர்தல்; அரியாசனம் - சிங்காசனம்; உம்பர் - மேல்; உலகு - மூவுலகத்தவர்.

கயல் - கயல்மீன்கள்; பிறழ்தல் - புரள்தல்; கருந்தடங்கண்ணார் - கருமையாகிய கண்களையுடைய மாதர்; கலவிச் செயல் - சேர்க்கை; வித்து - மூலம், அடிநிலை; செறிதவர் - நெருங்கிய முனிவர்; தேறாத - அளவிட்டுக் கணிக்கப் படாத; இகந்த - நீங்கிய; சித்தி - முத்தி.

**அடும்ஆற்றல் ஆருயிர்மேல் ஆறாது மிகுத்தசினம்**
**தடுமாற்றம் தரும்என்று தவவரசர்க்கு உரைத்தருளி,**
**இரியஇரு வினைப்பகைவர் இகல்வாட்டி, ஐம்புலவெங்**
**கரியகதக் கடக் களிறு காய்ந்தது நின்அருள் ஆமோ?**

**உள்ளத்தால் எவ்வுயிர்க்கும் ஒத்து ஒழுகாதவர் பிறவி–**
**வெள்ளத்து ஆழ்பவர்என்று விரிதவர்முன் விரித்தருளி,**
**அன்போடு தொழுதுஎழுவார்க்கு அமருலகம் அளித்து**
**அமையா**
**நின்போல வரகதியுள் நிறுத்துதல்நின் இயல்புஆமோ?**
**—இவை மூன்றும் தாழிசை·**

**கறைஅறு சுடர்மணி கரதலம் நடுவணது என**
**முழுது உணரும்— நின் மதி;**

---

அடும் ஆற்றல் ஆருயிர் - தம்மைக் கொல்ல வருகின்ற பகைவருடைய சீவன்; ஆறாது மிகுத்த சினம் - அடங்காமல் அதிகரித்த கோபம்; தடுமாற்றம் தரும் - பிறவியைக் கொடுக்கும்; இரிதல் - கெடுதல்; இகல் வாட்டுதல் - வலிமையைக் கெடுத்தல்; கதம் - கோபம்; கடக்களிறு - மதமுடைய யானை; காய்ந்தது - கொன்றது.

உள்ளத்தால் - உள்ளன்பினால்; எவ்வுயிர் - ஐவகைப் பட்ட எந்த உயிர்களும்; ஐவகை உயிர்: ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர். பிறவி வெள்ளம் - பிறவிக் கடல்; ஆழ்பவர் - அழுந்து பவர்; விரிதவர் - பரந்த முனிவர்; அமருலகு - தேவர் உலகு; வரகதி – மேலான முத்தி; இயல்பு - தன்மை;

கறை - குற்றம்; சுடர்மணி - ஒளி படைத்த இரத்தினம்; கரதலம் நடுவணது - உள்ளங்கையில் உள்ளது. 'உள்ளங்கை நெல்லிக் கனி' என்னும் முதுமொழி இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது. முழுது - முழுவதும்; எல்லாமும்; மதி - அநந்த ஞானம்; நறை

**நறைஅலர் வெறி என, நகு மணி ஒளி என,**
**நணுகு இயல்பினது — நின் சுகம்.**

**விரைசெறி முளரியின்மிசை முறை பெயரல**
**மிதியல இயலும் — நின் அடி;**
**உரைபல தருகுவது உடன் மலைவு இலது**
**அருளொடு பொருள் தழுவும் — நின்மொழி.**
**— இவை இரண்டும் அராகம்**

**நறைஒடத் தோடு அவிழும் நறும்பூமென் கணை துரந்து,**
**நிறைஒடப் பொருமதனை நீறாக நோக்கினையே.**

**அலைமாறாக் கதிக் கடலுள் அழுந்து உயிர்வேட்டு**
**அலமருஉம்**
**கொலைமாறாக் கொடியவெம் கூற்றினையும் குதித்தனையே.**

---

– தேன்; அலர் - பூ; வெறி - மணம்; நகுமணி - விளங்குகின்ற இரத்தினம்; நணுகுதல் - பொருந்துதல்; சுகம் - அநந்த சுகம்; விரை - வாசனை; செறிதல் - பொருந்துதல்; முளரி - தாமரைப்பூ; பெயரல - நடவாதன; இயலும் - நடக்கும்; உரைபல - பதினெண் மொழிகள்; மலைவு இலது - முன்னொடு பின்மாறு இல்லாதது; பொருள் - அறுவகைப் பொருள்; சீவன், புற்கலம், தன்மம், அதன்மம், ஆகாசம், காலம்; மொழி - பரமாகமம்.

தோடு - இதழ்கள்; நறும்பூ - வாசனை பொருந்திய மலர்கள்; கணை - அம்பு; துரத்தல் - ஏவுதல்; நிறை - மன அடக்கம்; ஒடுதல் - கெடுதல்; மதன் - மன்மதன்.

கதி - நாற்கதி; தேவர், மக்கள், விலங்கு. நரகர்; அழுந்துதல் - மூழ்குதல்; வேட்டு - விரும்பி; அலமருஉம் - சுழலும், திரியும்; கொலைமாறா - கொல்லுதல் தொழில் நீங்காத; கூற்று - காலன்; குதித்தனை - கடந்தாய்.

எழுதருசெஞ் சுடர்போல்நின்று இலங்கு ஒளி
மண்டலத்தினையே;
தொழுதகுவீட்டு இறைவிமணம் தூற்றும் துந்துபியினையே.
— இவை மூன்றும் பெயர்த்தும் தாழிசை.

அலர்பொழியத் தேன்பொழியும் அசும்பு ஒழியா
முன்றினையே.
உலகுஅடங்க உள்ளடங்கி ஒலி அடங்கா எயிலினையே.
— இவை நாற்சீர் ஓரடி இரண்டு அம்போதரங்கம்.

தொன்மறையை விரித்தோய் நீ;
துருநயங்கள் அழித்தோய் நீ;
நன்னெறியை வகுத்தோய் நீ;
நமன் அணுகாக் கதியோய் நீ.
— இவை முச்சீரடி நான்கு அம்போதரங்கம்.

---

எழுதரு செஞ்சுடர் - உதிக்கின்ற சூரியன்; ஒளி மண்டலம் - பிரபாவலயம். பிரபாவலயம் மூன்று : ஆலோகம், பிரபா முத்தி, கநப்பிரபை. வீட்டு இறைவி - முத்தி நாயகி; மணம் - கலியாணம்; தூற்றும் - அறிவிக்கின்ற.

அலர் - மலர்; அசும்பு – கசிவு; முன்றினை - முற்றத்தினை உடையாய்; உலகு - இங்கே மூவுலகத்தவர்; உள்ளடங்கி – மத்திம லோகத்தில் தான் அடங்கி; ஒலி - திவ்யத் தொனி; எயிலினை - (மூன்று) மதிலினையுடையாய். மதில் மூன்று ஆவன: உதயதரம், பிரதீதரம், கல்யாண தரம்.

தொன்மறை - பழமையான வேதம்; துருநயங்கள் - ஏகாந்த வாதங்கள்; நன்னெறி - அநேகாந்த வாதம்; நமன் - காலன்; கதியோய் - முத்தியையுடையவன். ஏகாந்த வாதங்களாவன: சைவம், வைணவம், இரணிய கர்ப்பம், பிரமம், பௌத்தம், கபிலம், காணாதம். சைநர் ஒரு பொருட்கு ஒரு போதே உண்மையும் இன்மையும் முதலாயின கூறுதலால் தம்மை அநேகாந்தவாதியர் எனவும், சைவ வைணவர் முதலியோரை ஏகாந்த வாதியர் எனவும் கூறுவர்.

**வீரன் நீ; விமலன் நீ;**
**விண்ணும் நீ; கண்ணும் நீ;**
**தீரன் நீ; சுகதன் நீ;**
**சிவனும் நீ; தவனும் நீ.**

**—இவை இரு சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்**

**எனவாங்கு—**

**—தனிச்சொல்.**

**ஒருதனிக் கடவுள் நிற்பரவுதும் — உயிர்கள்**
**இன்னல் வெங்கனல் கூர் புன்னெறி தலைச்சென்று,**
**உறுபுலக் கோண்மாத் திரிதரும் அகன்தலைப்**
**பிறவிக் கானத்து மறவியுற்று உழந்தாங்கு**
**அலமரு துயரினை எறியும் நின்**
**நிலம் மரு திகிரி நீடு வாழ் கெனவே.**

**— இது சுரிதகம்.**

வெண்பா

**என் மொழியின், என் அறிவின், என் அன்பின், யான்தொடுத்த**
**புன்மொழி மாலை புனைந்தக்கால் — பொன்மலர்மேல்**

---

விமலன் - நிர்மலத்தையுடையவன்; கண் - ஞானக்கண்; சுகதன் - நன்னடை யுடையவன்; சிவன் - மங்களத்தையுடையவன்.

ஒரு தனிக் கடவுள் - ஒப்பற்ற அருக பரமேட்டி; பரவுதும் - துதிப்போம்; இன்னல் - துன்பம்; வெங்கனல் - வெப்பம் பொருந்திய நெருப்பு; புன்னெறி - அற்பமாகிய வழி; புலம் - ஐம்புலன் களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். கோண்மா - கொலை செய்யும் மிருகங்கள்; பிறவிக்கானம் - பிறப்பாகிய காடு; மறவி - மறதி; எறியும் - அறுக்கும், போக்கும், திகிரி - அறவாழி.

2 மொழி - சொல்; தொடுத்த - கட்டிய; புன்மொழிமாலை - புன்மை யான சொல்மாலை; பொன்மலர் - பொற்றாமரைப்பூ; அம்மான் - அருகபரமேட்டி. இந்திரர்கள் - நூறு இந்திரர். பவணேந்திரர்

அம்மானுக்கு, இந்திரர்கள் ஆயிரம் வாய் கொண்டு ஏத்தும்
எம்மானுக்கு, என் இயையு மாறு? (2)

## கட்டளைக் கலித்துறை

ஆறு உரைத்தான், பொருள்; ஐந்து உரைத்தான்;
கதி நான்கு உரைத்தான்;
மாறு உரைத்தாரை முருக்கும்
மறை வையம் மூன்றினுக்கும்
வேறு உரைத்தான்; தொல் அறம் இரண்டு;
அவ் இரண்டாலும் விடு
பேறு உரைத்தான்; — நமக்கு ஒன்று
உரையாத பெருந்தகையே. (3)

---

நாற்பதின்மர்; வியந்தரேந்திரர் - முப்பத்திருவர்; சோதிஷ்கேந்திரர் இருவர்; கற்பேந்திரர் இருபத்து நால்வர்; நரேந்திரன் ஒருவன்; மிருகேந்திரன் ஒன்று. இயைமாறு - பொருந்தும் விதம்; இயையாது என்பது குறிப்பெச்சம். இதனால் இறைவனது பெருமையும் தனது சிறுமையும் கூறப்பட்டன.

3 ஐந்து அத்திகாயம் - பஞ்சாஸ்திகாயம்; கதி - உயிர் சென்று திரியும் நிலை; முருக்கும் – கெடுக்கும்; மறை - நான்கு வேதங்கள்; விடுபேறு - கருமமானது சீவனை விடுகின்ற தன்மை; இப்பாடலில் ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்னும் எண்ணுப் பெயர்கள் இறங்கு வரிசையில் வருதல் ஒருவகை எண்ணலங்காரம். பெருந்தகை - சுவாமி; பொருள் ஆறு - சீவன், புற்கலம், தன்மம், அதன்மம், ஆகாசம், காலம். அத்திகாயம் ஐந்து - சீவாஸ்திகாயம், புற்கலாஸ்திகாயம், தன்மாஸ்திகாயம், அதன்மாஸ்திகாயம், ஆகாசாஸ்திகாயம். கதிநான்கு - நரககதி, விலங்குகதி, மனிதகதி, தேவகதி. மறைநான்கு - பிரதமானு யோகம், கரணானு யோகம், சரணானு யோகம், திரவ்யானு யோகம். உலகம் மூன்று - மேலுலகம், நடுவுலகம், கீழுலகம்; அறம் இரண்டு - இல்லறம், துறவறம்.

## எண்சீர்க்கழிநெடில் விருத்தம்

பெருந்தகை! நின் தெய்வமொழி தோன்றத் தோன்றி,
பிறழா நின் தூய மொழி நிற்ப, நின்று உன்
அருந்தகைய செய்ய மொழி செல்ல, செல்லும்
அகல் ஞாலம் முழுதும் உடன் என்றால், வானோர்
பொருந்தகைய முடி நெருக்க எழுந்த சோதிப்
பொலந்துகளைப் பூந்துணரின் மதுநீர் மாற்ற,
இருந்த எயில் மூன்று உடையாய்; நீ அலால் மற்று
யாவர் படைத்து, அளித்து, அழிக்கும்
இயல்பினாரே (4)

## அறுசீர்க் கழில்நெடில் விருத்தம்

இயல் கொண்ட பொருள் அனைத்தும் எஞ்சாமல்
எப்பொழுதும் உடனே காணும்
செயல்கொண்ட திசைமுழுதும் திகழ்ந்து இலங்கும்
திருமுகத்து நின்னை அல்லால்,
முயல்கொண்ட கறைதுடைத்த முத்து அணிந்த
மும்மதி முக்குடையாய்! இந்த
மயல்கொண்ட அகல்ஞாலம் திசைமுகன் என்று
எவ்வாறு வழங்கு மாறே. (5)

---

4 தெய்வமொழி - தூயமொழி, பரமாகமம்; நின்று - நிலை பெற்று; செல்ல - நீங்க; பொருந்தகைய முடி - இருளை ஓட்டும் தன்மை யுடைய மகுடங்கள்; பொலத்துகள் - பொற்பொடி; பூந்துணர் - பூங்கொத்து; மதுநீர் - தேனாகியநீர்; மாற்ற - தணிக்க; எயில் மூன்று உடையாய் - மும்மதிலை உடையவனே.

5 இயல் - குணம்; எஞ்சாமல் - குறையாமல்; திசை முழுதும் - நான்கு திசைகளிலும்; திகழ்ந்து இலங்கும் - விளங்கி ஒளிர் கின்ற; கறை - களங்கம்; மயல் - மயக்கம்; அகல் ஞாலம் - அகன்ற இவ்வுலகத்தார்; வழங்குமாறு எவ்வாறு என்க. வழங்கு மாறு - சொல்லும் விதம்.

### கட்டளைக் கலித்துறை

வழங்கும் பதினென் மொழியும்
இதமும் மதுரமும் ஆய்
முழங்கும் கலைமகள் காந்தர் கண் -
டீர்—முதுநீர் மடுவும்
கிழங்கும் தவிர விசும்பிடைப்
பூத்தலர் கிண்டி வண்டு
தழங்கும் கமலத்து வந்து உலகு
ஏழையும் தந்தவரே (6)

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

தந்த உலகில் பொருள் அனைத்தும்
தமது உண்மையினால் உளவாகும்,
அந்தமிலதன் பிற குணத்தின்
உளவல்லனவாம் என அறைந்தாய்;
பந்த இருள்கால் சீத்து இலங்கும்
பகலோய்:- பகல் காணாப் புள்ளின்
எந்தை பெருமான் வாய்மையினை
ஏனோர் காணா ரானாரே. (7)

---

6 இதம் - இன்பம்; மதுரம் - இனிமை; கலைமகள் காந்தர் - சரஸ்வதியினுடைய நாயகர்; மடு - குளம்; பூத்தலர் – மலர்ந்த மலர்; கிண்டுதல் - குடைதல்; தழங்கும் - ஒலிக்கும், இசைபாடும், கமலம் – தாமரை மலர்; உலகம் ஏழு - நாகலோகம், பவண லோகம், நரலோகம், சோதிர்லோகம், கல்பலோகம், அகமிந்திர லோகம், மோக்ஷலோகம்.

7 பொருள் அனைத்தும் - அறுவகைப் பொருளும்; உண்மை யினால் - நிச்சய நயத்தினால்; அந்தமிலது - முடிவில்லாதது; பிறகுணம் - விவகார நயம்; உளவல்லன - நிலையற்றன; அறைந் தாய் - சொன்னாய்; பந்தஇருள் - தொடர்ந்து பற்றிய காதி யாகிய இருள்; சீத்து - கெடுத்து; பகலோய் - சூரியனே; பகல் காணாப்புள் - சூரியனைக் காணாத கூகை; ஏனோர் - பிறர் ஏகாந்தவாதியர்.

ஆனவாறு ஆக; மெய்ம்மை
அறிவரிது; உலகில் பல்லோர்
போன ஆறு அல்லது இல்லை,
போம் நெறி என்பார் என்க;
வான வாவியுள் வண்டு ஆர்ப்ப
மலர்ந்த பூச் சுமந்த தாள் எம்
கோன் அவாம் மறைகள் சொன்ன
நெறி அலால் குறுகலேனே. (8)

## எழுசீர்க் கழில்நெடில் விருத்தம்

குறுகு முறை, பொறி, மறை இலது, குறை
இலது, மலர்வெறி என்னவே
உறுவது ஒரு சுகம் நிகழ, நிகழ்வதோர்
ஒழிவுஇல் ஒளி உமை நண்ணுமே-
கறுவு பகை அற உறவு இல் அருள்புரி
கடவுள் மலரடி துன்னி, ஓர்
மறு இல் திருவற-அமிர்த அருவியின்
மயல் கொள் இருவினை மண்ணவே. (9)

மண் ஆர் கதிர் மணி மலர் ஆர் செங்கையில்

---

8 வாவி - தடாகம்; அவா - விரும்புதல்; மறை – நான்கு வேதம்

9 குறுகுமுறை - அடைகின்ற கிரமம்; பொறி - கரணம்; மறை - மறைவு; வெறி - வாசனை; உறுவது - தோன்றுவது; ஒரு சுகம் - ஒப்பற்ற இன்பம்; ஒழிவுஇல் - நீங்காத; ஒளி - சோதி; இங்கே முச்சோதி; மனசோதி, வாக்குச் சோதி, காயச் சோதி; நண்ணும் - அடையும்; வந்து சேரும்; கறுவுதல் - கோபித்தல் உறவுஇல் அருள் - நட்பு இல்லாத கிருபை; கடவுள் - அருக பரமேட்டி; மறு - குற்றம்; அமிர்த அருவி - ஜினதருமாகிய நீரை யுடைய ஆறு; மயல் - மயக்கம், அழுக்கு மண்ணல் - கழுவுதல்.

10 மண் - ஒப்பனை; மலர் ஆர் செங்கை - மலர் போலப் பொருந்திய

வைத்துக் கண்டவர் ஓத்து, என்றும்
எண்ணாது அகிலமும் உடனே கண்டருள்-
கின்றாய்; நீ அலது இலை என்றால்,
பண் ஆர் வண்டு இறைகொள்ளக் கள் அவிழ்
பனிமா மலர்மிசை வருமாலே!
கண் ஆர் கடல்-உலகு எல்லாம் அறிவது ஓர்
கரியாதற்கு எவர் உரியாரே. (10)

உரிமையால் யாவன் உரைவழி நடப்பது
உலகு எலாம் அவன் உலகு ஆளும்
பெருமையான் என்னின், எழு நயம் பகர்ந்த
பிண்டியாய்!- அலது யார் உரியார்?-
கருமை சால் வினையின் கட்டு-அரண் அழிய
மட்டு அவிழ் கமல-மா நடவி,
அருமை சால் உலகம் ஏழினும் நடாத்தும்
ஆணையாய்! அமரர் நாயகனே! (11)

காப்பியக் கலித்துறை

நாயகன் இவன் என அகிலமும் நவில்வதோர் பதம் நண்ணி,
பாய நல் இசையோடு பல உகம் நிலவுதல் பெறினும், பேர்

---

செம்மையானகரம்; அகிலமும் - எல்லாவற்றையும்; உடனே - ஒரு தன்மையாக; பண் - இசை; இறைகொள்ள - தங்குதல் செய்ய; கள் - தேன்; பனி - குளிர்ச்சி; மால் - அருகன் ; கண் ஆர் கடல் - இடம் பொருந்திய கடல்; கரி - சாட்சி.

11 உரை - வாக்கு; எழுநயம் - சத்தபங்க நியாயம்; அலது - நீ அல்லது; கருமை - இருள்; கட்டு அரண் - பந்தமாகிய வலிமை; மட்டு - தேன்; கமலமா – தாமரைப் பூவாகிய யானை; அமரர் - தேவர்.

12 நாயகன் - தலைவன்; அகிலமும் - உலகம் எல்லாம்; நவில்வது - சொல்வது; பதம் - பதவி, வாழ்வு; பாய - பரந்த; இசை - புகழ்;

தூயன பேரியன ஆயிரம் உடையவர், சுடர் போதில்
போயவர், அடிபுகழ் புலவரோடு அலது உரை கலவோமே. (12)

ஊசல்

எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

கலவ மயிற்குலம் அனையிர் ஆடாமோ ஊசல்;
கருங் குழல்மேல் சுரும்பு இரிய ஆடாமோ ஊசல்;
உலவு துணைக் கயல் பிறழ ஆடாமோ ஊசல்;
ஒளிரு மணிவடம் அசைய ஆடாமோ ஊசல்;
புலவு சுவைத்து ஒளிரு படை தொடாது முத்தி
பொரு பகடிப் பகை துரந்த புனிதர் கோலத்
திலத மலர்ப்பதம் பாடி ஆடாமோ ஊசல்;
செம்பொன் எயில் வளர்பாடி ஆடாமோ ஊசல் 13

கலிவிருத்தம்

ஊசற் குழை நல்லார்-தமது உளவாறு அறியாதே
நேசப்படு நெஞ்சால் நினைவாரே இனைவாரே;
பேசப்படும் ஒரு குற்றமும் இல்லார்தமை ஒருகால்
பேசப்படுவாரே பிறவாரே, இறவாரே. (14)

---

பேர் - நாமங்கள்; சுடர்போது - ஒளிர்கின்ற தாமரைப்பூ; புலவர் - அறிவுடையவர்; உரைகலவோம் - பேசமாட்டோம்.

13 கலவ மயிற்குலம் - தோகையையுடைய மயிற்கூட்டங்கள்; ஆடாமோ - ஆடுவோம்; ஊசல் - ஊஞ்சல்; குழல் - கூந்தல் சுரும்பு - வண்டு; இரிதல் - ஓடுதல்; துணைக்கயல் - இரண்டாகிய மீன்; இது கண்களைச் சுட்டியது; பிறழ - புரள; மணிவடம் - முத்து வடம்; புலவு - மாமிசம்; படை - ஆயுதம்; பகடி - பிரகிருதி; திலதம் - உயர்வு; செம்பொன்மதில் - சிவந்த பொன்னாலகிய மும்மதில்.

14 ஊசற்குழை - அசைகின்ற குண்டலம்; நல்லார் - மாதர்; உளவாறு - மனத்தில் எண்ணும் கபட மார்க்கம்; இனைவார் - துன்பமுறுவார்; ஒரு குற்றமும் இல்லார் - அருக பரமேட்டி; ஒருகால் - ஒரு முறை; பேசப்படுவார் - துதிப்பவர்.

## எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

**இறந்து தான் பொன்றுதலே வீடு என்பாரும்,**
**இறவாது கல்லாதல் இயல்பு என்பாரும்,**
**பிறந்து கோனுடன் ஒன்றாகுதல் என்பாரும்,**
**பிறவாது சித்து அளவு என்பாரும் என்க,**
**அறம் செய்வான் திகிரியால் அகிலம் ஆண்ட**
**அறவாழி அசஞ்சலர்தாம் அறைந்த நூலின்**
**திறம் கொள்வான் அச்சுதா நந்தம் அல்லால்**
**செய்தவத்தால் உற நினையார், தேர்கிற்பாரே. (15)**

## நேரிசை ஆசிரியப்பா

**தேர்வது ஒன்று உடையன், யானே-கார் எனக்**
**கடிமலர் மாரியோடு இடி முரசு இயம்பும்**
**கொடி நுடங்கு ஆர் எயிற் கிழவனை! ஒருதனி**
**இருவினை இரிய மூவரண் முருக்கிய**
**பொரு இல் தாளினை என்ப, அருள் புரிந்து**
**அறம் தரு நாவினை! அமரரும் அரசரும்**

---

15 பொன்றுதல் - அழிதல்; வீடு - முத்தி; என்பார் - என்று சொல்லுவார்; கல்லாதல் - கல்லுப் போலாதல்; கோன் - ஈசன்; ஒன்றாகுதல் - கலத்தல்; சித்து - ஞானம்; என்க - என்று சொல்லுக; திகிரி - தருமசக்கரம்; அறவாழி - அறக்கடல்; அசஞ்சலர் - சஞ்சலமில்லாதவர்; நூல் - பரமாகமம்; அச்சுதா நந்தம் - கெடாத சுகம்; உறநினையார் – வேருன சுகத்தை அடைய எண்ணுர்; தேர்கிற்பார் -விவேகமுடையவர்.

16 தேர்வது - அறிய வேண்டுவது; கார்என - மேகம் போல; கடி- வாசனை; முரசு - துந்துபி; இயம்பும் - முழங்கும்; நுடங்குதல்- அசைதல்; எயில் - மும்மதிலையுடைய சமவசரணம்; கிழவனை - உரியவனாகிய உன்னை; இரிய - ஓட; மூவரண் - மும்மலங்களாகிய கட்டு; முருக்கிய - கெடுத்த; பொரு - ஒப்பு;

தொடர்ந்தனர் இறைஞ்ச நடந்தனை; சென்ற
போதும் வாடல் தாயின்,
யாதுகொல், ஆங்கு அவை நீ அடுமாறே. (16)

காலம்

எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

அடல் விடம் கொள் பாதபங்கள் அமிர்து ஈனும்காலம்;
அரியினொடு கரியும் இருந்து அறம் கேட்கும் காலம்;
குடர் இடம் கொள் பசியினொடு பிணி நணுகாக் காலம்;
குறைந்த பொறி நிறைந்து எவரும் குணம் புரியும் காலம்;
கடல் கிளர்ந்ததென உலகு தொடர்ந்து இறைஞ்சச் செய்ய
கடிக் கமலம் அடிக்கமலம் ஏந்தத் தொல்லை
இடர் கடந்த கருணை-முகில் விசும்பில் எழும் காலம்;
எம் மனமும் காமன் அம்புக்கு இடர் உழவாக் காலம். (17)

---

இறைஞ்ச - வணங்க; போது - மலர்; அவை - அவை என்றது அம்மலங்களை; அடுமாறு -கெடுக்கும் விதம்.

17 அடல் விடம் - கொல்லுதலையுடைய நஞ்சு; பாதபங்கள் - மரங்கள்; எட்டி முதலிய மரங்கள். அரி - சிங்கம்; கரி - யானை; நணுகா - அணுகாத; பொறி - பஞ்சேந்திரியம்; குணம் - நன்மை; கடல் கிளர்ந்ததென – சமுத்திரம் பொங்கினாற் போல; கடிக் கமலம் - வாசனை பொருந்திய தாமரைப் பூ; அடிக் கமலம் - பாத தாமரை; கருணை முகில் - கருணையையுடைய மேகமாகிய அருக பரமேட்டி; காமன் அம்பு - மன்மதனுடைய பூங்கணை; இடருழத்தல் - வருந்துதல்.

### வஞ்சி விருத்தம்

காலன் என்று உடல் கால்பறிந்து உயிர்
மால வந்துழி, மால் ஒழிந்து, முன்
மூல மந்திர மூலமே என
ஓலம் என்பவர் உம்பர் நாதரே. (18)

### எழு சீர்க் கழிநெடில் விருத்தம்

உம்பர் நாடு அடைவார், நம் பதம் அடைவார்;
ஒழிந்தவர் இழிந்த நாற்கதியில்
துன்பமே அடைவார் — என்று நீ விதித்த
தொல்விதி கடந்தவர் உளரே?
வம்பு உலாய் நிமிர்ந்து வடம் சுமந்து அடங்கா
வன முலை மடந்தையர் தடங்கண்-
அம்பினால் உடையா அருந்திறல் உடையாய்!
அமலனே! கமல வாகனனே! (19)

### அறு சீர்க் கழிநெடில் விருத்தம்

வாகனம் மாகம் பூத்த மாமலர் ஆக ஏகும்
ஏகனை உணர்ந்திலாமை உணர்தல் அவ் இரண்டினாலும்
வேக வெங் கதியும் வீடும் விளைதரும் என்றால், எண் இல்
போகனை அன்றி யாரே புவன காரணர் ஆவாரே. (20)

---

18 காலன் - கூற்றுவன்; கால் பறிந்து - நிலை குலைந்து; மால - மயங்க; மூல மந்திரம் - அநாதியாயிருக்கின்ற பஞ்ச மந்திரம்: ஓலம் என்பவர் - அடைக்கலம் என்று சொல்பவர்.

19 உம்பர் நாடு - உயர்வான முத்தி நாடு; பதம் - பாதங்கள்; ஒழிந்தவர் - சேராது நீங்கியவர்; நாற்கதி - நால்வகைப் பிறப்பு; விதி - நியதி; வம்பு - கச்சு; உலாய் - பரந்து; வடம் - முத்து வடம்; வன முலை - அழகிய தனங்கள்; அமலன் - மலமற்றவன்.

20 மாகம் - ஆகாயம்; ஏகன் - அருக பரமன்; வேக வெங்கதி - கடுமையான வெப்பமுடைய இழிவான கதி; எண் இல் போகன் - அநந்த சுக முடையவன்; புவனம் - உலகம்.

ஆவார் உனக்கு நான் அடிமை
        என்னா வல்லேம் என உயர்ந்து
போவார் என்றே எப் பொழுதும்
        பூவும் புனலும் கொண்டு ஏத்தி
ஓவாது இறைஞ்சும் என் அகத்தே
        ஒருநாள் வந்தால் உலகு ஆளும்
தேவாதிபனே! திருமாலே!
        நின்றன் பெருமை சிதைவாமே? (21)

## கட்டளைக் கலித்துறை

சிதைக்கும் கதிப் பெயர் மாயச்
        சகடம் சிதைந்து சிந்த
உதைக்கும் திருவடிப் போது இரண்டான்
        நறவு உண்டு, வண்டு
துதைக்கும் மலரும் தளிரும்
        சுமந்து இருள் தூங்கி வையம்
புதைக்கும் பொழிற் பிண்டியாய்
        அடியேனைப் புரந்தருளே. (22)

---

21 வல்லேம் - வல்லமையுடையேம்; உயர்ந்து போவார் - முக்தியை அடைவர்; புனல் - நீர்; ஏத்தி - துதித்து; ஓவாது - ஒழியாது, நீங்காமல்; பழிப்பது போல முத்திக்கு நாதன் இவனே என்பது இப் பாடலில் கூறப்பட்டது.

22 கதிப் பெயர் - நாற்கதி என்னும் பெயர்; மாயச் சகடம் - வினை யாகிய பண்டி; திருவடிப் போது – பாதங்களாகிய தாமரைப் பூ; நறவு – தேன்; துதைத்தல் - நெருங்குதல்; புதைக்கும் - கவிக்கும்.

## அறு சீர்க் கழிநெடில் விருத்தம்

புரந்தரரும் வானவரும் புகழ்ந்து, அடியோம்
குற்றேவல் கொள்கென்று ஏத்தி,
நிரந்தரம் வந்தனை செய்ய இருந்தருளும்
அருந்தவரே ! நினைந்தோர்க்கு எல்லாம்
தரம், தரம் அன்று என ஒன்றும் பகராது
தவிராத அநந்த நான்மை
வரம் தரும் என்று உலகு உரைப்பது உம்மையேல்
எம்மை எவன் மறந்த வாறே? (23)

## கலி விருத்தம்

மறம் கொள் நேமி விட்டெறிந்து, மன்னர் சென்னி சோரியில்
பிறங்க வென்ற வென்றியோர் அநேக பேர்; உலோகு எல்லாம்
இறைஞ்ச, வெங்கண் வல் வினைத் தெவ்வர் சிந்த வெந்து
பேர்
அறம் கொள் நேமி கொண்டு வென்ற சோதி எங்கள்
ஆதியே. (24)

---

23 புரந்தரர் - (நூறு) இந்திரர்கள்; வானவர் - (நால்வகைத்) தேவர்; நிரந்தரம் - எப்பொழுதும்; அருந்தவரே - விளி; தரம் - தகுதி; நான்மை - அனந்த சதுட்டயம்; வரம் - மேன்மை.

24 மறம் - பாவம்; நேமி - சக்கராயுதம்; சோரி - இரத்தம்; பிறங்க - விளங்க; உலோகு எலாம் - உலகம் எல்லாம்; தெவ்வர் - பகைவர்; அறம் கொள் நேமி - தரும சக்கரம்; ஆதி - சுவாமி.

காப்பியக் கலித்துறை

ஆதியே! ஆதிஇன்றி அகிலமும் பரந்து நின்ற
சோதியே! சோதி மூன்றில் எழுதரு சுடரே! வான
விதியே! விதிபோகும் வெறி மலர்ப்பாகா! வேதம்
ஓதியே! நின்னை அல்லால் பிறரை என், ஓதுமாறே? (25)

பன்னிருசீர்க் அம்மானை கழிநெடில் விருத்தம்

ஓத நெடும்புவி ஒன்று என நின்ற முதற்பொருள் அம்மானை;
ஒற்றை நெடுந் தருமச் சுடர் நேமி உயர்த்தவன் அம்மானை;
ஏதம் முனிந்து இயல் வேதம் மொழிந்த பரம்பரன் அம்மானை;
இந்திரர்தம் தொழில் வந்து இவன் அன்பரை ஏத்துதல் அம்மானை;
காதம் அகன்று ஒரு காதரை சென்று நிமிர்ந்து அவர் தோடு தொறும்
கானம் முரன்று அறுகால் பருகும் கமழ் கள் நிறை தண் நளினப்
போதகம் அல்லது போதகம் ஏறுவது ஒன்றிலன் அம்மானை;
போதில் இவன் சரண் அல்லது எவன்சில போற்றுவது அம்மானை. (26)

---

25 ஆதி - முதல்வன்; சோதி மூன்று - பிரபாவலயம் மூன்று; சுடரே - சூரியனே; வெறி - வாசனை; மலர்ப்பாகா - பூவாகிய யானைக்குப் பாகனே; ஓதி - சொன்னவன்; ஓதுமாறு - துதிக்கும் விதம்.

26 ஓதம் - கடல்; முதற்பொருள் - ஆதியாகிய பொருள்; தருமச் சுடர் - அறமாகிற ஒளி; நேமி - சக்கரம்; உயர்ந்தவன் - பிடித்தவன்; ஏதம் - குற்றம்; பரம்பரன் - சுவாமி; காதரை - ஒன்றரைக் காதம்; நிமிர்ந்து - நீண்டு; தோடு - இதழ்; கானம் - இராகம்; அறுகால் - வண்டு; கள் - தேன்; நளினப் போதகம் - தாமரைப் பூவினிடம்; போதகம் - யானை; போதில் - பொழுதில், எப்பொழுதும்.

## எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

அம்மானை, முடிவுஇலா ஞானம் தன்னால்
அளவு இலாப் பொருள் முழுதும் பரந்து நின்ற
பெம்மானை, உலகளவு நிறைந்த சோதிப்
பெருமானை, அறியாதே பெருமால் கொண்டு இங்கு
இம் மான நிலன் ஆகி, தீயாய், காலாய்,
இரு சுடராய், எறி புனலாய், வானாய் மற்றும்
எம் மான எவ் உயிர்களுமாய் நின்றான் என்றே
இயம்புவார் துணிவு என்னே இருந்தவாறே. (27)

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

இருந்தாய், வேறே அரியணை மேல்,
எல்லா உலகும் தொழ; உலகை
அருந்தா உமிழாது இருந்தாய் என்று
அறையா நின்ற மறை ஆனால்.
விருந்து ஆர் சுரும்பு கொப்புளிக்கும்
வேரித் துவலை மாரி அறாப்
பெருந்தாள் அசோகம் ஒன்று உடையாய்!
யாதோ உண்மை பேசாயே. (28)

---

27 முடிவு இலா ஞானம் - அநந்த ஞானம்; பொருள் - அறு வகைப் பொருள்; பெம்மான் - பெருமான்; சோதி - முச்சோதி; மால் - மயக்கம்; மானம் - அளவு; கால் - காற்று; இருசுடர் - சூரிய சந்திரர்; இயம்புவார் - சொல்லுவார்; துணிவு - நிச்சயம்.

28 அரியணை - சிங்காசனம்; அருந்தல் - உட்கொள்ளல்; உமிழ்தல் - வெளிப்படுத்துதல்; சுரும்பு - வண்டு; கொப்புளித்தல் - வாயினின்று வெளிப்படுத்தல்; வேரித்துவலை - தேன்துளி; மாரி - மழை.

## வெண்பா

பேசில் அகண்டமும் நின் பேரறிவின் பாலது; அவ்
ஆசு இல் அறிவு உன் அகத்ததால்; — மாசு இகந்த
மெய்ஞ்ஞான வேந்தர் தொழ வீற்றிருந்தாய்; நீ அல்லால்
இஞ் ஞாலம் உண்டார் மற்று யார்? (29)

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

யாரே காலம் மூன்றும் முழுது
எல்லா உலகும் உடன் அளந்தார்;
நீரே யானால் உலகு அளந்த
நெடுமால் என்பது உமை அன்றே?
காரே சிறந்து, மலர் கஞலி,
களி வண்டு அறைய, நற ஒழுகி,
பார் ஏழ் கமழும் பூம்பிண்டி
நிழலீர் ! ஒரு சொல் பகரீரே. (30)

## எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

பகரலாம் குணக்கடல் சேர் முனிவர் சிந்தைப்
பாற்கடற்கண் வளர்ந்த பரந்தாமன் – தன்னை
நிகர் இலா வினைப் பகைவர் சிந்த அன்று
நெடு விசும்பின் முகடு உருவி நிமிர்ந்த மாலை
மகர வாருதி வலயத்து உலகம் ஏழு
வந்து இறைஞ்ச அருளாழி வலம் கொண்டு ஏந்தும்
சிகர மா மணி நீல வண்ண வெற்பைத்
தேறாதார் தாம் தம்மைத் தேறாதாரே. (31)

---

29 அகண்டம் - எல்லா உலகமும்; ஆசு - குற்றம்; அகத்தது - உள்ளத்தில் இருப்பது; மாசு - குற்றம்; மெய்ஞ்ஞான வேந்தர் - நிச்சய ஞானத்தையுடைய முனிவர்; ஞாலம் - உலகம்.

30 உமை - உம்மை; கார் - கருமை; கஞலி - நெருங்கி; களி - செருக்கு; நற - நறவு, தேன்; பார் - உலகம்; பகரீர் - சொல்லுவீர்.

31 சிந்த - கெடும்படி; முகடு - உச்சி; மால் - பெருமையையுடையவன்; மகரம் - மகர மீன்; வாருதி - கடல்; வலயம் - வட்டம்; அருளாழி - தருமசக்கரம்; நீல வண்ண வெற்பு - நீல நிறம் பொருந்திய மலை; தேறாதவர் - தெளியாதவர்.

### கலிவிருத்தம்

தேறினார் தொழும் தீர்த்தனை, வேட்கைநோய்
ஆறினானை, எம் அச்சுதா நந்தனை,
மாறு இலாத மலர்மகள் காந்தனை—
கூறினார் வையம் கூற நின்றார்களே. (32)

### காப்பியக் கலித்துறை

நின்றன நின்றன குணங்களின்
நின்று இயல் பொருள் யாவும்
சென்றன சென்ற குணங்களின்
என்றனை திருமாலே!
குன்றல் இல் இன்ப வரம் பெற
நின்றவர் கொண்டார்; இஃது
ஒன்றலர் ஒன்றல் கருங்கதி
சென்று இடர் உறுவாரே. (33)

### புய வகுப்பு

உற உலகை அலர் என எடுத்து, அணு
ஒன்றில் தற்கணத்து அளந்து, இயல்
ஒழிவு இல் பல தொழில்களும் முடித்து, இய
லும் பெற்றி க்ரியைக்கு இயைந்தன;

---

32 தீர்த்தன் – அருகன்; ஆறினான் - தணிந்தவன்; அச்சுதாநந்தன் - கெடாத இன்பத்தையுடையவன்; மலர்மகள் - முத்திநாயகி; காந்தன் - நாயகன்; வையம் – உலகம்; இங்கே உலகத்தாரைச் சுட்டியது.

33 குன்றல் இல் இன்பம் - கேடு இல்லாத பேரின்பம்; வரம் - மேன்மை; கருங்கதி - பெருத்த நாற்கதி; ஒன்றலர் - பொருந்தாதவர்.

34 அலர் என – மலர் போல; அணு – பரமாணு; தற்கணத்து-அந்தக் கணத்தில்தானே; கிரியை - செய்கை; பருகுதல் - உண்ணுதல்;

உயிர் பருகு பரசு, தனு, வச்ரம்
எனும் செற்றப் படைக்கலம் தொடல்
ஒருவி, அகில சகம் முழுதும் முற்பணி
யும் பொற்பில் சயத்து உயர்ந்தன;

விறல் கொள் இருவினை அரசரைச் சுடர்
வெண் கட்கத்தினில் தடிந்து, எழு
விரி புடவி உறு படர் கெட க்ருபை
ஒண் சக்கரத்தினில் புரந்தன;
விரை களப அளறு நற உக்கு ஒழு
கும் சித்ரத் தொடைச் சுரும்பு இவர்
வெறி குலவு தெரியல் அணி முத்தம்
முனிந்து ஒப்பற்று மிக்கு இலங்கின;

மறன் நிலவு கயல் - விழிகள் நற்கலாம்
நம் சித்தத்தினைக் கவர்ந்து உறை
மகளிர் வன கலச முலைகட்கு
வருந்து ஒற்கத்தினைக் கடந்தன;
மறு இல் கலை மதி நுதலி சித்தி
எனும் சுத்தக் கொடிப் புணர்ந்தன;
மலர் வெறியின் அளவு அற உள் மிக்கு எழும்
இன்பத்தில் திளைத்து இயைந்தன;

---

பரசு - மழு; தனு - வில்; செற்றப் படைக்கலம் - கொல்லும் ஆயுதங்கள்; பொற்பு - அழகு; விறல் - வலிமை; வெண் கட்கம் - சுக்கிலத் தியானமான வாள்; தடிதல் - கொல்லுதல்; படர் - துன்பம்; புரந்தன - காப்பாற்றின; களப அளறு - சந்தனக் குழம்பு; உக்கு ஒழுகுதல் - வழிந்து ஓடுதல்; தெரியல் - மாலை; மறன் - பாவம்; கலாம் - கலகம்; வனம் - அழகு; ஒற்கம் - சிறுமை; சித்தி - முத்தி; சுத்தக் கொடி - நிர்மலமான கொடி போன்ற கன்னி; திளைத்தல் - பொருந்துதல்; சண்டம் -

அறன் இல் அடல் கெழு கமடன் அக்ரம
　　சண்டத்து உட்குறக் கனன்று எரி
அனலம் அடுபடை, அசனி வெற்பு எலும்
　　மென் பத்மத் துணர்க்கு அமர்ந்தன;—
அகில தல அரசர்கள் கவித்த
　　நெடுஞ் சத்ரத் திரயத்து அசஞ்சலன்
அபரிமிதகுண வரநிதித் தலை
　　வன் கொற்றத் திருப் புயங்களே. (34)

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

புயங்கள் ஆயிரம் திரண்டு இருமருங்கும்
　　பொங்கி ஆயிரம் வரை எனக் குலவ,
கயங்கொள் தாமரைப் போது எனமலர்ந்த
　　கண்கள் ஆயிரம் களிப்ப, விண்ணவர்கோன்
நயம் கொள் ஆநந்த நாடகம் ஆடி,
　　நாமம் ஆயிரம் பாட, வந்தருளும்
சயம் கொள் ஆழியங் கடவுளே! எமக்கு உன்
　　சரணம் ஆவன அரணம் ஆவனவே. (35)

---

கொடுமை; அனலம் - அக்கினி; படை - ஆயுதம்; அசனி - இடி; பத்மத்துணர் - தாமரை மலர்; சத்ரத்திரயம் - முக்குடை; அசஞ் சலன் - சஞ்சலமில்லாதவன்; அபரிமிதம் - அளவில்லாமை; கொற்றம் - வெற்றி.

35 மருங்கு - பக்கம்; கயம் - தடாகம்; விண்ணவர்கோன் - தேவேந் திரன்; நயம் - நன்மை; ஆழியங்கடவுள் - தரும சக்கரத்தை யுடைய அழகிய நாதன்; சரணம் - பாதங்கள்; அரணம் - காவல்.

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

அரணம் கொடிய மதில் மூன்றும்
அழியக் கனன்றீர்; அன்று உள்ள
முரண் அம்பு ஒன்றே நுமக்கு; அங்கு
முதல் மூவருமே நும் அடியில்
சரணம் புகுந்தார்; அளித்தது அவர்
தம்மோடு உலகம் மூன்றையுமே;
கரணம் தவிரப் பொருள் முழுதும்
கண்டீர்! பெருமை கண்டோமே. (36)

கண் மூன்று தோற்றி, இகல் காமன் உடல்
பொடியாகக் கனன்றாய்; தூய
விண் மூன்று மதிக்குடைக் கீழ் வீற்றிருந்து, ஆங்கு
அறம் உரைத்தாய்; மேவுமாறு என்?
எண் மூன்றுபடக் கிடந்த எழுமூன்றின்
இரட்டி மறை தோன்ற, சிந்தை-
யுள் மூன்று குற்றம் அவித்து, ஒருமூன்று
பேர் உலகம் உணர்ந்த கோவே! (37)

---

36 மதில் மூன்று - ஆவரணங்களான முக்குற்றங்கள்; முரண் - வலிமை; முதல் மூவர் - மூவுலகத்து இந்திரர்; அளித்தது - காத்தது; கரணம் - ஐம்பொறி.

37. கண்மூன்று - கேவல ஞானமாகிய மூன்றாவதுகண்; காமன் மன்மதன்; மேவுமாறு - பொருந்தும் விதம்; எண் - கணக்கு; எழுமூன்றின் இரட்டி - நாற்பத்திரண்டு வேதங்கள்; அவித்து - கெடுத்து; தலைவன் - நாயகன்.

## கட்டளைக் கலிப்பா

கோறல் மாற்றி உதைப்பது கூற்றையே;
கூறுகிற்பது மெய்ப்பொருட் கூற்றையே;
ஈறு இல் இன்பத்து இருக்கும் பதத்தனே;
இலங்கு பூமிசை ஏகும் பதத்தனே;
மாறு இல்லாத சொல்மாலை நின் மாலையே;
மலர்ந்து தீர்ப்பது மன்உயிர் மாலையே;
சாறு கொண்டு அளி மூசும் அசோகனே!
சார்ந்தவர்க்கு அருள் செய்யும் அசோகனே! (38)

## எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

சோகமே தரும் துன்ப - வெங்கதித்
தொடர் படுத்து உலகு இடர் படுக்கும் இம்
மோக - மன்னனைத் தலை அரிந்து மூன்
இடுவன்; என்னை விட்டருளும்; - மொய்த்த போர்
வேக வெங்கணைக் காமனைச் செறா
மெய் எலாம் உடன் தழுவு கேவலப்
போக - மங்கையைத் தழுவி இன்பமே
புரியும் அன்பரே! புவன நாதரே! (39)

---

38. கோறல் – கொல்லுதல்; மாற்றி – நீக்கி; மெய்ப்பொருட்கூறு - மெய்ப்பொருளினுடைய கூறுபாடு; ஈறு – முடிவு; பதத்தன் - இடத்தையுடையவன்; பதம் – பாதம்; மாலை – பரமாகமம்; மலர்ந்து - எங்கும் சென்று; உயிர்மாலை - சீவன்களுடைய மயக்கம்; சாறு – தேன்; அளி – வண்டு; அசோகன் - பிண்டி மரத்தையுடையவன்; சோகமில்லாதவன்.

39 தொடர்படுத்து - சங்கிலியினால் கட்டி; மோகமன்னன் - மோகனீயம் என்னும் அரசன்; மொய்த்த - நெருங்கிய; கேவலப் போக மங்கை - முத்தியாகிய இன்ப மாது.

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

நாதனக்கு அமிழ்து, நன் சுவை உதவு
நற்கனி, மருத்துவர் நாணும்
நோய்தனைத் தணிக்கும் நன் மருந்து, உழலும்
நோன் பகை எறிதரும் திகிரி,
வேதனைக் கடலின் தனிப் புணை, நெஞ்சம்
வேண்டிய எலாம் தரும் நிதியம்;
ஆதலின் பரமன் மூலமந்திரம் ஐந்து
எழுத்து அலது ஒன்று அறியேனே. (40)

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

அறிவு அரிய குணத்து அருகன், அசரீரி,
ஆசிரியன், உவாத்தி, கோதம்
செறிவு அரிய முனிவர் எனும் திருநாமம்
முதலெழுத்து ஓர் ஐந்தும் சேர்ந்து
பிறிவு அறிய ஓங்காரம் முன் உரைப்பர்;
பின்னும் அதன் பெருமை ஓரார்;
பொறி வழியில் வரு நாதர் பொருள் இல் வறும்
பெயர் புனையும் புவனத்தாரே. (41)

---

40 அமிழ்து – அமிர்தம்; நோன் பகை – வலி பொருந்திய பிறவிப் பகை; புணை – தெப்பம்.

41 அசரீரி - சித்தர்; கோதம் – குரோதம்; எழுத்து ஓர் ஐந்து – பஞ்ச மந்திரம்; ஓம் - அ, ஸி, ஆ, உ, ஸா எனக் காண்க. இது பஞ்ச நமஸ்காரம் என்வும் வழங்கப்படும்; பொறி வழியில் வரு நாதர் - ஐம் பொறியினுடைய மார்கத்தில் திரிகின்ற தெய்வங்கள்; புவனத்தார் - உலகத்தார்.

## எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

புவன நாதர் என்று உம்மை யாவரும்
புகல்வர்; உம்மிடத்து இகல் கொள் சிந்தையும்
கவன மாவும் வெம் படையும் இல்லை; நீர்
காவல் செய்யுமாறு யாவது? - ஆயிரம்
தவனர் கூடி நின்றனைய ஆயிரம்
தண் மதிக் குழாம் அன்ன சோதி கண்டு,
அவனி நாடு கண் குளிர ஆடகப்
போது மீது உலாம் ஆதி நாதரே! (42)

## வஞ்சித் துறை

ஆதி நாள் புணர்
ஏதில் வல் வினை
கோதில் வாமனை
ஓதில் ஓடுமே. (43)

## கலித்தாழிசை

ஓடும் சகடத்து உருளின் உழன்று சுழன்று
ஆடும் கதியில் இளைப்பாறும் திறம் என்னோ?
ஆடும் கதியில் இளைப்பு ஆறும் - சுரும்பினங்கள்

---

42 நாதர் - நாயகர், தலைவர்; கவன மா - வேகத்தையுடைய குதிரை; படை - ஆயுதம்; காவல் செய்தல் - காத்தல்; தவனர் - சூரியர்; மதிக் குழாம் - சந்திரருடைய கூட்டம்; அவனி - உலகத்தார்; ஆடகப் போது - பொற்றாமரைப் பூ.

43 ஏதில் - அந்நியமான; கோது - குற்றம்; வாமன் - அருகன்; ஓடும் - நீங்கும்.

44 சகடம் - வண்டி; உருள் - சக்கரம்; ஆடும் - பிறந்து இறக்கும்; என்னோ - எப்படி; ஆறும் - நீங்கும்; சுரும்பினங்கள் - நால்

பாடும் பொழிற் பிண்டிப் பண்ணவனைப் பாடவே;
பாடாத அன்று அடவிப் பல் பிறவி; பாடுமினே. (44)

## கட்டளைக் கலித்துறை

பாடுவது உன் அடித் தாமரை;
பல் வினை மாசு அற நின்று
ஆடுவது உன் அடிவாரப் புனல்;
அடியேன் தலைமேல்
சூடுவது உன் அடிச்சேட மலர்;
என் துணைக் கரங்கள்
கூடுவது உன் அடி; கோமகன்!
எனக்கு ஓர் குறை இலையே. (45)

## காப்பியக் கலித்துறை

இலை வயங்கு கனை கடகத்து இமையவர்கள்
அமையலராய் ஏத்த, வானோர்
தலை வயங்கு பிணி மகரக் கடல் அலறக்
கடைந்து அமிர்தம் அளித்த கோவே!
மலை மயங்கு திருமார்பில் மலர் மடந்தை
விற்றிருப்ப, மகிழ்வை யாகில்,
சிலை வாங்கு தோள் அனங்கன் திறல் அழித்த
விசயம் என்னோ இசையுமாறே? (46)

---

வகை வண்டுகள்; பண்ணவன் - அருகன்; அன்று - அந்நாளில்; பல் பிறவி - எழு வகைப் பிறப்பிலும் உண்டாகும்.

45 மாசு - அழுக்கு; ஆடுவது - குளிப்பது; அடிவாரப் புனல் - பாதத்தில் பட்ட சலம்; சேட மலர் - பாதத்தில் தரித்துச் சேடப் பட்ட மலர்கள்.

46 கனை கடகம் - ஒலிக்கின்ற கங்கணங்கள்; அமையலராய் - அடங்காதவர்களாய்; வயங்குதல் - விளங்குதல்; மகரம் - மகர மீன்; அமிர்தம் - ஈண்டு முத்தியைக் குறித்து; மலர் மடந்தை - முத்தி இலக்குமி; அனங்கன் - மன்மதன்; விசயம் - செயம், வெற்றி.

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

இசை பெருக, அருள் பெருக, மதி மலர,
இணை இல் சுகம் ஊழி நிலவ,
திசை மருவு துகில் இறைவர் செழு நெறியில்
வரு சதுரர், சேர நினையார் —
நசை பெருக, வினை பெருக, நவை நலிய,
உயிர்கள் பல தேய, ஒழியா
வசை பெருக, மயல் பெருக, மது நறவு
தசை நுகரும் மாய நெறியே. (47)

மாயம் செய்யும் கரிய நெடு
மாலும் அணுகா மலரடியாய்!
சீயம் சுமந்த மணி அணை மேல்
திகழும் சுடரே! தீவினையேன்
காயம் சுமந்து தடுமாறிக்
கதி ஒன்று அறியாது, இழி கதியில்
போய் அஞ்சிய பின், நீ அஞ்சல்
என்னாது ஒழிகை போதாதே. (48)

---

47 இசை - புகழ்; மதி - அறிவு; இணை இல் சுகம் - ஒப்பில்லாத பேரின்பம்; துகில் – ஆடை; சதுரர் - நல்லோர்; நசை - ஆசை; நவை - குற்றங்களால் வரும் பிணி; தேய - குறைய; வசை - நிந்தை; மயல் - மயக்கம்; மது - தேன்; நறவு - கள்; தசை - நிணம்; மாய நெறி - பொய்யான மார்க்கம்.

48 மாயம் - வஞ்சனை; மால் – மயக்கத்தைச் செய்யும் வினை; சீயம் - சிங்கம்; சுடர் - சூரியன்; காயம் - தேகம்; தடுமாறுதல் - மயங்குதல்; போதாது - ஏலாது, பொருந்தாது.

## எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

**போதின் மிசை பிறந்து இருந்து நடந்து பின்னும்**
**புலவர்மனப் போதுதோறும் புரிந்து வாழும்**
**ஆதி முதற் கடவுளுக்குக் குணப்பேர் தூய**
**ஆயிரத்தெட்டு உடையவர்க்கு ஐந்து உளவாம் என்ப:**
**கோது இல் புகழ்ச் சத்தியோசாதன், வாமன்,**
**கோரன், ஈசானன், தற்புருடன் என்று**
**சாதம் முதல் கலியாணம் ஐந்தின் வானோர் -**
**தாம் அன்பால் இட்ட நாமம் தானே.** (49)

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

**நாம் பரவும் திறம் என்கொல்? நா ஆயி**
**ரம் படைத்தும் வான வேந்தர்**
**தாம் பரவுமாறு அறியாது உள் மயங்கும்**
**தண் மலர்ப்பூம் பாதம் பாதம்;**
**பூம் பதும - வாரணத்தான், பூரண**
**ஆரணம் பயந்த புனிதன், செய்ய**
**தேம் பதும அடி பணிவார் அடி பரவி,**
**அடி பரவிச் சேறும், நெஞ்சே!** (50)

---

49 போது - தாமரைப்பூ; மனப் போது - இதய கமலம்; பெயர் ஆயிரத்தெட்டு உடையவர் - அருகர்; கோது - குற்றம்; சாதம் - பிறப்பு; கலியாணம் - பஞ்ச கலியாணம்.

50 வான வேந்தர் - இந்திரர்; பதும வாரணத்தான் - தாமரை மலராகிய யானையை உடையவன்; பூரணம் - நிறைவு; ஆரணம் - வேதம்; தேம் - வாசனை; சேறும் - செல்லுவோம்.

### பதினான்கு சீர்க் கழிநெடில் விருத்தம்

நெஞ்சத்து அருளுடையவர்கட்கு அணுகுதல்
எளிதாய், அருவினையவர்கட்கு
நினைவிற் குறுகலும் அரிதாய், ஒளியொடு
நீளா அடைபவர் மீளாதேசர்
தஞ்சத்தொடு பகை, பசி, நோய், மறலிகள்
சாராது இறுதி இல் பேரின்பம்
தள்ளா வெள்ளமொடு எல்லா உலகமும்
விழையத் திகழ்தரு தனி நாடா!—
வஞ்சத்தினின் அழல் வேரத்தினின் இகல்
மானக் கமடன் முன் எறியும் கார்
மலையை, சொரிதரு கனலை, பொழிதரு
மழையை, கொலைதரு படையை, பார்
அஞ்சத் தெறும் இடியுருமைத் திருமல
ராகக் கொண்டருள் பெரியோனே!—
அலரே கொண்டு நின் அடியே தொழும் எனை
அருளா தொழுகுதல் அமையாதே. (51)

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

மைச் சந்த மாமுகில்காள்! உலகு அளந்த
முகில் வண்ணன் மருவு நீல
உச்சந்த மலை குறுகி, வலங்கொண்டு,
பணிந்து நீர் உம்பர் நாடு

---

51 அணுகுதல், குறுகுதல் - சேர்தல்; தஞ்சம் - எளிமை; மறலி - காலன்; இறுதி – முடிவு; தனி நாடு - ஒப்பற்ற முத்தி நாடு; வஞ்சம் - கபடம்; அழல் வேரம் - கோபிக்கின்ற பகை; மானம் - வலிமை; கார் – மேகம்; படை - ஆயுதம்; பார் - உலகம்; இடியுரும் - இடியேறு; அமையாது - ஏலாது, பொருந்தாது.

52 மை - கருமை; சந்தம் – அழகு; முகில் – மேகம்; உச்சந்த மலை -

நிச்சந்தம் வினை கெட, ஆடிய தீர்த்த
நெடுவாரி முகந்து போந்து, என்
மெய்ச்சந்தம் அழியவரு நோய் தீர
வினையேன் மேல் வீசுவீரே. (52)

## எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

வீசு உடலம் எறிதிரையின் மேவு கடல் மருவு புணை;
வேக வினை வனம் அடைய விழ உடன் எரியும் மழு;
ஆசை அவிர் பொறி அரவின் ஆவி செல அதிரும் இடி;
ஆறு துரு நய மயல்கள் ஆய இருள் பருகு சுடர்;
மாசு இல் அருள் முனிவர் மனவாவி நடு அலரும் மலர்;
வான அரசர்கள் முடியின் மா மகுட சிகையின் மணி;
ஏசு அரிய சிவ கதியில் ஏறுமவர் குறுகு நெறி;—
ஏடு அவிழும் நளினமிசை ஏகுமவர்
அடியிணையே. (53)

---

ஊர்ச்சயந்தகிரி; உம்பர் - தேவர்; நாடு - உலகத்தவர்; நிச்சந்தம் - தினந்தோறும்; வாரி - கடல்.

53 கடல் - பிறவிக்கடல்; புணை - தெப்பம்; வினைவனம் - தீவினைக் காடு; அடைய - முழுவதும்; மழு - கோடாலி; பொறி - புள்ளி; ஆறு துரு நய மயல்கள் - ஆறு வகைப்பட்ட ஏகாந்தவாதம் என்னும் மயக்கங்கள்; சுடர் - சூரியன்; மனவாவி - மனமாகிய தடாகம்; வான அரசர்கள் - இந்திரர்கள்; சிகையின் மணி - உச்சியிலிருக்கின்ற இரத்தினம்; ஏசுதல் - இகழ்தல்; சிவகதி - முத்தி; நெறி - வழி; ஏடு - இதழ்; நளினம் - தாமரைப்பூ.

## ஆசிரிய விருத்தம்

இணை வளர் இள முலை வெற்பாலே
இடை தளர்பவர் பவளத் தூடே,
எழுதரு நகை பெறில், அத்தாலே
எழு புவியொடு நிலை பெற்றார் போல்,
அணைவுறு மகிழ்வொடு பித்து ஏறா
அயர்பவர் இறைமையை மெச்சாதே
அகல்வன கதிகள் பெறின், பேரா
அகதியை எனையது நச்சேன் — நீள்
பணை திசை முழுதும் நெருங்கா நேர்
படர் ஒளியுலகு உற, இப்பால் இவர்
பனிபடு கடலை ஒதுக்கா ஊர்
பணி நிலம் மிடைதர, முற்றாவார்
பிணையல்கள் சொரி விரை மட்டால் ஏழ்
பெரு நிலம் நனைதர, முட்டாதோர்
பெருகிய செயலையின் மெய்ப்பாலோர்
பிறவிகள் அற அமர் புத்தேனே. (54)

---

54 இணை – இரண்டு; பவளம் – பவளம் போன்று சிவந்த வாய்; நகை - சிரிப்பு; நிலை - பேரின்ப நிலை; அளவுறுதல் - பொருந்துதல்; அயர்பவர் - மயங்குபவர்; மெச்சாது - புகழாமல்; கதி – மார்க்கம்; பேரா அகதி - எக்காலும் நீக்கப்படாத முத்தி; நச்சேன் - விரும்பேன்; பணை - கிளை; ஒளியுலகு – சோதிட லோகம்; ஒதுக்கா - அடக்கி; பணி நிலம் - பவணர் உலகம்; முற்றாவார் – சூழ்பவர்; பிணையல் - மாலை; விரை - வாசனை; மட்டு - தேன்; ஏழ் பெரு நிலம் - எழுவகைப்பட்ட பெருமை யுடைய பிராகாரங்கள். அவையாவன: சைத்யபூமி, ஜலகா திகை, வல்லி பூமி, உபவன பூமி, துவஜ பூமி, கல்பக விருக்ஷம், பவன பூமி; புத்தேள் - கடவுள்.

## சித்து

புத்தேள் உலகைப் பொன்னுலகம்
ஆக்கி, வடகற் குன்றினையும்
பொற்குன் றாகப் பேதித்துப்
போந்தோம்; பூலோகத்தினுக்கும்
வைத்தோம் குளிகையது; நினக்கு
வகுத்தோம்; வறியோம்; நின்பாலே
வந்தோம்; வருக நன்பாலும்
சோறும் எனவே மயங்கியிடும்
சித்தோம்; நம் சித்து உலகனைத்தும்
சேவித்து ஏவல்தனைச் செய்ய,
தேவாதிபனாய் மூவாது
செம்பொற் புரிசை நடுவிருக்கும்
அத்தா உனக்குக் குளிர் பிண்டி
அம்மான் ஆணை தருகின்றோம்
அருந்து; மருந்து; மூன்றவையும்
அகத்தே காட்டித் தருவோமே. (55)

---

55 புத்தேள் உலகு - தேவர் உலகு; வடகற்குன்று - வடக்கிலிருக்கும் மேருமலை; பேதித்து – மாற்றி அமைத்து; குளிகை – இரச குளிகை; வகுத்தோம் - சொன்னோம்; வறியேம் - வறுமையை யுடையேம்; சித்தோம் - சித்தர்யாம்; சேவித்து - வணங்கி; செம் பொற்புரிசை - செம்பொன்னால் ஆகிய மும்மதில்; அருந்து - புசி; மருந்து மூன்று - இரத்தினத் திரயங்களாகிய மூன்று மருந்துகள்; அகம் - மனம்.

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

தருமத் திகிரிப் படையில் புவனத்-
திரயந்தனை ஆள்வாய்!
கருமக் கடலைச் சுவறக் கடையும்
கடவுட் கண நாதா!
ஒருமைப்பட உற்று உன பொற்கமலச்
சரணத்து உளம் வைக்கும்
பெருமைத் திருவைத் தரின், மற்று அடிமைத்
திறனில் பிழையேனே. (56)

## எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

பிழை பிறங்க நீண்ட நசை
பெருக வந்து வாழ்ந்தவர்கள்
பிறகு நின்று வான் கவிகள்
பிணையும் மைந்தர் போன்று,
மழை சொரிந்து காய்ந்த கரி,
வர துரங்கம் ஏந்து பிடி
மணி தயங்கு பூந்துகில்கள்,
வருக என்று வேண்டல் இலன்;

---

56 புவனத் திரயம் - மூன்று உலகம்; சுவறல் - வற்றல்; கடவுட் கணம் - முனி கணங்கள்; திரு - செல்வம்; பிழையேன் - தப்பிப் போகேன்.

57 பிழை - குற்றம்; நசை - ஆசை; பிறகு - பின்புறம்; வான் கவிகள் - மேலான பாட்டுக்கள்; கவிகள் புனையும் மைந்தர் - புலவர்; மழை - மத மழை; கரி - யானை; வரம் - மேன்மை; துரங்கம் - குதிரை; பிடி மணி - ஒருபிடி அளவான இரத்தினங் கள் கொண்ட ஆபரணங்கள்; துகில் - ஆடை; வேண்டல் - விரும்புதல்; விழைவு - விருப்பம்; பூந்தொடையல் - பூமாலை;

விழைவு அமைந்த பூந்தொடையல்
மிஞிறு பொங்க ஆர்ந்து, திசை
வெறி பரந்து தேன் துவலை
விரவு தென்றல் சூழ்ந்து, வெயில்
குழை, மணிவடங்கள் நான்று, புடை
இருள் செறிந்து தூங்கு குளிர்
எழில் கொள் பிண்டி வேந்த! நினை
என குணங்கள் வேண்டுவனே. (57)

## ஆசிரியத் துறை

வேண்டுதல் வேண்டாமை இல்லாத வீரன் அடி
பூண்டு கிடந்தால், புறத்து இறுத்த வெங்கூற்றம் போகும் போலும்?
பூண்டு கிடந்தால் புறத்து இறுத்த பின்னரும்
மீண்டு அது போகும் எனில், வீரன் அடி பேணாது விடுவது என்னே? (58)

## கட்டளைக் கலித்துறை

விடுவது வெவ்வினை; விட்டால் பெறுவது விடு; வந்து
படுவது பேரின்ப வெள்ளம் என்றால், என்றன் பாவி நெஞ்சம்
கெடுவது தான் தனக்கு எண்ணாது கெட்டேன்; பரமன்
வருவது இல்லா நெறிச் செல்லாது ஒதுங்கும், மனையகத்தே. (59)

---

மிஞிறு - வண்டு; வெறி - வாசனை; வெயில் குழை - சூரியனின் ஒளி போன்ற தளிர்கள்; நான்று - தொங்கவிடப்பட்டு; புடை - பக்கம்; தூங்குதல் - தங்குதல்; எழில் - அழகு; என குணங்கள் - எனக்குரிய எண் குணங்கள்.

58 வேண்டுதல் வேண்டாமை - விருப்பு வெறுப்பு; வீரன் - அருகன்; புறத்து இறுத்த - பக்கத்தில் வந்த; வெங்கூற்றம் - வெப்பமாகிய வினையாகிய இயமன்; மீண்டு - திரும்பி.

59 படுவது - பொருந்துவது; மனையகம் - இல்லறம்.

## குறம்

### ஆசிரிய விருத்தம்

மனைக்கு விளக்கம் மிகப் பெரிது; இன்னும்
வருந்தல்; பெருந்திருவே!
வந்து ஒரு துன்பம் அகன்றது; இனித் துயர்
வாரல; நெஞ்சினுளே
நினைக்கிறது ஒன்று உளது; அத்திசை சொல்லுவன்
இத்திசை மேலது காண்;
நிச்சயமே அது கூடும்; அனங்கனை
நீறு படுத்து, இகல் கூர்
வினைப்பகை செற்று, உடன் முற்றும் உணர்ந்து, அற-
வாணை உலோகம் எலாம்
விளங்க வளம் கெழு பூமிசை வந்தவன்;
என் பெறு வெற்பினில் வாழ்
இனக் குற மக்கள் உரைப்பன பொய் அல;
பொய்ப்பன, புன் சமயத்து
ஏதிலர் தம் மொழி; இட்டு வினாவிடு,
எனைத்தும் உரைத்திடவே. (60)

---

60 பெருந்திருவே - விளி; அத்திசை - நினைக்கின்ற திசை; இத்திசை - பூமியின் கண்; நிச்சயமே - உண்மையாகவே; அனங்கன்- மன்மதன்; இகல் கூர் வினைப் பகை - வலி மிகுந்த வினையாகிய சத்துரு; அற வாணை - தருமமாகிய ஆக்கினை; பூமிசை வந்தவன் – தாமரை மலர் மேல் வந்தவனாகிய அருகன்; குற மக்கள் - குறப் பெண்கள்; ஏதிலார் – அந்நியர்; இட்டு வினா விடு - சங்கையிட்டுக் கேள்; எனைத்தும் – எத்தன்மைப் பட்டதையும்.

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

உரம் திகழும் வில்லவன்தன் சிலையை இறுத்து,
உயர் ஞான மகளை வேட்டு,
வரம் திகழும் புகழ்ச் சோதி வளநாடு
கைப்படுத்த வரதர் கண்டீர்—
பரந்து இயலும் சுடர் மௌலிப் பல்லவரும்,
பண்ணவரும், விண்ணாடு ஆளும்
புரந்தரரும் தொழ உறையும் பொன்னெயில் விட்டு
என் இதயம் நண்ணினாரே. (61)

## காப்பியக் கலித்துறை

நண்போடு அன்பு நல்அருள் பேணி, உயிர்க்கு எல்லாம்
கண்போல் வாழிர்; கைதவம் ஒன்றும் விடுகல்லீர்;
வண் போது ஏறும் வாமனை நாளும் பணியிர்; இப்
புண் பேர் என்றும் காப்பது நன்றோ, புலவீரே. (62)

---

61 உரம் - வலிமை; வில்லவன் - கரும்பு வில்லையுடைய மன்மதன்; இறுத்தல் - ஒடித்தல்; ஞான மகள் - ஞானமாகிய கன்னிகை; வேட்டு - கலியாணம் செய்து; வரம் – மேன்மை; நாடு – இங்கே முத்தி நாடு; வரதர் - மேலானவர்; மௌலி – கிரீடம்; பல்லவர் - பல தேவர்; பண்ணவர் - முனிவர்; புரந்தரர் - இந்திரர்; பொன்னெயில் – சமவசரணம்; நண்ணினார் - பொருந்தினவர்.

62 நண்பு - சினேகம்; அருள் - கருணை; கைதவம் – வஞ்சனை; வண் போது - வளப்பான தாமரைப்பூ; வாமன் - அருகன்; நாளும் - எந்நாளும், எக்காலமும்; புண்பேர் - புன்பேர் - அற்பமாகிய சொல்.

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

புலவர் மொழிந்த மொழி கமழ் தொங்கற்
பூ நிரை கொண்டு தியானவாள்
வலவன் வலம் கொள் அடியின் வணங்கி
வாழ்கென நெஞ்சு தாழுமேல்,
இலவம் மலர்ந்த அணி இதழ் இன்சொல்
ஏழையர் செங்கண் வேல்கள்போல்
கோல வல எங்கள் மறலி வளைந்த
கோள்வலை உய்ந்து போவனே. (63)

போவார் போம் நெறி பல ஆம்; அந்நெறி
போனால் அவரோடு புகழ் வேண்டும்
தாவா உயர்கதி ஒழியப்புகுவதே
தவிரா; வெந்துயர் நரகு ஆம்; நின்று
ஓவாது இங்ஙனம் உழல்வேன் மற்று உனது
ஒருவா அறநெறி பெற நல்காய்-
கோவா நிலவு உமிழ் தரளக் குளிர்வட
நிரை முக்குடை அமர் கோமானே! (64)

---

63 புலவர் – சாதுக்கள்; தொங்கற்பூநிரை - மாலையாகிய பூக்களின் வரிசை; தியானவாள் - சுக்கிலத்தியானமாகிய வாள்; வலவன் – வல்லவன்; வலம் - வெற்றி; நெஞ்சு – மனம்; தாழுமேல் - பொருந்தினால்; இதழ் - உதடு; ஏழையர் - மாதர்; வெங்கண்மறலி - கொடுமை பொருந்திய காலன்; கோள்வலை - குற்றமாகிய வலை; உயர்ந்து போவன் - பிழைத்துப் போவேன்.

64 நெறி – வழி; புகழ் வேண்டும் - புகழவேண்டும்; தவா - கெடாத; உயர்கதி - முக்தி; தவிரா - நீங்கா; வெந்துயர் - வெப்பமாகிய துன்பம்; ஒருவாஅறநெறி - நீங்காத நல் மார்க்கங்கள்; கோவா - கோக்கப்படாத; நிலவு - ஒளி; தரளக்குளிர்வடம் - முத்துக்களின் குளிர்ந்த சரங்கள்; கோமான் - தலைவன், அருகன்.

## கைக்கிளை

### வெண்பா

கோமான், குளிர்முக் குடையான், பொற் கோகனக
வாமான்தேர் மேல் ஒருகால் வாரான்கொல் - ஏமாண்
சிலைக் கரும்பு நாண் ஒலிக்கும் தேம் கோதை தல்லார்
முலைக்கு அரும்பும் நோயுடையேன் முன்? (65)

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

முன்னைப் பிறப்பு எண்ணில், பல் கோடி எல்லா
முயன்று இன்று பெற்றேன் முதற் போதி என்றே
பின்னைப் பிறந்து உற்ற யான் இல்லை என்னும்
பெரும் பித்தரோ புத்தர் ஆவார்? தெளிந்தீர்!
பொன்னில் பிறக்கும் கலத்தில், சலத்தில்
பொங்கும் தரங்கில், பெறும் பைகள் தோறும்
தன்னில் திகழ்ந்து ஆவி நிற்குங்கொல் என்னும்
தனிப் புத்தர் பாதங்கள் சாரீர் விரைந்தே. (66)

---

65 கோகனகம் - தாமரைப்பூ; வாமான் - தாவுகின்ற குதிரை; ஏ - அம்பு; பூங்கணை; தேம் கோதை - வாசனை பொருந்திய மாலை.

66 போதி - மதி ஞானி; புத்தர் - புத்தியையுடையவர்; தெளிந்தீர் - வேதம் உணர்ந்து தெளிந்த அறிவு பெற்றவர்களே; கலம் - ஆபரணம்; சலம் - நீர்; தரங்கு - அலை; பைகள் - தேகங்கள்; ஆவி - சீவன்; புத்தர் பாதங்கள் - புத்தியையுடைய அருகரது சரணங்கள்.

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

விரை ஆர் மலர்மிசை வருவார் திருவறம்
விழைவார் - கொலையினை விழையார்; பொய்
உரையார்; களவினை ஒழுகார்; பிறர் மனை
உவவார்; மிகு பொருள் உவவார்; வெஞ்
சுரையால் உணர்வினை அழியார்; அழி தசை
துவ்வார்; விடம் என எவ்வாறும்
புரை ஆர் நறவினை நுகரார்; இரவு உணல்
புகழார்; குரவரை இகழாரே. (67)

## கலிவிருத்தம்

இகழ்வார்களை வெகுளார்; இடர் உழவார்; பிற இகழார்;
புகழ்வார்களை அருளார்; மகிழ் புரியார்; பிறர் மகிழார்;
திகழ் வான் முடிமிசை வாழ்சினவரன் யான் எனும் நினைவின்
நிகழ்வார் இரு திறம் ஆம் துறவரசு ஆள் நிருமலரே. (68)

---

67 திருவறம் – அழகிய இல்லற தருமம்; விழைவார் – விரும்புவார்; உவவார் - விரும்பார்; சுரை – கள்; துவ்வார் - உண்ணார்; விடம் - நஞ்சு; புரை - குற்றம்; நறவு - தேன்; குரவர் - பெரியோர்.

68 வெகுளார் - கோபியார்; இடர் - துன்பம்; அருளார் – விரும்பார்; பிறர் – அன்ய சமயத்தார்; திகழ்வான்முடி – விளங்குகின்ற கற்பத்தினுடைய சிகரமான அகமிந்திரலோகத்துக்கு மேல் இருக்கும் சித்த க்ஷேத்திரம்; நிகழ்வார் - நடப்பவர்; இரு திறம் ஆர் துறவு - புறப்பற்று அகப்பற்று ஆகியவற்றைத் துறத்தல்; நிருமலர் - தூயோர், துறவறத்தவர்கள்.

## வெண்கலிப்பா

மலர் தலை மணி விசும்பின் வண்டு ஆர்ப்பப் பூத்து இலங்கும்
இலகு இதழ் ஆயிரத்தெட்டின் எழில் கொண்ட மலரின்மிசை
அலகை இல் வினை தெறஉம் அடல் ஆழி முன் நடப்ப,
உலகம் அடிப்படுத்தாய்க்கு என் உள்ளம் அடிப்படாதாக,
இலையம் இல் பெருஞ்செல்வம் இரந்தோர்க்கு வரையாத
தலைவ! நின் தலை வண்மைக்கு என் இரவு தகாதாக,
கொலை இன்றி உலகு ஆளும் குடை வேந்த! நின் குடைக்கீழ்
அலைவு என்கண் உற நின்ற; அறச்செங்கோல் சேய்த்தாமோ?

ஆதலின்,
நெகிழ்தக்கது ஆக்கி என் நெஞ்சத்து உவந்துஈ-
நகுதக்கார் நெஞ்சம் நடுக்கி வெங்கூற்றம்
புகுதப் பொறி கலங்கும் போது. (69)

## வண்டு விடு தூது

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

பொறி வரிய வண்டினங்காள்! உமக்கும் ஆம்; என்
பொருந்திய வெந்துயர் நோய்க்கு மருந்தும் ஆகும்;
செறிவு அரிய உமைத் தொழுதேன்; வினை அகற்றும்
செம்பொன் எயிலகம் குறுகி, தேன் யாழ் செய்யும்

---

69 மலர்தலை - பரந்த இடத்தையுடைய; மணி - அழகு; விசும்பு - ஆகாயம்; இலகுதல் - விளங்குதல்; மலர் – தாமரைப்பூ; அலகை - அளவு, எண்ணிக்கை; அடல் ஆழி - வெற்றியையுடைய தரும சக்கரம்; அடிப்படுத்தல் - கீழ்ப்படுத்தல், வணங்கப் பண்ணுதல்; இலையம் - கேடு; வண்மை – கொடை; இரவு - யாசிப்பு; குடை வேந்த - முக்குடையை உடைய நாதனே; அலைவு - வருத்தம்; சேய்த்தாமோ - தூரமாகுமோ; ஈ - கொடு; நகுதக்கார் - நகைக்கத் தக்கவர்கள்; வெங்கூற்றம் – கொடிய காலன்; புகுத - வர; பொறி - ஐம்பொறி.

வெறிகமழும் மலர்மாரியூடு போகி,
வீசு சாமரை வெள்ளம் கடந்து புக்கு, என்
அறிவர் மாமணி அரங்கின்மிது தூங்கு
மலர்த்தாம வாசம் கொண்டு அணைகுவிரே. (70)

## கலி விருத்தம்

அணையோம் இனி - ஆடக நாள்மலர் மேல்
இணை ஓது அரியார் தமர் ஏசுவர்; கண்
பிணையோ, பெரு நீலம் மலர்ந்தனவோ,
கணையோ என நின்றவர் காதலையே. (71)

## மறம்

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

காது சிலை - வல்லமைகள் எம்மையவர் பண்டே
கண்டறிவர்; தங்கள் வலிகொண்டு மகள் என்னார்;
கோது இல் அருகன் திருவறத்தவர்கள் - ஏடா! -
குலம் கெடவும் ஆடுவர்களோ உறவு? கூறும்

---

70 பொறி - புள்ளி; துயர் - துன்பம் செய்யும் வியாதி; மருந்து - அமிழ்தம்; செறிவு அரிய - நெருங்குதற்கு அரிய; செம்பொன்னெயில் - சிவந்த பொன்னாலாகிய மும்மதில் சூழ்ந்த சமவ சரணம்; தேன் - வண்டுகள்; மலர்மாரி - தேவர்கள் சொரியும் பூ மழை; சாமரை வெள்ளம் - இந்திரர்கள் வீசுகின்ற சாமரைக் கூட்டம்; அறிவர் - அருகர்; அரங்கு - சபை; தூங்கும் - தொங்கும்; மலர்த்தாமம் - தாமரைப் பூமாலை; அணைகுவீர் - வந்து சேருவீர்.

71 ஆடக நாள் மலர் - பொன்னிறம் வாய்ந்த அன்று மலர்ந்த தாமரைப்பூ; இணை - ஒப்பு; தமர் - அடியார்; பிணை - பெண்மான்; நீலம் - கருங்குவளை; கணை - அம்பு; காதல் - ஆசை.

72 காதுசிலை - மோதுகின்றவில்; மகள் - பெண்; ஏடா - தோழனே;

சாதி குலம் என்று இவை இரண்டும் அல; பேசும்
சத்தம் அலது என்னும் ஒரு புத்தன் உரை கொண்டோ?
வேதியர்கள் நீதி கெட ஓது மறை கொண்டோ?
வெற்றி முடி மன்னன் இது சொற்றது;
[உரையாயே. (72)

## கட்டளைக் கலித்துறை

உரையோம் பயன் செய்தவற்கு என்று வைத்து,
அறம் ஓதும் வஞ்சத்து
உரையோடு உறாத சுகதர் கண்டீர்! -
பொங்கு தூங்கு ஒலி நீர்
திரையோடு உருண்டு எழு சங்கம்
சொரிந்த செழுந் தரள
நிரையோடு உறங்கும் துறை மயி -
லாபுரி நின்றவரே. (73)

---

விளி. சாதி - பிறப்பினால் ஆகுவது; குலம் - வமிச பரம்பரையால் ஆவது; சத்தம் - சொல்; சொற்றது - சொன்னது.

73 செய்தவற்கு - வினை செய்தவனுக்கு; வஞ்சத்துரை - கபடநெறி; சுகதர் - நல்ல நடையையுடைய புத்தர்; தூங்குஒலி - தங்கிய சத்தம்; தரளம் - முத்து; நிரை - வரிசை.

## எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

மயிலாபுரி நின்றவர்; அரியாசன உம்பரின்
மலர் போதில் இருந்தவர்; அலர் பூவின் நடந்தவர்;
அயில் ஆர் விழி மென்கொடி மிடை தீபை நயந்தவர்;
அமராபதி இந்திரன் அணி ஆடல் உகந்தவர்;
கயிலாயம் எனும் திருமலைமேல் உறைகின்றவர்;
கண நாயகர்; தென் - தமிழ் மலை நாயகர்;
[செம்பொனின்
எயிலார்; இலகும் சினகிரி ஆள்பவர்; சம்பையர்;
எனை ஆள நினைந்துகொல் வினையேனுள்
[அமர்ந்ததே. (74)

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

அமரநாடு ஆளும் அரசரை அந்தப்
புரத்தினோடு ஆணையால் அழைத்து,
குமரி மூவெயில் சூழ் கோயில் ஓவாத
சேவகம் கொள்வது குணனே?-
தமர்களே பிறர்கள் எனும்திறம் இன்றித்
தம் உயிர் என உயிர் அளிக்கும்
நுமர் எலாம் நும்மை என் சொலார்? சொல்லீர்,
நான்மறை நூல் மொழிந்தவரே. (75)

---

74 அரியாசனம் - சிங்காசனம்; உம்பர் - மேல்; மலர்போது, அலர்பூ - மலர்ந்த தாமரைமலர்; அயில் ஆர்விழி - வேல் போலப் பொருந்திய கண்; மிடைதல் - நெருங்குதல்; தீபை - தீபங்குடி; அமராபதி இந்திரர் - கற்பங்களில் வாழும் இந்திரர்கள்; தென் தமிழ் மலை - தெற்கிலிருக்கும் பொதியமலை: எயிலார் - மும்மதில் சூழ்ந்த சமவ சரணத்தையுடையவர்; உள் - மனம்.

75 அமர் நாடு ஆளும் அரசர் - இந்திரர்கள்; அந்தப்புரம் - தேவியர்கள்; குமரி - அழிவில்லாத; மூவெயில் சூழ் கோயில் - சமவ

## தவம்

### கலி வெண்பா

நூல் மொழியுமாறு நூழைந்து, நமக்கு உறுதிப்
பான்மைய வாகப் பல நாடி - யான் மொழியக்

கேண்மின், நமரங்காள்! கேடு இன்றி நிற்பது உயிர்
காண்மின்; உடம்பு, கவின், இளமை - கேண்மையுடன்

வல்லாண்மை, செல்வம் என்று இவ் எல்லாம் வானத்து
வில் ஆகும் என்றே விழையன்மின்; - தொல்லை

முரண் ஆர் வினைப்பகைவர் மூளுங்கால், வாமன்
சரணார விந்தங்கள் அல்லால் - அரணாய்நீர்

எண்ணும் பொருள், சுற்றம், யாக்கை என்று இன்னவெலாம்
நண்ணும் சரண் ஆக நாடன்மின்; - எண் இறந்த

ஊழிகள் எல்லாம் உலவாத் தடுமாற்றத்து
ஆழிகள் ஐந்தின் அனந்தமுறை - சூழும்

கறங்கின் உழலும் கதிதோறும் துன்பம்
பிறங்கும் பிறப்பு அஞ்சி வாழ்மின்; - சிறந்த

---

சரணம்; சேவகம் - பணிவிடை; தமர்கள் – சுற்றத்தார்கள்; நுமர் – உம் அடியார்கள்; நான்மறைநூல் - நான்கு வேதங்களாகிய பரமாகமம்.

76 நமரங்காள் - பந்துக்களே, விளி; கேடு – நாசம், அழிவு; கவின் - அழகு; கேண்மை – சுற்றம்; இவ் - இவை; வானத்துவில் - மேகத்தில் இட்ட வில், இந்திரவில்; விழையன் மின் - விரும்பாதொழியுங்கள்; தொல்லை - பழமை; முரண் - வலிமை; மூளுதல் - தோன்றுதல், எதிர்த்தல்; வாமன் - அருகன்; அரண் - காவல்; யாக்கை - உடம்பு; சரண் - அடைக்கலம், புகலிடம்; உலவா - கெடாத;

பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணிகள் எனும் துன்பம்
உறப் புணர யான் உழக்கும் காலை - அறத்திறம் சேர்ந்து

யானாம் ஒருவனே யல்லது எனக்கு மற்று
ஏனோர் துணையல்லர் என்று அறிமின்;-ஈனம் இல்சீர்ச்

சேதனமால் ஆவி, அசேதனமால் இவ் உடம்பு,
ஆதலினால் வேறு ஆய அவ் இரண்டும்;-சேர்தலினால்,

மண்ணும் ஒன்றாய் விடினும், வாளும் தடறும் போல்
பின்னம் எனவே பிரித்து உணர்மின்;-துன்னும்

புழுப்பிண்டம் ஆகிப்புறம் செய்யும் தூய்மை
விழுப்பொருளை வீறு அழிப்பது ஆகி,-அழுக்கு ஒழுகும்

ஒன்பது வாயிற்றாம் ஊன்குரும்பை; மற்றும் இதனால்
இன்பமது ஆம் என்னாது இழித்து உவர்மின்;-துன்பம்

துளக்கம் ஆம்யோகம், துவர் அடக்கம் இன்மை
விளக்கம் இல் தீக் காட்சி: இவற்றால்-கிளப்பரிய

ஈறு இல் வினை ஈரைந்திறத்தின் எமது உயிர்க்கண்
ஊறும் எனவே உணர்ந்து உய்ம்மின்; - வீறுசால்

---

அனந்த முறை - பல தடவை; கறங்கு - காற்றாடி; கதி - பிறப்பு; பிறங்கும் - மிகும்; அறத்திறம் - சின தரும வகை; ஏனோர் - பிறர்; ஈனம் - குற்றம்; சேதனம் – அறிவுடையது; ஆவி - உயிர்; அசேதனம் - அறிவில்லாதது; மன்னுதல் - நிலைபெறுதல்; தடறு - கூடு; பின்னம் - வேறுபட்டது; துன்னுதல் - நெருங்குதல்; விழுப்பொருள் – மேன்மைப் பொருள்; வீறு - பெருமை; ஒன்பது வாயில் - நவ துவாரம், குரம்பை - தேகம்; உவர்மின் - வெறுத்து விடுங்கள்; யோகம் – திரிகரணங்கள்; கிளப்பரிய - சொல்லுதற்கரிய; ஈறு - முடிவு; குத்தி - திரிகுத்தி; சமிதை – பஞ்ச சமிதி; அறம் - தச தருமம்; அடக்கம் - விரதம்; உள்ளுமின்கள் – நினையுங்கள்;

சூத்தி, சமிதி, அறம் சிந்தை கோது இலா
மெய்த்தவம் ஈராறு அடக்கம் என்று இவையால் -
[ஒத்து எழுந்த

மாறாத ஞான தியானத்தால் வல்வினைகள்
ஊறாது மாறும் வகை உள்ளுமின்கள்; - கூறும்

பரிசகசையம், தவம், அடக்கம் மூன்றால்
விரிதரு ஞான தியானத்து - அருவினைகள்

தத்தம் நிலையோடு அநுபாகந்தாம் குறைந்து
ஒத்த உதிர்ப்பாம் எனத் தெரிமின் - வைத்த

அடி ஏழ் கயிற்றிடைகள் ஒன்றுடன் ஐந்து ஒன்று
முடி ஏழ் கயிற்று இரட்டி ஒக்கம் - படி அளவாம்;

தொல் உலகு பல் உயிரும் தோற்றற்கும் வீட்டற்கும்
எல்லை இடம் என்று இயைந்து நோக்குமின்கள்; - சொல்லின்

அரிய பொருள் முதலாம் சாதனங்கள் ஐந்தும்
பிரிவின்றி உடன் பெற்றால் பின்னும் - தெரிவுடைய

ஞானத் தெளிவு ஒழுக்கம் ஆகிய நல்லறம்
தான் நற்கு அரிது ஆம் தகை நினைமின்; - மானம் தீர்ந்து

---

இடை - மத்தி; ஏழ்இரட்டி - பதினான்கு; ஒக்கம் - உயர்ச்சி; படி - பூமி; வீட்டற்கும் – முத்தியடைதற்கும்; எல்லை இடம் - அளவு பட்ட இடம்; சாதனங்கள் ஐந்து - திரவியம் முதலிய சாதனங்கள் ஐந்து; தெளிவு – நற்காட்சி; தகை - பெருமை; மானம் - அபிமானம்; கறு – பகைமை; இகந்த - நீங்கிய; ஈராறு சிந்தை - துவாதசா அநுப்பிரேக்ஷை; ஓர் ஆறு - ஒரு வழி; பேராது - நீங்காமல்; சூது - உபாயம்.

இம்மை குறியாது இதமும் மதுரமும் ஆம்
மெய்ம்மை அருள் சுரந்து வீறு அமைந்து.—பொய்ம்மை

கறு இகந்த செவ்விதின் நற்காட்சியர்பால் தோன்றும்
உறுதிமொழி அரிது என்று ஓர்மின்;—மறுஇல் இவ்

ஈராறு சிந்தைகளும் இன்பவுலகு எய்துவார்க்கு
ஓர் ஆறு எனப் பரமன் ஓதியவால்—பேராது

உளம் கொண்டு இவைஇவை பேணி, துளங்காது
வைகலும் ஒழுகுதல் நன்றே.

## மடக்கு

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

77. சூதும் போது ஆர் முலைகட்கு ஏதம்கூர் சிறிடையில்
சுடரும் பூணார்களுடன் படர்வண்டு ஆர் காவும் அளி
ஊதும் போது ஆர் அமளிமீதும் தீரா அமரர்
உலகும் தாள்பாட, வெறி இலகும் பூஏறி, இறை
போதும் போதா இயல்வன், ஏதும் போதா இயல்வன் ;
பொழியும் பூவாளிமறம் ஒழியும் பூவாளி, மறம்
காதும் பேர் ஆழியுடன் போதும்—பேர் ஆழியுடன்
கழுமும்பேர் ஓதையனே, குழுமும்பேர் ஓதையனே.

---

77 சூது - சொக்கட்டான் காய்; போது - தாமரை முகை; ஏதம்கூர் - வருத்தப்படுகின்ற; சீறிடை - சிற்றிடை; சுடர்தல் - பிரகாசித்தல்; பூணார் - மேகலாபரணமுடைய மாதர்; கா - கற்பகச் சோலை; அளி - வண்டு; போது - மலர்; அமளி – படுக்கை; அமரர்-தேவர்; உலகம் - உலகத்தவர்: தாள் - பாதம்; வெறி - வாசனை; பூஏறி - தாமரைப் பூவில் அமர்ந்து; இறைபோதும் - கணப்பொழுதும்; இயல்வன் - சஞ்சரிப்பவன், குணமுடையவன்; ஏதும் போதா-எப் பொருளும் ஒவ்வாத; பூவாளி - மலரம்புகளையுடைய மன்மதன், பொலிவினையுடையவன்; ஆழி - தரும சக்கரம், கடல்; கழுமும் - பேர் ஓதையன் - திவ்யத் தொனியுடையவன்; குழுமும் பேர் ஓதையன்—கூட்டங்களாகிய ஆயிரத்தெட்டு நாமங்களினால் ஓதப் படும் சுவாமி, அருகன்.

அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

**78.** **ஓதாது உலகில் பொருள் அனைத்தும்**
**உடனே உணர்ந்தான், உணர்ந்தவற்றை**
**வேதாகமங்கள் ஆறேழால்**
**விரித்தான் அமலன்; விரித்தனவே**
**கோது ஆர் நெஞ்சத்தவர் பிறழக்**
**கொண்டே, தாமே கண்டார்போல்**
**பேதா பேதம் பேதம்எனப்**
**பிணங்கா நின்றார் பிரமித்தே.**

எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

**79.** **பிரமனே! காமனை வெந்கண்ட வென்றிப்**
**பெருமானே! கருவின்நிலை வினையைவென்ற**
**சரமனே! சகம்முழுதும் வணங்கச் செல்லும்**
**சதுமுகனே! நின்முகப்பேர் தரியார்மீது**
**கரம் அனேகம் படைத்துப் படைகள் ஏந்தி,**
**கண் அனேகம் பரப்பிக் கனல்கள் சிந்தி,**
**சிரம் அனேகம்சுமந்து, செருச்செய்து ஓடும்**
**தேவரோ வீரர் எனத் தேர்கிற்பாரே.**

---

78 உலகிற்பொருள்-உலகத்திலுள்ள அறுவகைப் பொருள்; ஆறேழ்-நாற்பத்திரண்டு அங்கம்; விமலன் - அருகன்; கோது - குற்றம்; பிறழ-மாறுபாடாக; பேதாபேதம்-பேதமும் அபேதமும்; பிணங்கா நின்றார் - மாறுபடுகின்றார்கள்; பிரமித்தல் - மயங்குதல்.

79 காமன்-மன்மதன்; வெந்கண்ட-செயித்த; கரு - கருப்பம், சரமன்-சரம தேகத்தையுடையவன்; சகம்-உலகம்; சதுமுகன்-நான்முகன் முகப்பேர்-மார்க்கங்களாகிய பேர்; மீது - உடம்பின் மேலே; கரம் - கை; அனேகம்-பல; படை-ஆயுதம்; கனல்-நெருப்பு; சிரம்-தலை; செரு-போர்; தேற்கிற்பார்-தெளிவார்கள்.

அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

80. பார்ஏழ் உடையாயைப் பார்அவந்து,
படைத்து, உண்டாய் என்குவேனோ?
கார்ஏர் கருமக் கடல் கடந்த
கைவலத்தாய் என்குவேனோ?
போர்ஏறு காமன் பொருசிலையின்
நாண் அறுத்தாய் என்குவேனோ?
நேரே எழுபிறப்பும் நீதலைவன்,
யான் அடிமை என்குவேனோ?

81. ஓர்ஏழ பங்கவுரை வரம்புஇல் குணம்
தோறும்ஒரு பொருளுக்கு ஓதி,
பார்ஏழும் தொழ இருந்த பண்ணவனைப்
பணியாதே அவந்த காலம்
ஈர்ஏழு தலத்தில், இருநெறி வழியில்,
ஐங்கோட்பில், கதிகள் நான்கின்
நேர்ஏழு பிறவிகளின், இருவினையின்
ஒரு வினையேன் நின்ற ஆறே.

காப்பியக் கலித்துறை

82. நில்லாத செல்வத்து நிற்பேமை
நீ அஞ்சல் என்னாவிடில்,

---

80 பார்-பூமி, உலகம்; கார்-கருமை; கைவலத்தாய்-முத்தியையுடைய வனே; ஏறு-சிங்கம்; நாண்-வில் நாண், நாரி; என்குவேனோ- என்று சொல்வேனோ?

81 பங்கவுரை-நியாய மொழி; வரம்பு-அளவு; பார் - உலகம்; பண்ண வன்-சுவாமி; அனந்தம்-பல; ஈர் ஏழுதலம்-மார்க்கனா ஸ்தானம் பதினான்கு; இருநெறி-இல்லறம், துறவறம்; கதி-பிறப்பு; பிறவி- பிறப்பு; இருவினை - நல்வினை, தீவினை.

82 புல்லாது-அணையாது; புத்தேளிர்-தேவர்கள்: நேமி-தருமசக்கரம் வில் - கருப்பு வில்; அலைத்தல் - வருத்தல்; மாரன் - மன்மதன் விலக்காதது-நீக்காதது.

புல்லாது அருட்கு என்று புத்தேளிர்
சொல்லும் புகழ்ச் சோதியே!
எல்லா உயிர்க்கும் அளிக்கின்ற
நின் நேமிஇன்று என்கொலோ—
வில்லால் அலைத்து என்கண் மாரன்செய்
வெந்நோய் விலக்காததே.

அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

83. விலங்காய்ப் பிறந்து தடுமாறி
விழ்வார் தம்மைத் தேவர்இவர்
கலங்காக் கருணையால் பிறந்து
காப்பார் என்பீர்! பிறவாது
நிலம்காப்பார், வன்பிலம் காப்பார்,
நெடுவான் காப்பார், விலங்குகள்ஐம்
புலம் காப்பார்-தம்மொழி கேட்டுப்
புவி காப்பாரைப் போற்றிரே.

வெண்பா

84. போற்றும் இதுஎன்கொல் பொய்ந்நூல்களை? - புலவீர்!
சாற்றும் அனந்த சதுட்டயத்தான் - ஏற்றும்
துளக்கப் படாத சுருதியால் அல்லால்
அளக்கப் படுமோ அறம்?

---

83 என்பீர் - என்று சொல்லுமவரே; நிலம் - பூமி; பாதலம் - பாதாள உலகம்; வான் - சுவர்க்கம்; ஐம்புலம் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து பொருள்; புவி காப்பார் - உலகத்து உயிர்களைக் காக்கும் அருக பரமேட்டி.

84 புலவீர் - அறிவுடையவரே; சாற்றுதல் - சொல்லுதல்; ஏற்றம்-அரங்கம் ஏற்றிய; துளைக்கப்படாத-அசைக்க முடியாத; சுருதி - வேதம்.

கட்டளைக் கலித்துறை

85. அறம் ஆம் உயிர்க்கொலை என்னின், மற்று
ஆருயிர் ஓம்புதலோ
மறம் ஆவது? மற்றும் செய்தவர்
எய்துவர் வானம் என்றால்.
பிற மா நரகு அறம் செய்தவர்க்கோ?—
பிண்டி வாமன் மெய்ந்நூல்
திறம் மாறுகொண்ட சின்னூல் திண்ணர்
தாள்! — ஒன்று செப்புமினே.

எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

86. மின்இடை மடவார் குழை தொடர்ந்து அகன்று
விடம்தரு படை விழிக்கு உடைந்து
வெந்நிடுமவர்கள் வீரரேல், உலகில்
வீரர் அல்லாதவர் உளரே—
கொன்னுடை நெடுவேல் அரசரும் அமர
குலமும் நின்அடிமுதல் வணங்கி,
நின்னுடை அடியே அருள் எனஇருந்த
நிமலனே! நீ அலாவிடினே?

கலி விருத்தம்

87. விட்டு அகல்வதே கருமம்—வெய்ய வினைகாள்!—முன்பு
கட்டு அழலின் நும்குலம் அடங்க மடிய, கார்
மட்டு அவிழும் மாமலரின் வந்தவரதர்க்கு என்
இட்டம் இடம் ஆயினது; இனித் தொடர்வுஇலனே.

---

85 மறம்--பாவம்; வானம்-சுவர்க்கம்; மெய் நூல்-உண்மை விளக்கும் பரமாகமம்; மாறு-மாறுபாடு; சின்னூல் திண்ணர்காள்-அற்ப நூலின்கண் உறுதியுடையவரே; விளி; ஒன்று-ஒரு துணிவு; செப்புமின்-சொல்லுங்கள்.

86 மின்-மின்னல்; குழை-குண்டலம்; விடம்தரு-நஞ்சைப் பொருந்திய; படை-வாள்; வெந்நிடுபவர்கள்-முதுகுகாட்டி ஓடுபவர்கள்; கொன்-அச்சம் அமர குலம்-தேவர்களுடைய கூட்டம்; நிமலன்-நிர்மலன்.

87 கருமம்-காரியம்; கட்டு அழல்-மிகுந்த நெருப்பு; மடிய-அழிய; கெட; மட்டு-தேன்;வரதர்-வரம் அருளும் அருகர்; இட்டம்-அன்பு.

88. தொடர்படு சடையுடன் இருந்து தோகையர்க்கு
இடர்படு மனத்தவர் இறைமை கேட்பரோ—
படர்படு கதிப்பெயர்ப் பவ்வம் நான்வையும்
திடர்பட வெகுண்டவர்க்கு உரிய செல்வரே?

அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

89. செல்வர் என்று தாம் தம்மைத்
தேறி, கல்வித் திருவுடைய
மல்லல் மதியோர் வறுமையைக் கண்டு
இகழும் மடவார்பால் அணுகோம்;—
அல்லல் வினை வெம்கலி கடிந்திட்டு
அகிலம் புரக்கும் தனிச் செங்கோல்
தொல்லை மறைநாயகன் தருமச்
சுடர் மாமணி கைக்கொண்டோமே.

ஆசிரிய விருத்தம்

90. கொண்டல் வண்ணனை, பண்ணவர் தலைவனை,
கொலைகடிந்து உயிர் ஓம்பும்
கொற்ற நேமிஅம் கடவுளை, மகரவேல்
கொடியவன் தனைக் காய்ந்து
தொண்டர் சிந்தையில் துளிபுநல் மதிஎனத்
தோன்று தண் சுடரோனை,
தூய நான்மறைத் தலைவனை, அறிவனைத்
தொழாதவர் — தொலையாத

88 தோகையர்-மாதர்; இடர்படுதல்-துன்பப்படுதல்; இறைமை-தலைமை; சுவாமித்துவம்; படர்படு-பரவிய; பவ்வம்-கடல்; திடர் பட-மேடாக; வெகுண்டவர்க்கு உரிய செல்வர் - கோபித்த அருகருக்கு உரிமை என்னும் செல்வத்தையுடைய சாதுக்கள்.

89 தேறுதல்-தெளிதல்; மல்லல்-வளப்பம்; மதி - அறிவு; மடவார்-பேதைமையுடையவர்; அல்லல்-துன்பம்; கலி-வருமை; அகிலம்-எல்லாம்; புரக்கும்-காக்கும்; தனி-ஒப்பற்ற; செங்கோல்-ஆணை தொல்லை-பழமை; நாயகன் - அருகபரமன்; மணி-இரத்தின திரயம்

90 கொண்டல்-மேகம்; பண்ணவர்-கடவுளர்; கொற்றம் - வெற்றி; நேமிஅம்கடவுள்-தருமசக்காத்தையுடைய அழகிய சுவாமி; மகரம்-மகரமீன்; கொடியவன்-கொடியையுடைய மன்மதன்; நல்மதி-நல்புத்தி; தன்சுடரோன் - குளிர்ச்சி பொருந்திய சந்திரன்;

சண்ட வெம்துயர் நரகினில், வெருவுறு
விலங்கினில், பசியாலே
தளர்ந்து நல்அறிவுஇழந்த மாவிடத்தினில்
தாழ்ந்து, இனிவரும் பேர்அப்
பண்டை வல்வினைப் பெரும்பகை துரந்திடத்
துரந்திடத் தடுமாறிப்
பரிவு கொண்டுஒரு நிலையிலர் வருந்துவர்;
வருந்திலர், பணிவாரே.

களி

91. பண்டு அயன்தலை மண்டையில் திருமால அரற்கு
நிறைத்திடும்
பழைய மந்திரம் அன்று; மந்திர யானம் ஓதிய
போதியான்
உண்ட மந்திரம் அன்று; வேதியர் வேதமந்திரம் ஓதிநின்று
உண்ணும் மந்திரம் அன்று;—என் நாவிடை நண்ணும்
மந்திரம்—மந்திரித்து
அண்டர்தம்பதி கண்கள் ஆயிரமும் கரங்களும் ஆடநின்று
ஆடி நெஞ்சுகளிப்ப, வஞ்சம்ஒளிப்ப, ஐம்பெரும்
நூறுவாய்க்
கொண்ட மந்திரம், எமக்கு அனந்த சுகத்தையே
தருமந்திரம்
கொற்ற முக்குடை நற்றவன் தமர்கூறும் மந்திரம்
அஞ்சுமே.

---

அறிவன்-ஞானி; சண்ட வெம்துயர்-மிகுந்த வெப்பமாகிய துன்பம்; வெருவுறுதல் - பயப்படுதல்; தாழ்ந்து - பிறந்து; பேர்-பெரிய-மிகுந்த; வினைப்பெரும்பகை-தீவினையாகிய பெரிய பகைவன்; துரந்திடத் துரந்திட-செலுத்தச் செலுத்த; பரிவு-துன்பம்.

91 அயன்-பிரமன்; தலை மண்டை-தலையோடு; மால்-திருமால்; அரன்-சிவன்; மந்திரம்-கள்; விமானம்; யானம்-விதி; போதியான்-அரச நிழலையுடைய புத்தன்; நாவிடைநண்ணும் மந்திரம்-நாவினிடத்துப் பொருந்திய மந்திரம்; அண்டர்தம்பதி-தேவர்களின் தலைவனான இந்திரன்; களிப்ப-மகிழ; வஞ்சம்-கபடம் ஒளிப்ப-மறைய; ஐம்பெரு நூறுவாய்-ஐந்நூறுவாய்; நற்றவன் தமர்-அருகன் அடியார்; மந்திரம் அஞ்சு-பஞ்சமந்திரம்.

எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

92. அஞ்சன நெடுங்கயல் கொடுங்குழை நெருக்கும்
ஆனன அரம்பையர்கள் ஆயிரவர் ஆடும்
கஞ்ச மலர் ஆயிரம் மருங்குடைய தெய்வக்
காமர் நளினத்து அமரர் கைதொழ நடந்தாய்!
வெஞ்சின மடங்கலொடு குஞ்சரமும் நண்பாய்
மேவி ஒழுகப்புவனி காவல்புரி வீரா!
நெஞ்சம் நிறைவல் அரண் முருங்க ஓர் அனங்கன்
நின்று மலையா நிலைமை என்று பெறுவேனே.

ஆசிரிய விருத்தம்

93. பெறுவது எண்திசை கைதொழ அருளறம்
ஒரு தனிச் செங்கோலால்
பிறங்கு ஏழுலகு ஒருங்குடன் ஆள்வதுஓர்
பெருமையைப் பெறாது, இங்கு
மறுவரும் பெருந்துயர் தரும் வினைப் பழம்—
பகைவர் கை அகப்பட்டு
வருந்துகின்றது, உன் திருந்தடி நினைகுவது
அருமையின் ; — வெறி வீச,
அறுபதம் தொடர்ந்து எழுநரம்பு எனமுரல்
இசை குமுகும் என்ன
அலங்கு தண் மதுத்திவலையொடு இழிதரு
மலர் மழை வலயத்துள்
உறுவர் வந்தனை செய இருந்தருளிய
உம்பர் நாயகனே! என்
உள்ள மாமலர் மிசையினும் ஒருபொழுது
உலா எழுந்தருள்வாயே.

---

92 அஞ்சனம்-மை; கயல்-கெண்டை போன்றகண்; கொடுங்குழை-கனமான குண்டலம்; ஆனனம்-முகம்; அரம்பையர்-தெய்வமாதர்; கஞ்சமலர்-தாமரைமலர்; மருங்கு-பக்கம்; காமர் நளினம்-அழகிய தாமரைப்பூ; மடங்கல்-சிங்காரம்; குஞ்சரம்-யானை; புவனி-உலகம் நிறை-கற்பு; முருங்க-அழிய; அனங்கன்-மன்மதன் மலையா நிலைமை-சண்டை பண்ணாத நிலையான தன்மை.

93 அருளறம்-அருளாகிய தருமம்; செங்கோல் - ஆக்கினை; பிறங்குதல்-விளங்குதல்; மறு-குற்றம்; வெறி-வாசனை; அறுபதம்-வண்டு; ஏழுநரம்பு-சத்தசுரம்; முரல்தல்-சப்தித்தல்; குமுகும்-ஒலிக்குறிப்பு; அலங்குதல்-அசைதல்; மதுத்திவலை-தேன்துளி; வலயம்-வட்டம்; உறுவர்-முனிவர்.

94. அருவினை விடும்;-பகவர், சித்தர்கள்
ஒரு துறவு தந்தருள் உத்தமர்,
சுருதிகள் பயந்து அருள்செய் சுத்தர்கள்;
திருமுனிவர் தங்கள் பெயர் செப்பவே.

கலித்தாழிசை

95. பல் உருவம் எல்லாம் படைத்தோனுக்கு எட்டாத
எல் உருவாய் நீண்ட எழில் உருவம் யாது அரோ?
எல் உருவாய் நீண்ட எழில் உருவம் முக்குடைக்கீழ்த்
தொல் உலகம் மூன்றும் தொழச் சூழ்வினை என்னும்
வல் இருள் துறந்திடுவது அன்றே.

சந்த விருத்தம்

96. இடுகு இடை தளர வார் செற்றன
இனையன, இளையர் தோள் வெற்றமும்
இதயமும் நிறையும் ஓடப் பொருது
எறிவன, முளரி நாள்-மொட்டினை

---

94 பகவர்-அருகர்;உத்தமர்-ஆசாரியர்; சுருதிகள்-வேதங்கள்;சுத்தர்கள்-உபாத்தியாயர்கள்; திருமுனிவர்- சித்தித் திருவையுடைய சாதுக்கள்.

95 படைத்தல்-எடுத்தல், பெறுதல்; எல்-பிரகாசம்; எழில் உருவம் அழகிய உருவம்; துறந்திடுவது-ஓட்டுவது.

96 இடுகு-சிறுகிய; வார்-கச்சு; இனையன-இவைகள்; இளையர்-இளைஞர்; வெற்றம்-வெற்றி; இதயம்-மனம்; நிறை-கற்பு; பொருது எறிவன-மோதியடிப்பன; முளரி-தாமரை;நாள்-மொட்டு அன்றலரும் முகை; நச்சு-நஞ்சு, விடம்; அயில்-வேல்; பரசி-துதித்து;மால்- மயக்கம்; விட்டனம்-விட்டோம்; இவுளி-குதிரை; கால்-காற்று; முரிதிரை - உடையும் அலை; உவரி-சமுத்திரம்; இகல்-போர்; முறுகுதல்-மிகுதல்; தெறு கறுவு-கொல்லுகின்ற

அடுவன, இவை எனா நச்சு எழில்
அயில் விழி மயில் அனார் கச்சு அணி
அணி முலை பரசி, மால் உற்று, உளம்
அலமரு செயல் எலாம் வீட்டனம்-

முடுகு இயல் இவுளி, தேர், வெற்பு உறழ்
முரண் இபம், மறவர், கால் செற்றது ஓர்
முரிதிரை உவரிபோல் மொய்த்தது இகல்
முறுகு தொறு ஒழுகு சோரிப் புனல்

கடுகிய கதிகள் ஆகத் தெறு
கறுவு கொடு அமர் செயாது ஒத்து எழு
கருணை கொடு உலகம் ஆள் கொற்றவர்
கடி மலர் நடவு தாஇ பற்றியே.

அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

97, பற்றற்றவர்கள் வந்து உன்னைப்
பற்றில், அவர்கள் பற்று அற்றே
நிற்றற்கு இயைந்து, பற்றாது
நின்றாய்; இதுவும் நெறி ஆமோ ?

கொற்றக் கவிகை ஒரு மூன்றும்
குளிர் வெண் திங்கள் நிலா எறிக்கும்
முற்றத்து அமரர் முடிகள் வெயில்
எறிக்கும் எயிலாய் ! மொழியாயே.

---

பகை; அமர் செயாது-யுத்தம் பண்ணாமல்; கொற்றவர்-அருக பரமர்; கடி-வாசனை; நடவுதாள்-நடத்தலைச் செய்யும் பாதம்.

97 கவிகை-குடை; நிலா எறிக்கும்-ஒளி வீசும்; வெயில் எறிக்கும்-இளஞ்சூரியன் போல விளங்கும்; எயிலாய்-மும்மதியை யுடையவனே.

வெண்பா

98. மொழிவழி வாராத மூர்க்கர் நிரையப்
பழிவரு வெஞ்சிறையில் பட்டார் - மொழிவழி
வந்தார்கள் வானநாடு ஆள்கின்றார்; அண்ணதோ
எந்தாய் வேந்து ஆகும் இயல்பு.

எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

99. இயல்பின் ஆம் நிலம், நீர், தீ, கால், ஆகாயம்,
இரவி, மதி, இயமானன் ஆகி நின்ற
மயல் இலா எண் மூர்த்தி, அனந்த மூர்த்தி,
வரம்பு இகந்த மாசு இலா ஞான மூர்த்தி.

செயலின் ஆம் வினை மூர்த்தியவர்கள் சிந்த
மும்மூர்த்தியாய் உயர்ந்த தெய்வ மூர்த்தி
பெயரின் ஆம் ஆயிரத்து எண்மூர்த்தி அல்லால்
பிற மூர்த்திகளை என்னோ பேணும் ஆறே.

---

98 மொழி-திவ்யத் தொனி;பழி-நிந்தை; வெஞ்சிறை-கொடிய நரக மாகிய சிறைச்சாலை; வான நாடு-கற்பங்கள்;வேந்து ஆகும் இயல்பு-அருகன் ஆகும் இயல்பு.

99 கால்-காற்று; இரவி-சூரியன்; மதி-சந்திரன்; இயமானன்-சிவன் மயல்-மயக்கம்; வரம்பு இகந்த-அளவு நீங்கிய; வினை மூர்த்தி யவர்கள்-வினை என்னும் மூர்த்தத்தையுடை யவர்கள்; பேணுதல் -ஆதரித்தல்.

## ஆசிரிய விருத்தம்

100. பேணும் தகைய வானின்மிசை
யோனிமிசை ஓர் ஆயிரத்தின்
பெருகும் தொண்ணூற்று ஏழினொடு
மருவும் இருபத்தொரு மூன்றும்,

காணும் தகைய மண்ணினிடை
நானூற்று ஐம்பத்து ஓர்எட்டும்,
ககன பவணத்து ஏழ் கோடி
மிசை ஒன்பதிற்று எட்டு இலக்கமும், சீர்

மாணும் தகைய பஞ்சவர்கள்,
வயங்கும் இருநால் வியந்தரர்கள்,
மருவும் விமானத்து எண் இலவும்
ஆகி, வட பொற்குன்று என்னச்

சேண் நின்று இலகும் சினகரமும்,
செயற்கை வரம்புஇல் கோயில்களும்
செம்பொன் எயிலும் உடையார் - என்
சிந்தை அமர்வது அறியேனே,

101, அறிவன் காதல் பெருங்கிழத்தி,
அகிலம் ஈன்ற தாய், என்றும்
அழியாக் கன்னி, அறம் வளர்த்த
அன்னை, ஆறு சமயத்தின்

---

100 வானின் மிசை-கற்பங்களில்; கனகம்-பொன்; பவணம்-பவண லோகம்; ஒன்பதிற்று எட்டு எழுபத்திரண்டு; பஞ்சவர்கள்-சோதிடர்கள்; இருநால் வியந்தரர்-எண்மராகிய வியந்தரர்கள்; எண் இல்-கணக்கில்லாதன; பொற்குன்று-மேரு; சினகரம்-கோயில்; வரம்பு-அளவு; செம்பொன் எயில்-சமவசரணம்.

101 அறிவன் - அருக பரமன்: கிழத்தி - உரிமையானவள்; அகிலம்-எல்லாம்; வளர்த்த அன்னை - செவிலித்தாய்; பிரிவு - பிறங்குதல் - விளங்குதல் ; புவனம் - பூமி; பிறழா-மாறுபடாத

சம்பிரதம்

102 பொங்கு நாவலம் பொழிலினைச் சிமிழினுள்
அடக்குவன்; வடமேருப்
பொருப்பை ஊசியின் துளையிடைப் போக்குவன்;
நோக்கில் இப் புவனத்துள்

எங்கும் யாவையும் செயும்செயும் விச்சைகள்
இவைசில பொருளோ?-மற்று
ஏழு லோகமும் அலோகமும் தம்முளே
அடக்கி நின்று, அடங்காது

கொங்கு வீசு செம் பங்கயப் பூமிசை
நடந்தவர் தடந்தாள் உட்
கொண்ட தொண்டர்தம் அருளினால் வந்தது
குறிக் கொள்மின்; குபதத்தே

---

102 நாவலம் பொழில் - சம்புத்தீபம்; சிமிழ் - கரண்டகம்; பரணி; விச்சை - வித்தை; பொருளோ - ஒருபொருட்டோ; கொங்கு- வாசனை; தடந்தாள்-பெருமை பொருந்திய பாதம்; உள்-மனம்; அருளினால் வந்தது-கிருபையினாலே வந்த உபதேசம்; குறிக் கொள்மின் - அறிந்து கொள்ளுங்கள்; குபதம் - குச்சித பதம்; இழிநிலை; பாதகத்தோர் கணம்-பாவிகளான புத்தர்களுடைய கூட்டம்; அறம்-சின தருமம்.

தங்கும் ஆர்வம் மிக்குடைய அப்பாதகத்
தோர் கணம் முதலாகும்
சமய வாதிகள் செவியினில் அறம்புகச்
சாற்றுவன் காணீரே.

எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

103 காணும் கண்உள வேனும், கண்கொடு
காணார், கடைதபு ஞானத்தார்;
பேணும் பொருள்உள வேனும், புலனவை
துவ்வார், பெருகிய போகத்தார்;

பூணும் புரவியும் ஏறும் பாகனும்
ஒழியப் புண்டரிகத் திண்தேர்
சேண் நின்று அடியிணை தோயா வகைதனி
ஊர்வார் செயல் இவை தெரியாவே.

---

103 கடைதபு ஞானம்-முடிவில்லாத ஞானம்; போகத்தார்-சுகத்தையுடையவர்; புலன்-விடயங்கள்; துவ்வார்-அனுபவியார்; புரவி - குதிரை; ஒழிய - நீங்க; புண்டரிகம் - தாமரைமலர்; சேண் - ஆகாயம்; ஊர்வார் - நடத்துவார்.

## மதங்கு

### சந்த விருத்தம்

104 தெரிந்த அறமழை பொழிந்த அருள்முகில்,
சிவந்த மரைமலர் சுமந்ததாள்
விரிஞ்சன் அருமறை புகழ்ந்து நடன்நவில்
மதங்கி நடன்நவில் தடங்கண்மால்

புரிந்து, கொலைகளவு இயைந்து, புவியுடன்
மலைந்து, கருமையொடு அகன்று, நேர்
சரிந்து தவம்விழ நிமிர்ந்து பிறழ்வன,
தழங்கு பரசுதல் நிகர்த்தவே.

105 நிகரில் முனிவர், அரசர், கந்தியர்,
நிரைசெய் பவணர், அவர்தம் மங்கையர்,
நெறி கொள் சுடரின் உலகு பஞ்சவர்,
நெடிய விழியின் இவர்கள் வஞ்சியர்,

---

104 முகில் - மேகம்; மரைமலர் - தாமரை மலர்; விரிஞ்சன்-பரமேட்டியாகிய அருகன்; நடன் நவில்தல் - நாட்டியத்தைச் செய்தல்; மதங்கி - மதங்கப்பெண்; மால் - ஆசை; மலைதல் - சண்டை செய்தல்; கருமை - கருநிறம்; சரிதல் - சோர்தல்; நிமிர்ந்து பிறழ்வன - நீண்டு பிரகாசிப்பன; தழங்குதல் - ஒலித்தல்; பரசுதல் - துதித்தல்.

105 நிகர்-ஒப்பு; கந்தியர்-ஆரியாங்கனைகள்; மங்கையர்-நாயகிகள்-நெறி கொள் சுடர்-ஆகாய வீதியைக் கொண்ட ஒளி; பஞ்சவர்;

சந்தவிருத்தம்

107. தனம் சுமந்து அலமரும் இடையவர்
தடங்கணின் கடை தெற மெலியலர்;
சரண் புகுந்து அடி தொழின், அலர்தரு
சரம் துரந்து, எதிர் பொரு பகையிலர்

மணம் சலம்படு கழுதொடு பிண-
வனம் தொறும் படர்தரு மயல் இலர்;
வனம் தரும்பதி தொறும் இடுபலி
வருந்தி உண்டு அலமரு பசி இலர்;

சினம் செய் வன் பகை வரும் என வலி
சிதைந்து, வெம் படை பல சுமவலர்;
சிரங்கள் எண் திசை நிரைகொள, வரை
செயும் புயம் பல கொடு திரியலர்;

அனந்தர் கொண்டு அமளியின் மிசை, அறிவு
அழிந்து கண் படுவது ஓர் அசைவு இலர்;—
அகண்டம் அங்கையின் மணி என உணர்
அபங்கர், சங்கரர், அநகரே.

---

107. தனம்-முலை; அலமருதல் - வருந்துதல்; கணின்கடை-கடைக்கண்; தெற-வருத்த; மெலியலர்-இளையாதவர்; சரண்புகுதல்-அடைக்கலமடைதல்; அலர்தருசரம்-மிகுந்த; பாணங்கள்; சலம்படு கழுது--சலனப்படும் பேய்; பிணவனம்-சுடலை; மயலிலர்-மயக்கமில்லாதவர்; வனம்-அழகு; பதி-நாடு; வலி-வலிமை பலம்; படை-ஆயுதம்; சுமவலர்-தாங்காதவர்; சிரங்கள்-தலைகள் வரை-மலை; அனந்தர்-நித்திரை; அமளி-படுக்கை; கண்படுதல்-உறங்குதல்; அசைவுஇலர்-சோர்வு இல்லாதவர்; அகண்டம்-சகலரும்,எல்லாம்; அங்கையின் மணி-உள்ளங்கையில் இருக்கின்ற இரத்தினம்; அபங்கர்-பங்கமில்லாதவர்; சங்கரர்-சுகத்தைப் பண்ணுபவர்; சினர்வினையைச் செயித்தவர்; அநகர்-பாவ மில்லாதவர்.

வெண்பா

108. அனகன், அமலன், அலர் கமலம் ஏந்தும்
தன கமல பாதங்கள் தந்து, நின கமலம்
நீக்கும் ஆறு என்றக்கால்,—நெஞ்சமே!—வல்வினையை
ஆக்குமாறு என்னோ, அகன்று?

வஞ்சிப்பா

109. அகன் தலை விசும்பு தொட,
நிவந்து உயர் சிமையம் தூங்கும்
கல் பொரு கறங்கு அருவி
வெல் கொடியின் மிசை நுடங்கும்
போக்கு அறு சுடர் வெள்ளி

மாக்கயிலை மிசை நாப்பண்—
பொன் இயல் புகழ் நிலத்துப்
பன்னிரு புகைப் பரப்பின்
முழு மணியின் முறை வகுத்த
எழு நிலத்தின் மிசை அரங்கின்,
நாற்றிசை மணிப் படுகால்
மேக்கு உயர் நெடு வீதித்
துணி மான இருள் சீக்கும்
மணி மானத் தூணத்து,
கண்டவர் கருத்து அளவாம்

---

108. தன-தன்னுடைய; நின கமலம்-உன்னுடைய வினை; ஆறு-நெறி; ஈண்டு துறவறம்; என்னோ-என்ன காரணம்; அகன்று-நீங்கி;

109. தலை-இடம்; விசும்பு-ஆகாயம்; நிவத்தல்-மேல் நோக்குதல்; சிமையம்-சிகரம்; தூங்கும் கல்-தங்கியுள்ள கல்; கறங்குதல்-ஒலித்தல்; வெல்கொடி-வெற்றிக்கொடி; நுடங்கும்-அமையும்; போக்கு-குற்றம்; கயிலை-கயிலாய மலை; நாப்பண்-நடு; நிலம்-பூமி; புகை-யோசனை; பரப்பு-அகலம்; முழுமணி-இந்திர நீல மணி; அரங்கின்-சபைபோல; கால்-தூண்; மேக்கு-மேல்; மாண இருள்-அபிமானம் என்னும் அஞ்ஞான இருள்; சீக்கும்-போக்கும் மானத்தூணம்-மானஸ்தம்பம்; கிடங்கின்-அகழியில்;அடர் பசும்

வண்டு சூழ் மலர்க் கிடங்கின்,
அடர் பைம் பொன் அவிர் மணியின்
சுடர் மாலைத் தோரணத்து,
எண் திசைக் கிழவர் முதல்
ஒண் சுடரோடு உரகர்க்கும்

சேய் உயர் நெடு வரையின்
போய் இலகு பொன் தூபை
நெடுநிலை வியன் வாயில்
கொடி நிரைத்த அருகுமிசைக்
கருவியோடு இசைத் தேனும்

செரு அறியா ஒரு மும்மை
மின் இவர் மணிச் சூட்டில்
பொன் எயிற் புடை அரங்கின்
மழை தவழ் பல் மாடத்து
இழை வளர் முலை மகளிர்

பாடலின் பல பாணி
ஆடலின் கன சாலை
பல் பிறப்பு வெளிப்படுக்கும்
புள் இமிழ் பூம் பொய்கை
கொய் பூவின் கொடிப் பந்தரில்

செய்குன்றில், செழும் பொன் இயல்
பல் காவில் பளிக்கறையில்
எல் ஒளி பல் பீடத்து
இலங்கு மணிக்கால் ஆயிரம்
வயங்கு மணி மண்டபத்து

---

பொன்-தகடுபடச்செய்த பசுமையாகிய பொன்; மாலை-ஒழுங்கு தோரணம்-தொங்கல்; சுடர்-சோதிடர்; உரகர்-பவணர்; தூபை-ஸ்தூபி; நிரைத்த-வரிசையாகக் கட்டிய; கருவியொடு-கூட்டத்துடன்; தேன்-வண்டுகள்; செரு-யுத்தம்; சூடு-சிகரம்; பொன்னெயில்-பொன்னாலாகிய மும்மதில்; மழை-மேகம்; இழை-ஆபரணம்; பாணி-கை; கன சாலை-பெரிய சாலை: இமிழ்தல்-சந்தித்தல்; கா-சோலை; பளிக்கறை-பளிங்கினால் செய்த வீடுகள்; எல்-சூரியன்; பீடம்-மேகலாபீடம்; மணி-நவமணி; மண்டபம்-ஆயிரம் கால்களுடன் விளங்கும் இலக்குமி மண்டபம்:

அருமறை முதல்வர்
தொழுது அறிந்து எடுத்த
தோல் வேதப் பேரொலியில்
பல் பலி நல் வேள்வியில்
தேம் கமழ் வெறிகலந்து

கான்று கமழ் பூம் பொய்கை
மண்ணோடு விண் புதைய
விண்ணோடு மண் பொதுளி,
தொடியோடு தொடி தேய்ப்ப
முடியோடு முடி நெருக்க

எழுதரு பொன் துகள் உவப்பின்
அவிழ்தரு கண்ணீர் அவிப்ப
ஏத்தொலியின் இசையொலியின்
கூத்தொலியின் முழவு ஒலியின்
கார்க்கடல் உடன் கலந்த

தீர்த்தம் மலி திருமுன்றில்
விசும்பு மாசு துடைப்பன்ன
பசும் பொன்னின் பதாகை நிரை
நீர் திகழ் நெடு வரையில்
சீர் திகழ் செழுங் கோயில்

---

அருமறை முதல்வர் - அரிதாகிய கணதரர்கள்; பல்பலி -எட்டு விதமான அருச்சனை; வெறி-வாசனை; புதைய-மறைய; விண்-விண்ணவர்; மண்-மண்ணவர்; பொதுளி-நெருங்கி; தொடி-வாகுவலையம்; முடி-கிரீடம்; துகள்-பொடி; உவப்பு-மகிழ்ச்சி அவிப்ப-தணிக்க; ஏத்தொலி-ஜயகோஷம்; இசையொலி-பாட்டின் ஒலி; தீர்த்தம்-விழவு;

தத்து ஒளிப் பல் தாமச்
சித்திர மணிக்கூடத்து,
பைந்துணர்ப் பல்போதின்
அம்தளிர் அசோகின்கீழ்
வண்தரளத் தண் கோதைக்

கந்தகுடி மணி அரங்கில்
சுரி உளைப் பேழ்வாய
அரி சுமந்த மணி அணைமிசை
ஒண்கதிர் மதிமூன்றின்
வெண்குடை மிசை நிழற்ற

எழுசுடர் மண்டிலத்தின்
ஒருசுடர் மின் இலங்க,
தண் கதிர் நிலாக் கற்றை
வெண் கவரி நெடு வெள்ளம்
மென்காலோடு இருமருங்கும்

பொங்குபு புடை பெயர,
தேன் துவலை அளிமுழக்கில்
பூம் புயல்கள் கால் வீழ்ப்ப,
அந்தர மழை உருமின்
துந்துபி சூழ்ந்து ஒலிப்ப

---

முன்றில்-முன்வாயில்; பதாகை-கொடி; தத்துஒளி-விட்டுவிட்டு விளங்குதல்; துணர்-கொத்து; போது-மாலை; கோதை-மாலை; கந்தகுடி மணி அரங்கு-கந்தகுடி என்னும் அழகிய இடம்; பேழ் வாய்-பிளந்த வாய்; வெண்குடை-வெண்மையாகிய முக்குடை; நிழற்ற-நிழல் செய்ய; எழுசுடர் மண்டிலம்-உதிக்கின்ற சூரிய மண்டிலம்; ஒருசுடர்-ஒப்பற்ற பிரபாவலயம்; மின்-மின்னல்; வெண்கவரி-வெண்ணிறச் சாமரம்; மென்கால்-மெல்லியகாற்று; புடைபெயர-பக்கங்களிலே அசைய; பூம்புயல்-புட்ப மேகம்; கால் வீழ்தல்-பெய்தல்; உரும்-இடி; இருட்பகை-சூரியன்;

இருட்பகையின் திசை நான்கின்
அருள் - திகிரி வினை அகற்ற,
பெருந் தொடர்ப் பிறப்பு எறியும்
அருந்தவத்து - அரசர்முதல்
மாறுஇகந்த விலங்கு இறுதி

ஆறு - இரண்டு கணம் சூழ,
செம்மையின் திரியாது
வெம்மைதிர் வெயில் மண்டிலம்
பல்கோடி கதிர ஒளியின்
ஒல்காத உயர் வரையின்

ஆயிரத்தெட்டு இலக்கணத்தோடு
சேய் இலகு திருமூர்த்தி!
அலகு இறந்த ஒளி மூன்றின்
உலகு அனைத்தும் உடன் விழுங்கி,
கடை இகந்த காட்சியோடு

கடை இகந்த வால் அறிவின்,
ஊறுஇகந்த இன்பத்தின்,
மாறுஇகந்த பெரு வலியின்,
ஓவாத பெருந்திருவின்
கோ ஆகி வீற்றிருந்து

---

அருள் திகிரி-தருமசக்கரம்; தவத்து அரசர் - தவ சிரேட்டர்கள்; மாறு-பகை; வெம்மை - வெப்பம்; கதிர் - சூரியன்; ஒல்காத உயர்வரை - அசையாத உயர்ந்த மலை; திருமூர்த்தி - அழகிய உருவத்தையுடையவனே; அலகு-அளவு, எண்ணிக்கை; கடை இகந்த-முடிவு இல்லாத; அறிவு-ஞானம்; வலி-வீரியம்; கோ-சுவாமி; மூவாறு மொழிப்பொதுமை - பதினெண் மொழிகளுக்கும்

ஓர் ஆறு முதற்பொருளின்
மூவாறு மொழிப் பொதுமை
ஒரு மொழியின் உயிர் பரந்த
மருள் மருவா அருள் முதல்வனை !
மூவிலை ஒரு நெடுவேலின்

மேவாத வினை அவுணர்
குன்றுபட நூழிலாட்டி
வென்றுஅட்ட விறல் வெகுளியை !
மூவெயின் முரண் முருக்கி
மூவர் சரண் அடைய நின்றனை !

சுருப்பு நாண் வில்லிபட
நெருப்பு உமிழ் நெடு நோக்கினை !
கோள் வலிய கொடுங்கூற்றைத்
தாள் வலியின் விழ உதைத்தனை !
பரிவுஇல் கேவலக் கிழத்தி

பிரிவு இல்லா ஒரு பாகனை !
ஆன்ற மெய் அறம் வளர்க்கும்
மூன்று கண் முனித் தலைவனை !
ஆல நெடுநிழல் அமர்ந்தனை !
காலம் மூன்றும் உடன் அளந்தனை !

தாழ்சடை முடிச் சென்னிக்
காசுஅறு பொன்எயில் கடவுளை !
மன்னிய பேர் உலகு அனைத்தும்
நின்னுள்ளே நீ ஒடுக்கினை ;
நின்னின்று நீ விரித்தனை ;

---

பொதுமையாக மாகத பாஷையினாலே ; முதல்வனை - ஆதியை ; நூழிலாட்டி - பொடிபடுத்து ; மூவர் - மூவுலக இந்திரர் ; சுருப்பு -

நின் அருளின் நீ காத்தனை
என ஆங்கு—
ஆதி பகவனை அருகனை
மா துயர் நீங்க வழுத்துவம் பலவே.

வெண்பா

110 பல ஆம் பருவம் எல்லாம் பார் அளிக்கும் காலை
உலவா ஒன்றாக உரைத்தார்—பலர் எனினும்
காவலர் ஆம் தேவர் ஒருவரே; ஆங்கு அவர் தாள்-
பூ அலர் ஆம் நாம் சூடும் பூ.

(இரண்டாம் தொகுதி முற்றும்.)

卐

---

வண்டு; கேவலக் கிழத்தி-முக்திநாயகி; மூன்று கண் முனி-மூன்று கண்ணையுடைய முனிவர்; வழுத்துவம்-துதிப்போம்.

110 பருவம்-உத்ஸர்ப்பிணி, அவஸர்ப்பிணி என்னும் காலம்; உலவா-மாறுபடாமல்; தாள்-பூ, பாதகமலம்.

# ஆசாரியர் குந்தகுந்தர் கல்வி நிறுவன வெளியீடுகள்.

| | | |
|---|---|---|
| 1 | சாமாயிக பாடம் | 1-50 |
| 2 | சமணக்கோட்பாட்டில் மெய்ப்பொருள் இயல்பு-1 | 9-00 |
| 3 | சமணக்கோட்பாட்டில் மெய்ப்பொருள் இயல்பு-2 | 8-00 |
| 4 | ஆகம ஞான மலர்-1 | 2-00 |
| 5 | ஆகம ஞான மலர்-2 | 2-00 |
| 6 | ஆகம ஞான மலர்-3 | 2-00 |
| 7 | ஆகம ஞான மலர்-4 | 2-00 |
| 8 | ஆகம ஞான மலர்-5 | 2-00 |
| 9 | ஆகம ஞான மலர்-6 | 2-00 |
| 10 | அருங்கலச் செப்பு | 2-00 |
| 11 | உண்மையான ஜைன தருமம் | 12-00 |
| 12 | அருகன் துதி மாலை-1 | 8-00 |
| 13 | அருகன் துதி மாலை-2 | 15-00 |
| 14 | சமாதி சதகம் | 15-00 |
| 15 | ஆன்மீய வினா-விடை | 10-00 |
| 16 | ஜிந ஸ்தோத்ரம் | 12-00 |